விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

# வலம்புரி
Valampurii

Registered as a Newspaper in Srilanka

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 03 ஞாயிற்றுக்கிழமை (17.05.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 149

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு முல்லைத்தீவு நீதிமன்றம் தடை!

(முல்லைத்தீவு)

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நாளை திங்கட் கிழமை முள்ளிவாய்க்காலில் இடம்பெறவிருந்த நினைவேந்தல் நிகழ் விற்கு முல்லைத்தீவு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.**

இந்நிகழ்வு நாளை திங்கட் கிழமை காலை 10 மணியளவில் இடம்பெறவிருந்த நிலையிலேயே இத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு அமைதிக்கு பங்கத்தை ஏற்படுத்தும் என்பதால், அந்த நிகழ்வை தடை செய்ய வேண்டும் என முல்லைத்தீவு பொலிஸார் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இதனையடுத்தே இத்தடை விதிக கப்பட்டுள்ள 24 ஆம் பக்கம் பார்க்க....

## ரவிகரனும் தடுக்கப்பட்டார்

(கொழும்பு)

நேற்றிரவு வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனின் வீட்டுக்கு சென்ற முல்லை பொலிஸார், முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு தடை விதிக்கும் முல்லை நீதிமன்ற உத்தரவை நேரில் கையளித்துள்ளனர்.

இதையடுத்து முல்லைத்தீவு பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியை தொலைபேசியில் தொடர்பு கொண்ட ரவிகரன,

மே 18 அன்று பேரணியோ அலலது ஆர்ப்பாட்டமோ ஒழுங்கு செய்யப்படவில்லை. அமைதியான முறையில் சமய கிரியைகள் உள்ளடக்கிய நினைவேந்துதல் நிகழ்வே ஒழுங்கு 24 ஆம் பக்கம் பார்க்க....

## அனுராதபுரத்திலிருந்து மகிந்த ஆரம்பம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தனது தேர்தல் பிரச்சாரங்களை அநுராதபுரத்திலிருந்து ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாராளுமன்றம் கலைப்பட்ட பின்னர் அநுராதபுரம் ஸ்ரீமகா போதி விகாரைக்கு அருகில் அவர் பிரச்சார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பிரசார நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளை செய்யுமாறு முன்னாள் ஜனாதிபதி தனக்கு நெருக்கமான ஒருவர் மூலம், முன்னாள் வட மத்திய மாகாண முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித்திடம் அறிவித்துள்ளதாக நம்பத்தகுந்த தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொதுத் தேர்தலில் போட்டியிடுவது உறுதி என தெரிவித்துள்ள 24 ஆம் பக்கம் பார்க்க....

## தமிழில் தேசிய கீதம் அதிகாரி மீது தாக்குதல்

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது சிங்கள மாணவர்களினால் தாக்கப்பட்டதாக கூறப்படும் அரச அதிகாரி ஒருவர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார.

செங்கலடி பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தரான பத்தக்குட்டி சுமன் தன்மீது இடம்பெற்ற தாக்குதல் தொடர்பில் ஏறாவூர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

நிகழ்வின் இறுதியில் தமிழ் மொழியில் தேசிய கீதம் ஒலிக்கப்பட்டதன் காரணமாகவே தன் மீது இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்க 24 ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தலின் பின்னர் தேசிய அரசு இல்லை

### நிமால் உறுதி



(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னரும் தேசிய அரசு அமைவதை நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம். கூட்டு அரசுக்கு இனி அவசியம் இல்லை. 24 ஆம் பக்கம் பார்க்க....

## ஆயுத பரல்கள் ஊரெழுவில் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஊரெழு கணேசா வித்தியாசாலைக்கு அண்மையில் கட்டிட வேலைகளில் ஈடுபட்டு கொண்டிருந்தவர்களால் அத்திபாரம் வெட்டும் பொழுது வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்கள் அடங்கிய 4 பிளாஸரிக் பரல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள் என.

இவ்வெடி பொருட்கள் தமிழீழ விடுதலை புலிகளினால் புதைத்து வைக்கப்பட் 24 ஆம் பக்கம் பார்க்க....

## செம்மணியில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

நல்லூர் செம்மணி வீதியில் கண்ணி வெடியகற்றும் நிறுவனத்தின் வாகனமும் பல்சர் ரக மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதில் மோட 24

## காணாமல்போனோர் வைத்தியசாலைகளிலா?

### பதிவேடுகளை ஆராய தீர்மானம்

(கொழும்பு)

காணாமற்போனோர் தொடர்பில் தகவல்களை அறிவதற்காக வைத்தியசாலைகளின் 18,000 பதிவேடுகளை ஆராய்வதற்கு காணாமற்போனோர் தொடர்பிலான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இறுதிக்கட்ட யுத்தம் நடைபெற்ற 2009 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளின் நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டமை தொடர்பான பதிவேடுகளே ஆராயப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் H.W.குணதாஸ தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது காணாமற்போனதாக சந்தேகிக்கப்படுவோர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுக்கொண்டார்களா என்பதை இதன்மூலம் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும் எனவும்,

எவ்வாறாயினும், காணாமற்போனவர்களது உறவினர்கள் ஆணைக்குழுவிற்கு வழங்கியுள்ள பெயர்களையும், வைத்தியசாலை பதிவேடுகளில் உள்ள அறிக்கைகளின் பெயர்களையும் ஒப்பிடுவதில் சிக்கல் உள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் குறிப்பிட்டார்.

நோயாளர்களின் பெயரின் ஒரு பகுதி அல்லது புனைப்பெயர்கள் வைத்திய 24 ஆம் பக்கம் பார்க்க....

## உள்ளே...





**நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு திரும்புகிறவர்கள் விசாரணைகளுக்கு அச்சம்

## அமைச்சர் சுவாமிநாதன் தகவல்



(கொழும்பு)

தமிழகத்தில் வாழ்ந்து வரும் இலங்கை தமிழ் அகதிகள் விசாரணைகளுக்கு அஞ்சுகின்றார்கள் என அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

இந்திய ஆங்கில ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவில் வாழ்ந்து வந்தவர்களுள் 35 வீதமானோரே நாடு திரும்பியுள்ளனர்.

ஒரு இலட்சம் இலங்கையர்கள் தமிழ்நாட்டில் அகதிகளாக வாழ்கின்றார்கள், அவர்களில் பலர் தொழில்வாய்ப்பை பெற்றுள்ளார்கள்.

மேலும் பலருக்கு திருமணமாகி குழந்தைகளும் உள்ளனர். அவர்கள் அனைவரும் இலங்கை திரும்பவில்லை. அனைவரும் நாடு திரும்பிவிட்டதாக கூறுவது மிகப்பெரிய பொய். கடந்த புதன்கிழமை கொழும்பு, கட்டுநாயக்க, பண்டாரநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த அகதிகளிடம் சுமார் ஐந்து மணித்தியாலங்கள் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

அவர்கள் விசாரணைகளுக்கு அஞ்சுகின்றார்கள், நாடு திரும்பியவர்களுக்கு இது ஒரு அடிப்படை பிரச்சினையாகவே காணப்படுகின்றது. இதனால், நாங்கள் விசாரணை காலத்தை குறைத்துக்கொள்ள முயற்சிக்கின்றோம். தமிழகத்தில் உள்ள அகதிகள் மூன்று முகவர் அமைப்புகள் ஊடாக தொடர்ந்து நாடு திரும்பி வருகின்றனர்.

இந்த விடயம் சம்பந்தமாக தமது அமைச்சு, இராணுவம், குடிவரவு திணைக்களம் மற்றும் பொலிஸ் துறையினருடன் நெருக்கமாக பணியாற்றி வருவதாகவும்,

இந்த வேலைத்திட்டம் ஏனைய திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடு திரும்பும் அனைத்து அகதிகளையும் வரவேற்க அரசாங்கம் ஆர்வத்துடன் உள்ளது. வியாழக்கிழமை நாடு திரும்பியவர்கள் இந்திய கடவுச்சீட்டுகளை கொண்டிருந்தனர். இரட்டை குடியுரிமை முறையில் அவர்கள் அனைவரும் நாடு திரும்பியுள்ளனர், அத்துடன் இவர்கள் அனைவரும் இந்த நாட்டை சேர்ந்தவர்கள்.

எதிர்வரும் நாட்களில் நாடு திரும்ப திட்டமிட்டுள்ளவர்கள் அதனை முன்கூட்டியே அறிவிக்குமாறும், அப்போது அவர்கள் நாடு திரும்புவதற்கான வசதிகளை ஏற்பாடு செய்து கொடுக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் தமிழகத்தில் இருந்து நாடு திரும்பிய அகதிகளுக்கு இலங்கையில் சொந்தமான காணிகள் இருப்பின் நேரடியாக அவர்களினால் அக்காணிகளுக்கு செல்ல முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (11)

# எரிபொருள் சிக்கன மரதன் ஜனாதிபதி மைத்திரி பங்கேற்பு



(கொழும்பு)

தேசிய எரிசக்தி பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு மரதன் ஓட்டப்போட்டியை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த வேலைத்திட்டம் நேறறு சுதந்திர சதுக்கத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நாளைய தேசத்திற்காக எரிபொருள் மற்றும் மின்சாரத்தை சேமிப்போம் எனும் தொனிப் பொருளில் ஜவன சக்தி யாத்ரா மரதன் ஓட்டப் போட்டியொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்த ஓட்டப்போட்டியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இணைந்து கொண்டார்.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட 4 கீலோ மீற்றர் வரையிலான இந்த ஓட்டப்போட்டி சுதந்திர சதுக்கத்திலேயே நிறைவு பெற்றது.

மின்சாரத்தையும், எரிபொருளையும் சிக்கனமாக பயன்படுத்துவது தொடர்பாக உறுதிமொழியும் எடுக்கப்பட்டது. (11)

# மகிந்தவை நீதிமன்றில் சந்திக்க தயார்-மங்கள சமரவீர

(மாத்தறை)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடும்ப சொத்து தொடர்பில் தாம் வெளியிட்டுள்ள கருத்து குறித்து நீதிமன்றில் காரணங்களை தெரியப்படுத்த தயார் என வெளிவிவகாரத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறை பிரதேசத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டார்.



முன்னாள் ஜனாதிபதி தமக்கு அனுப்பியுள்ள சத்திய கடிதம் கிடைக்க பெற்றுள்ளதாகவும்,

அதனை மகிழ்ச்சியுடன் ஏற்று கொண்டு முன்னாள் ஜனாதிபதியை நீதிமன்றில் சந்திக்க தாம் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளதாகவும் மங்கள சமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, புலனாய்வு பிரிவுகளில் இருந்து கிடைக்கப் பெற்றுள்ள அறிக்கைகளுக்கு அமைய ராஜபக்ஷ குடும்பத்தின் சொத்து 18 பில்லியன் டொலர் என குறிப்பிட்டிருந்தார்.

இந்த குற்றச்சாட்டு மூலம் தமது கீர்த்தி நாமத்திற்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து 100 கோடி ரூபாய் நட்ட ஈட்டை கோரி முன்னாள் ஜனாதிபதி மங்கள சமரவீரவிற்கு சத்திய கடிதத்தை அனுப்பியிருந்தார்.

குறித்த நட்ட ஈடு 21 நாட்களுக்குள் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரியிருந்தார். (11)

# ஜெனிவாவில் தோற்ற மகிந்த; வடக்கிலும் வெல்லத் தவறினார்

## எஸ்.பி.விளக்கம்



(கொழும்பு)

ஜெனிவா விவகாரத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தார் என முன்னாள் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆட்சி அதிகாரத்தில் இருந்த போது மகிந்த ராஜபக்ஷ ஜெனிவா விவகாரத்தில் தோல்வியடைந்தார்.

மனித உரிமை விவகாரத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் நிலைப்பாட்டுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்போ இணங்கியிருக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

பாரிய மனித உரிமை பிரச்சினைகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் நாடு கடும் அழுத்தங்களை எதிர்நோக்கியது என கண்டியில் அஸ்கிரி பீடாதிபதியை சந்தித்த போது திஸாநாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த நிறைவின் பின்னர் வடக்கு மக்களின் இதயங்களை வென்றெடுக்க தவறியுள்ளதாகத் தெரிவித்துள்ள அவர்,

யுத்தத்தின் மிக முக்கியமான தருணத்தில் ஒத்துழைப்பு வழங்கிய இந்தியாவையும் மகிந்த பகைத்துக் கொண்டதாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் வென்று ஜெனிவா விவகாரத்தில் திடமான தீர்மானத்தை எடுக்கும் திட்டத்தில் மகிந்த ராஜபக்ஷ அவசர தேர்தலை நடத்திய போதிலும் திட்டம் நிறைவேறவில்லை எனவும்,

தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னதாக திஸ்ஸ அத்தநாயக்க சுகாதார அமைச்சராக நியமிக்கப்படுவதனை ராஜபக்ஷ அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் பலர் விரும்பவில்லை எனவும அவர தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆலோசனை வழங்க முயற்சித்த போதிலும், அது பலன ளிக்கவில்லை.ஜெனிவா பிரச்சினைக்கு தீர்வு கண்டிருக்கலாம்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டதன் மூலம் ஜெனிவாசவாலை வெற்றிகொள்ள ஜனாதிபதி மைத்திரிபால முயற்சித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன இந்தியா, ஐரோப்பா மற்றும் அமெரிக்காவின் ஆதரவினை யும் பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பொதுத்தேர்தலில் போட்டியிட உள்ளதாகவும், ஆட்சி அமைக்கத் திட்டமிட்டு உள்ளதாக வும் அவர் குறிப்பிட்டுள்ளார். (11)

## வடக்குக்கான ரயில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

வடக்கு மார்க்கத்திலான ரயில் போக்குவரத்து இன்று அனுராதபுரம் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த மார்க்கத்தில் மதவாச்சி மற்றும் வவுனியா ரயில் நிலையங்களுக்கு இடையில் மேற்கொள்ளப்படவுள்ள அவசர திருத்த வேலைகள் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டது. இதற்கமைய கொழும்பு, கோட்டையில் இருந்து யாழ்ப்பாணம் வரையான குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி ரயில்கள், யாழ்தேவி கடுகதி ரயில், இரவுநேர தபால் ரயில் உள்ளிட்ட சில ரயில்கள் இன்று மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ரயில் சேவைகள் அனுராதபுரம வரை மாத்திரம் முன்னெடுக்கப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (11)


## வேலையாட்கள் தேவை

திருப்பதி வெங்கடேசன் என்டபிறைசஸ் நிறுவனத்தின் சைவ உணவகம் இரண்டுக்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை. மூன்றுநேர உணவு, தங்குமிட வசதி, மாதாந்த சம்பளம், நிரந்தர தொழில்வாய்ப்புடன் இடம்பெயர்ந்தவர்களுக்கு முன்னுரிமை.

01.சப்பிளையர் (உணவு பரிமாறுபவர்கள்)
02.காசாளர்
03.குசினி வேலை தெரிந்தவர்கள்
04.சாரதி (லைட் வெயிக்கில்)
05.முகாமையாளர்
06.சமையலாளர்கள்
07.வீட்டு பணிப்பெண்கள்

(484)

தொடர்பு:-0777917753, 0766898043



## அக்ஷயா

அழகுக் கலை பயிற்சியகம்

- அழகுக்கலை பயிற்சிகள் நடைபெறுகின்றன.
- சாறிவுளவுஸ் கட்டிங் (6) பஞ்சாபி (5)
- கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, கறைகள், கரும்புள்ளிகள், நாட்பட்ட கறுப்பு, வடுக்கள் அனைத்தையும் மாற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு
- உதட்டு கறுப்பு, கழுத்து கறுப்பு, கருவளையம் நீக்கும் கிறீம்
- உடல் எடை கூட்டும், குறைக்கும் பால்மா குளிசை டொனிக்
- ஒட்டிய கன்னங்களை குண்டுக் கன்னங்களாக மாற்றும் குளிசை
- தலைமுடி வளரச் செய்யும் ஆயுர்வேத எண்ணெய்
- உடல், கை, கால் கருமையான புள்ளிகள் நீக்கும் கிறீம் விற்பனைக்கு உண்டு.
- பேசியல், அயனிங், கிளிநப் செய்து கொள்ளலாம்.

0772106155, 0775387973 அக்ஷயா நாவலர் றோட்
221, பிறவுண் றோட் சந்தி (அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்.

(501)

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உங்களுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(க-982)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரணிலின் கருத்து சட்ட ரீதியானதே!



## சுஜீவ சேனசிங்க தெரிவிப்பு

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தொடர்பாக உயர் நீதிபதி வழங்கிய தீர்ப்பு சம்பந்தமாக பொதுநலவாய நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைக்கவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட கருத்து சட்டரீதியானதென பிரதி நீதி அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார். சிங்கள வானொலி ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மூவர் அடங்கிய நீதியரசர்கள் குழுவே இத்தீர்ப்பை வழங்கியுள்ளது.

சாதாரணமாக தீர்ப்பு வழங்கும் போது மூன்று பேரும் இணைந்து தீர்ப்பு வழங்குவது அவசியமானது. இச்சந்தர்ப்பத்தில் இரண்டு பேருக்கும் தீர்ப்பு வழங்க முடியும் ஆனால் முக்கியமான பிரச்சினை ஒன்று சம்பந்தமாக மூன்று நீதியரசர்கள் தர்ப்பை வழங்கினால தான் முக்கிய மானதாக இருக்கும்.

இதேவேளை, கோத்தபாய ராஜபக்ஷ தொடர்பாக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் மூலம் இலங்கையின் நீதித்துறையின் சுயாதீனத்தன்மை நன்கு வெளிப்பட்டுள்ளதாக ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன கூறினார். எனினும் தீர்ப்பு வழங்கிய முறை சம்பந் தமாக விடயங்களை பொதுநலவாய நீதிமன றத்தில் முன்வை க்க வுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசி ங்க தெரிவித்தார்.

இது சம்பந்தமாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள ஜாதிக ஹெல உறுமய பிரதமரின் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியா தென குறிப்பிட்டுள்ளது.

ஹெல உறுமயவின் கருத்து குறித்து பிரதி நீதி அமைச்சர் தெரி விக்கையில், ஹெல உறுமய கூறுபவை தேவையற்றவை. அந்தக் கட்சி அங்கு ஒன்றும் இங்கு ஒன்றும் கூறி வருகின்றது. இதனால்ஹெல உறுமய என்ன கூறுகிற தென்று எனக்கு தெரியவில்லை.

இந்தத் தீர்ப்பு சம்பந்தமாக ஹெல உறுமய என்ன கூறுகின்றதென அந்தக் கட்சியிடம் கேளுங்கள்.

பிரதமர் கூறுவது போல் பொதுநலவாய நீதிமன்றத் திற்கு அந்த விடய த்தை கொண்டு செல் வது பிரச்சினை இல்லை என பிரதி அமைச்சர் சுஜீவ சேனசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-3-5)


**SB TRAVELS & TOURS (PVT) LTD** SPECIAL AIR FARES

| | | | | | |
|---|---|---|---|---|---|
| CHENNAI ~ | 21,800/- | AI | LONDON | 79,500/- | KU |
| MADURAI | 17,400/- | MJ | TORONTO | 115,100/- | 9W |
| TRICHI | 26,600/ | UL | MALDIVES | 16,700/- | MU |
| BOMBAY | 28,100/- | AI | PARIS | 63,600/- | 9W |
| BENGALURE | 30,700/- | UL | NEWYORK | 108,800/- | CX |
| KOCHI | 25,500/- | UL | MELBOURNE | 90,900/- | MH |
| DELHI | 29,800/- | AI | CANTON | 63,900/- | MH |
| MALAYSIA | 29,600/- | MH | PERTH | 99,800/- | MH |
| SINGAPORE | 28,100/- | MH | NARITA | 65,900/- | CX |
| BANGKOK | 28,400/- | MH | AUCKLAND | 109,300/- | CX |
| ONEWAY: CHENNAI - 11,500/- SG | | | SYDNEY | 104,800/- | MH |

*Condition Apply

VISA / MASTER AMERICAN EXPRESS CARD ACCEPTED.

IATA ACCREDITED AGENT

DUBAI - 17,300/- QR , DOHA - 19,800/- KU, SHARJAH - 14,000/- QR

சகல நாடுகளுக்குமான டிக்கட்டுகளை மிக நியாய கட்டணத்தில் பெற இன்றே அழையுங்கள்: 0771083480,81,82,83

0766911080,81,82,83,84,85,86,87,89,90

Doha Qatar Bureau Arrangement செய்து தரப்படும்.

India, Bangkok, Malaysia Visa Arrangement செய்து தரப்படும்.

No324, ALUTHMAWATHA ROAD, COLOMBO-15. TEL-011 2540280

No: 132, SRI KATHERASAN STREET, COLOMBO 13. TEL -011 2333322

NO 15, JEMPATTAH STRRET, COLOMBO-13. TEL- 011 2446666

E-mail: sbtravels99@yahoo.com Contact for Travel Insurence

**தொழில் வாய்ப்பு**

நீங்கள் தெரிவு செய்யும் தொழிலுக்கேற்ப மாதாந்த சம்பளம் 18000/= 45000/= கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் (ஜேம், டொபி, காமென்ட், சோயா, கிளவுஸ்...போன்ற தொழிற்சாலைகள்) தனியார் துறைமுகம், விமானநிலையம், பாதுகாப்பு உத்தியோகத்தர், இலக்றீசன், தச்சு பெயின்டர், மேசன் (கம்பி, செடலிங், டைல்) உதவியாளர்கள் உட்பட பல வேலைவாய்ப்புக்கான வெற்றிடங்கள் 18-50 வயது ஆண், பெண் தேவை. உணவு தங்குமிடம் குறைந்த விலைகளில் நண்பர்கன் தம்பதியினராகவும் இணைந்து கொள்ளலாம்.

தொடர்புக்கு: 077 683 8231

**காணி விற்பனை**

மல்லாகம் கே.கே.எஸ் வீதியில் (சோடாக்கம்பனி ஒழுங்கை) 5பரப்பு அல்லது 21/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-077 753 2994

**On Arrivel Indian Visa Sun Travels**

வெளிநாட்டு கடவுச்சீட்டையுடையோரும் சில மணி நேரத்தில் உங்கள் வீட்டில் இருந்தவாறே இந்தியா செல்வதற்கான விசாவை பெற்றுக் கொள்ளலாம்.

கைலாசபிள்ளையார்

கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:-077 225 9030

USAID FROM THE AMERICAN PEOPLE

"Civil Society Initiatives to Promote the Rule of Law in Sri Lanka"

உரிய தருணத்தில் இலவச சட்ட ஆலோசனை, சட்ட சேவை மற்றும் வழிகாட்டல்கள்

வாரத்தில் 5 நாட்கள் (திங்கள் - வெள்ளி ) காலை 9.00 - மாலை 5.00 மணிவரை

எம்மிடம் கீழ்வரும் விடயம் சம்பந்தமாக நீங்கள் உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்

*சிறுவர் துஷ்பிரயோகம்*

*பாலியல் வன்முறைகள்*

*குடும்ப வன்முறைகள்*

*ஏனைய நெருக்கீட்டு நிலைமைகள்*

இலவச சட்ட சேவை பிரிவு

மகளிர் அபிவிருத்தி நிலையம்,

இல.07, இரட்ணம் லேன்,

கே.கே.எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.

தொ.பே.இல.:- 021 222 4398, 021 321 5144

மேலதிக இலவச சட்ட சேவை பிரிவுகள் - வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களில்.

**CNR WORLD WIDE EXPRESS & TRAVELS** யாழ்ப்பாணத்தில் மங்களகரமான ஆரம்பம்

'அலுவலக திறப்பை முன்னிட்டு நீங்கள் அனுப்பும் பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படுகிறது'.

- வெளிநாட்டு/ உள்நாட்டு துரித தபால் பொதிகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சேவை.
- அனுப்பும் பொதிகளுக்கான பாதுகாப்பு மற்றும் காப்புறுதி உத்தரவாதம் [உங்கள் வீட்டில் இருந்தவாறு அனுப்பும் வசதி]
- சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள் ( AirTicket) மீள் உறுதிப்படுத்தல், திகதி மாற்றம் (Date Change) செய்து கொள்ளலாம்.
- கடல் /ஆகாய மார்க்க பெரிய பொதிகள் மற்றும் கார்கோ சேவை (Bulk Cargo)



சி.என்.ஆர். எக்ஸ்பிரஸ் பொதிகள் சேவை

401, Clock Tower Road, Jaffna (பெருமாள் கோவில் அருகில்) அழையுங்கள்:077 293 1062

(C-954)


17.05.2015

(வைகாசி 3, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 05.54 மணிக்கு

சதுர்த்தசி முற்பகல் 11.48 மணிவரை

பரணி முன்னிரவு 11.24 மணிவரை

இராகுகாலம் 4.23-5.53 மணிவரை

சுபநேரம் 8.53-10.23 மணிவரை

அமாவாசை விரதம்

வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், திட்டமிட்ட காரியமென்றில் திடீரென மாற்றம் செய்வீர்கள், வேலைச்சுமை கூடும், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.

சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், சுபசெலவுகள் அதிகரிக் கும், ஆதாயமில்லாத அலைச்சல் கள் ஏற்படலாம், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம்.

பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் நன்மைதரும், பணவரவு கள் எதிர்பார்த்தபடி கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழிலில் சிறப் புகள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும்.

எதற்காகவும் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னே ற்றத்தில் அதிக அக்கறை காட்டுவர், பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், பயணத்தால் பலனுண்டு, தலைமைப் பொறுப்புக்கள் தேடிவரும் வாய்ப்புண்டு.

பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைக் கூறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், கொடுக்கல்-வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், வியாபார விருத்தியுண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய திட்டங்கள் கைகூடும்.

மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ்பெறுவீர்கள், உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும்.

அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், ஆரோக்கியம் சீராகும், உடன் பிறப்புக்கள் உங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வர், சுவாரஸ்யமான நாள்.

உறவினர் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், தொழிலில் ஆர்வத்துடன் பணிபுரிவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

சஞ்சலங்கள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், மேலதிகாரிகளை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, காரியங்களில் தாமதங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, விரயங்கள் அதிகமாகும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புங்குடுதீவில் மாணவி கொலை

# நடந்தது என்ன?

01



12 மணித்தியால நேரம் ஓயாதவேலைப் பளுவில் களைத்த கதிரவன் மேற்கு வானத்தில் உறங்கவும் ஓய்வெடுக்கவும் சென்ற வேளை, இருள் சூழ்ந்த அந்தப் பொழுதில் பண்ணை வீதி எங்கும் ஒரே மின்மினிப்பூச்சிகளின் அசைவு போல வாகனங்களின் பவனி.



ஆம், தொழில் நிமிர்த்தம் காலைப்பொழுதில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த தீவக மக்கள் மீளவும் தங்கள் தாயகம் திரும்புகின்ற காட்சிதான் இது. பண்ணை வீதி எக்காலத்திலும் மின்குமிழ் ஒளியைக் கண்டதில்லை.

ஆனாலும் இராப்பொழுதில் அந்த வீதி இருண்டு கிடந்ததுமில்லை. வாகனத் தொடரணியில் பாய்ச்சப்படும் வெளிச்சமே பண்ணை வீதியின் கதிரொளி.

மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை, புங்குடுதீவு, நாரந்தனை, கரம்பொன், ஊர்காவற்றுறை என தீவகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் செல்கின்ற வாகனங்களின் எண்ணிக்கை...

யாழ்ப்பாண நகர வர்த்தகம் தீவகத்தின் ஆட்சியில் இருந்த அந்தக் காலம். வர்த்தகப் பெருந்தலைகளின் பெறுமதியான கார்கள் பண்ணை வீதியால் ஊர்நோக்கிச் செல்கின்ற அந்தக் காட்சியை நினைக் கும் போது அட, அதொருகாலம் என்று சொல்லிக் கண்களைத் துடைப்பதைத் தவிர வேறு எதுவும் செய்யமுடியாது.

ஆம், 1990, 1991களில் தீவகத்தில் ஏற்பட்ட இடப் பெயர்வு தீவகத்தின் அடித்தளத்தை உடைத்துச் சின்னா பின்னமாக்கிற்று. இப் போது தீவகம் கலகலப் பற்ற மண்.





பணிநிலைக்காக அங்கு செல்பவர்கள் தங்களின் கடமை நேரத்தில் ஐந்து ஆண்டுகள் முடிய இடமாற்றம் தந்தேயாக வேண்டும் என்ற கணக்கெடுப்பையும் தங்கள் கடமையோடு சேர்த்துக் கொண்டனர்.

எல்லாவளமும் நிறைந்த தீவகத்தின் தற்போதைய அவலம் என்ன? அறிவதற்குக்கூட ஆர்வம் அற்றதான மனநிலையே முன்னைய தீவகத்தாரின் நிலைமையாக இருக்கிறது.

புங்குடுதீவு அதோ! இலங்கைத் தீவின் மிக நீண்ட தாம்போதி என்ற பெருமையைத் தனதாக்கிய வேலணை- புங்குடுதீவுப் பாலம். அந்தப் பெருமையோடு புங்குடுதீவின் தலைவாசலில் காத்திருக்கும் மடத்துவெளி பிள்ளையார்.

நாற்சார வீடுகளின் அலங்காரம். பூவரசம் பூக்களின் மங்கல வரவேற்பு. பாடசாலைகள், ஆலயங்கள், அரங்குகள், ஓ! புங்குடுதீவு வர்த்தகப் பெருமக்கள் வாழும் பொன்னகரம் என்று புகழப்படலாயிற்று.

அந்தப்புகழ் நீண்டு நிலைக்காமல் போனது தான் வேதனை. இன்று பூவரசுகளும் பூக்க மறுத்த பூமியாக புங்குடுதீவு காட்சி தருகிறது.

குடியிருந்த வீட்டை விற்று விட்டுப்போன சரிதங்கள், வாழ்ந்த வீடு இருக்கட்டுமே என்று நினைத்தபோது அடுத்தவர் அதை உடைத்து எடுத்த வேதனை தாங்க முடியாமல் எஜமானின் வருகைக்காக ஏங்கிக் கிடக் கும் எச்சசொச்சங்கள்.

இதற்குள்ளும் ஒரு மீள்குடியமர்வு சொந்த மண்ணில், சுத்தமான காற்றின் சுவாசத்தில் நிம்மதி என்ற நினைப்பும் பொருளாதாரத்தின் மட்டுப்பாடும் புங்கை மண் தனக்கும் புத்திரர் உண்டென்பதை நிரூபித்துக் கொண்டிருந்தது.

மாணவர்களின் பற்றாக்குறையோடும் பாடசாலைகள் இயங்கின. இறைவா! என்று சொல்வதற்கு ஆளில்லையாயினும் ஆலயமணிகள் ஒலித்துக் கொண்டேயிருந்தன.

இருந்ததையெல்லாம் இழந்த சோகத்தோடு இயங்கும் புங்குடுதீவு மண் அன்றும் கதிரவனின் வருகையோடு விழித்துக்கொள்கிறது. வெட்டுமுறை தவறிய பனைகளும் இராப்பொழுதில் தன் காவோலைகளை உதறியடித்து உறக்கத்தில் இருக்கும் மக்களை வெருட்டுகின்ற வழமையில் விடிதல் என்பது நிம்மதியைத் தருகின்ற பொழுதாகவே உணரப்பட்டது.

விடிதலோடு உற்சாகம் அடையும் அந்த ஊர் அன்றும் அதே உற்சாகத் தோடுகளை கட்டுகிறது.

(தொடரும்)

புருசோத்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலத்தடிநீர் மாசடைவு குறித்து முதலாவது ஆய்வு அறிக்கை

சுன்னாகம் நிலத்தடிநீர் மாசடைதல் தொடர்பாக நடுவர்களால் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட முதலாவது ஆய்வு அறிக்கை சமுதாய மருத்துவ நிபுணரும் யாழ்.மருத்துவ சங்கத் தலைவருமான முரளி வல்லிபுரநாதனால் கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற சுகாதாரத்துக்கான-2015 சர்வதேச மாநாட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த ஆய்வு அறிக்கையில், சமுதாய மருத்துவ பட்டப்பின் படிப்புப் பயிலுநர் வைத்தியர் நுவானி விஜயசேகர, சமுதாய மருத்துவ நிபுணர் முரளி வல்லிபுரநாதன், சுற்றுச்சூழல் சுகாதாரத்துக்கான பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எச்.டி.பி.ஹேரத் ஆகியோரினால் "சுன்னாகம் மின்னுற்பத்தி நிலையம், கிணறுகளில் எண்ணெய் மாசு கலந்து இருப்பதற்கான மூலமா?" என்ற தலைப்பில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.2013-2014 காலப் பகுதி களில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் மேற்கொள்ளப்பட்டு வெளியி டப்பட்ட ஆய்வு அறிக்கையில் உள்ள இரண்டாம் நிலைத் தரவுகள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தில் இருந்து கிணறுகளின் தூரம் அதிகரிக்கும் போது அவற்றில் உள்ள எண்ணெய் மாசுக்களின் செறிவு குறைந்து செல்வது உரிய புள்ளிவிபரவியல்பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு விஞ்ஞான ரீதியாக சுன்னாகம் மின்னுற்பத்தி நிலைய வளாகத்தில் இருந்து எண்ணெய் மாசுக்கள் நிலத்தடி நீரில் கலந்து சூழவுள்ள கிணறுகளைப் பாதிப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு ஆவணப்படுத்தப்படுவது சுன்னாகம் மின்னுற்பத்தி நிலைய வளாகம் நிலத்தடியில் கலந்திருக்கும் மாசுக்கள் தொடர்பாக மேலதிக மேற்பார்வைக்கும் பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதுடன் இலங்கை மின்சார சபையையும் அதனால் பணியில் அமர்த்தப்பட்ட தனியார் மின்னுற்பத்தி நிறுவனத்தையும் சுற்றுச் சூழலுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதம் தொடர்பான பொறுப்புக்கூறலுக்கு வழிவகுத்துள்ளதுடன் பாதிக்கப்பட்டவர்கள் நட்டஈடு கோருவதற்கு முதற்படி ஆகவும் அமைந்துள்ளது.

இதுவரை இந்த விடயம் தொடர்பாக வடமாகாண சபை அமைச்சர் ஐங்கரநேசனின் நிபுணர்குழு உறுப்பினர்களினால் வெளியிடப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் நடுவர்களினால் ஆய்வுத்திறன் தொடர்பான மீளாய்வுக்கு உட்படுத்தப்படவில்லை என்பதுடன் இந்த மாசடைதலுக்கு பொறுப்பானவர்கள் யார் என்பது தொடர்பாக எந்தக்கருத்தையும்தெரிவிக்கவில்லை என்பதுடன் நிலத்தடி நீரில் நச்சுத் தன்மையான பதார்த்தங்கள் காணப்படவில்லை என்று கூறும் கண்துடைப்பு அறிக்கைகளாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் 2013-14 காலப்பகுதிகளில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் மேற்கொள்ளப்பட்டு நீதிமன்றத்தினால் நிர்ப்பந்திக்கப்பட்டு வெளியிடப்பட்ட ஆய்வு அறிக்கையில் உள்ள விபரங்கள் பொதுமக்களுக்கு உரிய முறையில் வெளிப்படு த்தப்படாது இருப்பது பொதுமக்களை பாதிக்கக்கூடிய சமூகவிரோதச் செயலாகும். குறிப்பாக ஈய நஞ்சு கலந்து இருப்பதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும். கிணறுகளை தமது பதவிகளை தக்கவைப்பதற்காக பொறுப்பான அதிகாரிகள் வெளிப்படுத்தாமல் இருப்பதன் காரணமாக இன்று வரைக்கும் பொதுமக்கள் ஈய நஞ்சு கலந்த நீரை அறியாமல் பருகிக் கொண்டிருக்கிறார்கள். இது பல்தேசியக் கம்பனியின் நலன்களைக் காப்பதற்காகத்மிழினஅழிப்பிற்குதுணை போகும் செயல் ஆகும் என மேலும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-9)

# மின்சாரம் தடைப்படும்

வடமாகாணத்தில் உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடமாகாணத்தில் உள்ள சில பிரதேசங்களில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

யாழ். பிரதேசத்தில் புங்குடுதீவு, துறையூர், வேலணை, சங்கத்தானை, சாவகச்சேரி, கச்சாய் வீதி, சாவகச்சேரி நகரம்,அரசடி, சம்மந்தர் கடை, கிழவிதோட்டம், யாக்கரு, கலிகை, துன்னாலை, தாமரைக்குளத்தடி, இந்திர அம்மன் கோவிலடி, கப்பூது, கல்வயல், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத் தொகுதி, நுணாவில், சுன்னாகம் தெற்கு, உரும்பிராய், உரும்பிராய் சந்தி, விளாத்தியடி, கோண்டாவில் CTB Depot பிரதேசம், திருநெல்வேலி நீர்ப்பாசனம், கலைவாணி அரிசி ஆலை, இராச வீதி, கோண்டாவில் மேற்கு, மகேந்திரன் கடையடி, தபால் பெட்டி சந்தி, தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வரா சந்தி, சிவன் அம்மன் வீதி, இராமநாதன் வீதியில் புகையிரத கடவைவரை, ஆத்திசூடி வீதி, பழம் வீதி, கந்தர்மடம், அன்னசத்திர வீதி, இலுப்பையடி சந்தி, பருத்தித்துறை வீதியில் நாக விகாரையில் இருந்து பாரதியார் சிலை வரை, விக்ரோறியா வீதி, மின்சார நிலைய வீதியில் ஒரு பகுதி, புகையிரத நிலையப் பிரதேசம், மார்டின் வீதி, யாழ். 2ம் 3ம் 4ம் குறுக்குதெருக்கள், ஸ்ரான்லி வீதியில் புகையிரதக் கடவையிலிருந்து இராசாவின் தோட்ட வீதி வரை, அம்பலவாணர் வீதி, ஆஸ்பத்திரி வீதி வேம்படி சந்தியிருந்து மார்டின் வீதி வரை, ஸ்ரான்லி வீதியில் ஆரிய குளத் திலிருந்து முட்டாசுக்கடை சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மணிக்கூட்டு வீதியில் ஒரு பகுதி, யாழ். மாநகர சபை, நொதேர்ண் சென்றல் கொஸ்பிற்றல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆண்கள் விடுதி, தம்ரோ பலாலி வீதி, கற்றன் நஷனல் வங்கி, பீப்பிள் லீசிங் அன்பினான்ஸ் கம்பனி, AVNOR பிறைவேற் லிமிரட், மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி, கோப்பாய் இராணுவ முகாம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, சுன்னாகம் நகரம், அம்பனை, கந்தரோடை, சுன்னாகம் ஐயனார் கோவிலடி, மயிலணி, கல்லாரை, மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, சிறுவிளான்,தெல்லிப்பழை, நகுலேஸ்வரம், மாவைகலட்டி, கொல்லன் கலட்டி, மாவிட்டபுரம், கீரிமலை, கீரிமலை துணைக் கடற்படை முகாம், தெல்லிப பழை புற்றுநோய் வைத்தியசாலை, தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை, சுன்னாகம் கார்கில்ஸ் பி.எல்.சி., புங்குடுதீவு இலங்கை கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் செம்மலை, வற்றாப்பளை, முள்ளியவளை, கொக்கிளாய்,நாயாறு, தேக்கங்காடு, DGH-முல்லைத்தீவு, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கடற்றொ ழில் கூட்டுறவுச் சங்கம், முல்லைத்தீவு விமானப்படை-I மற்றும் II, முல்லைத்தீவு 59 ஆவது படைப்பிரிவு (14ESR-01 மற்றும் 14ESR-02), SFHQ வற்றாப்பளை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் மாமடுவிலிருந்து மகாகச்சக்கொடியவரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரப்பன்மடு, CECகல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் தம்பாட்ட முசலி, கொக்குப்படையான், கொண்டச்சி நீர்ப்பாசனத் திணைக்களம், மறிச்சுக்கட்டி, கரடிக்குளி, பாலைக்குளி, முள்ளிக்குளம் கடற்படைமுகாம், சிலாவத்துறை, அரிப்பு, அரிப்பு நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# மன்னார் கடலில் எரிவாயு எடுக்கும் நிறுவனத்தின் அனுமதியை ரத்து செய்க

## வைகோ வேண்டுகோள்

மன்னார் வளைகுடா கடலில் எரிவாயு எடுக்கும் ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தின் அனுமதியை இரத்து செய்ய வேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மன்னார் வளைகுடா கடல் பகுதியில் இயற்கை எரிவாயு கண்டுபிடிக்கும் முயற்சியில் இந்திய இயற்கை எரிவாயு மற்றும் எண்ணெய் கழகம் (ஓ.என்.ஜி.சி.) கடந்த சில ஆண்டுகளாக ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வந்தது.

இதன் அடுத்த கட்டமாக தற்போது மன்னார் வளைகுடா கடலில் 22 எரிவாயு கிணறுகள் அமைத்து, எரிவாயு எடுக்கும் பணியில் ஓ.என்.ஜி.சி. நிறுவனம் ஈடுபட்டுள்ளது. தமிழ்நாட்டுக்கு நேர் கிழக்கே அமைந்து ள்ள மன்னார் வளைகுடா "யுனெஸ்கோ" அமைப்பி னால் "கடல்சார் தேசிய பூங்காவாக அங்கீகரிக்கப்பட்டுள்ள பகுதியாகும். உயிர்க்கோள காப்பகமாக பாதுகாக்கப்பட்டு வரும் இந்தப் பகுதியில் அரிய வகை பவளப்பாறைகள், கடல்புல் உள்ளிட்ட தர்வரங்கள் கடல் பசு, டொல்பின், கடல் அட்டை உள்ளிட்ட உயிரினங்கள் உள்ளன. இதுமட்டுமன்றி, மன்னார் வளைகுடா கடல் பகுதியில் பவளப்பாறைகளின் வளர்ச்சி 43 சதவீதம் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது. மன்னார் உயிர்க்கோள காப்பகப் பகுதிக்கு 10 கிலோ மீற்றர் தூரத்திலும், தீர்த்தங்கரை பறவைகள் சரணாலயப் பகுதிக்கு 10 கிலோ மீற்றர் தூரத்திலும், சக்கரக்கோட்டை கம்மா பறவைகள் சரணாலயம் பகுதிக்கு 10 கிலோ மீற்றர் தொலைவிலும் 22 எரிவாயு கிணறுகள் அமைத்து இயற்கை எரிவாயு எடுக்க ஓ.என்.ஜி.சி. நிறுவனத்துக்கு மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறது.

கடலில் 5,000 மீற்றர் ஆழத்தில் மண்ணை அகழ்ந்தெடுத்து எரிவாயு கிணறுகள் அமைக்கப்படுமானால், சுற்றுச் சூழல் நாசமடைவதோடு, கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் பல்லுயிர் பெருக்கம் அழிந்துவிடும். இதனால் கடல் வளமும், மீன் வளமும் முற்றிலுமாக அழிந்து போகும் அபாயம் ஏற்படும். அந்நிறுவனத்துக்கு எரிவாயு எடுக்க வழங்கப்பட்ட அனுமதியால், கடலையே நம்பி இருக்கும் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்று மீனவ மக்கள் இந்த அனுமதியை எதிர்த்து வருகின்றனர்.

இதுகுறித்து இராம நாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர், தமிழக அரசின் சுற்றுச் சூழல் துறை அதிகா ரிகள் மற்றும் ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தின் அதிகாரிகள் பங்கேற்ற கருத்துக் கேட்புக் கூட்டம், மே 14 ஆம் திகதி, காலை 10 மணிக்கு, இராம நாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தினர் நூறு பேரை மட்டும் அழைத்து வைத்துக்கொண்டு பெயரளவுக்கு இந்தக் கருத்துக்கேட்புக் கூட்டத்தை நடத்தி முடித்துவிட்டனர். ஆனால், மீனவ கிராம மக்கள், "மக்களிடம் விரிவான விளம்பரம் செய்து முறையாக கருத்துக்கேட்புக் கூட்டம் கூட்டப்படவில்லை" என்று கருத்துத் தெரிவித்தனர். மன்னார் வளைகுடா கடலில் மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பறிக்கும் வகையிலும், சுற்றுச் சூழலுக்கு கேடு விளைவிக்கும் வகையிலும் ஓ.என்.ஜி.சி. நிறுவனம் எரிவாயு கிணறுகள் தோண்ட 493 சதுர கிலோ மீற்றர் பரப்பளவுக்கு வழங்கப்பட்ட அனுமதியை மத்திய அரசு இரத்துச் செய்ய வேண்டும்.

மீனவர்கள் நலனை பாதுகாத்திட தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள வைகோ மேலும் கூறியுள்ளார். (3-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1967 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 6.5 செவ்.12 இல்.
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L பிரான்ஸ்PR
தொ.இ: B/4500

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 11.5 செவ் 2 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: HNDA, BBA/ உதவி முகாமையாளர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது
தொ.இ: B/3435

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 46 செவ் 7 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L/ தொழில்நுட்ப உத்தியோகத்தர்
தொ.இ: B/4504

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 3.75
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: பொறியியலாளர் சிங்கப்பூர்
தொ.இ: B/4505

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 55.25 சூரி, செவ் 7இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: G/4501

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 57 செவ் 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: HNDIT அரச தொழில்
தொ.இ: G/4502

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 15 சூரி செவ் 3 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/4507

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 40.5 சூரி செவ் 1 இல்
உயரம்: 5'2'
தகைமை/தொழில்: BBA/ கணக்காளர்
தொ.இ: G/4512

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E.mail: kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னல் தாக்கி இருவர் பாதிப்பு

(சாவகச்சேரி)


இடி மின்னலின் தாக்குதலுக்கு உள்ளாகி பாதிக்கப்பட்ட இருவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் மு.ப.11 மணியளவில் சாவகச்சேரி மீசாலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடுமையாக மழை பெய்து கொண்டிருந்ததனால் மீசாலைப் பகுதியில் மின்கம்பம் அருகே மரம் ஒன்றின் கீழ் நின்றிருந்த வேளை இடி மின்னல் தாக்கியுள்ளது.

இதனால் ஒருவரின் கையும் காலும் இழுக்கப்பட்ட நிலையிலும் மற்றைய நபர் பாதத்தில் காயத்திற்குள்ளான நிலையிலும் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

புளியம்பொக்கணையைச் சேர்ந்த நா.தவநேசன் (வயது-25) சாவகச்சேரி வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றார். (இ-3-29)



## மாணவியின் கொலையுடன் தொடர்புடைய நபர்களுக்கு

# தண்டனை வழங்குவதன் மூலம் நீதி நிலைநாட்டப்படல் வேண்டும்

## பிரதியமைச்சர் விஜயகலா வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**புங்குடுதீவில் உயர்தர வகுப்பு மாணவியான சிவலோகநாதன் வித்தியாவின் படுகொலை குறித்து உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு குற்றவாளிகள் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று மகளிர் விவகார பிரதியமைச்சரும் ஐ.தே.கவின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.**



புங்குடுதீவில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு மாணவி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே பிரதியமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த ஆட்சிக் காலத்தில் யாழ். குடாநாட்டில் பல பாலியல் வல்லுறவுச் சம்பவங்களும் பெண்கள் மீதான வன்முறைகளும் இடம்பெற்றிருந்தன. காரைநகரில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் 9 வயது மற்றும் 11 வயது பாடசாலை மாணவிகள் மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்ட போதிலும் குற்றவாளிகள் இன்னமும் தண்டிக்கப்படவில்லை.

இதேபோல் பல்வேறு சம்பவங்கள் குடாநாட்டில் அரங்கேற்றப்பட்டுள்ளன. புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் பெண்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் மற்றும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது புங்குடுதீவுப் பகுதியில் பாடசாலை மாணவி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளமை பெரும அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த கொடூர சம்பவத்தில் ஈடுபட்ட 3 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த படுபாதக செயலை யார் மேற்கொண்டிருந்தாலும் அவர்கள் நீதிமன்றத்துக்கு முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டியது அவசியமாகும். இதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளமை பாராட்டத்தக்கது.

சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட மாணவியின் குடும்பத்தினரது ஆழ்ந்த கவலையில் நானும் பங்கேற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் இவ்வாறான துர்ப்பாக்கிய சம்பவங்கள் இடம்பெறாமல் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று பொலிஸ்மா அதிபரை நான் கேட்டுக்கொள்கிறேன். எமது மக்கள் கடந்த 3 தசாப்தகாலமாக யுத்தத்தினால் பெரும் இழப்புக்களை சந்தித்துள்ளனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் பெண்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள், படுகொலைகள் இடம்பெறுவதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

புங்குடுதீவு மாணவி படுகொலை விடயத்தில் நீதி உடனடியாகவே நிலைநாட்டப்பட வேண்டும். குடாநாட்டில் இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாதிருப்பதை பொலிஸார் உறுதிசெய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# தமிழீழ விடுதலைப் புலிகளால் பெண்களுக்கு அதிக பாதுகாப்பு

## வடக்கு அமைச்சர் ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

விடுதலைப் புலிகளின் காலப் பகுதியில் பெண்களால் நள்ளிரவிலும் தன்னந்தனியாக நடமாட முடிந்தது. அதுபோன்ற ஒரு காலம் மீளவும் வராதா? என்று மக்கள் இப்போது ஏங்க ஆரம்பித்துள்ளனர் என்று வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.



புங்குடுதீவில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திப் படுகொலை செய்யப்பட்ட மாணவியின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அஞ்சலி உரையாற்றியபோதே அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மாணவி சிவலோகநாதன் வித்தியாவின் படுகொலை மிருகத்தனமானது என்று சிலர் குறிப்பிட்டார்கள். நான் அவ்வாறு சொல்லமாட்டேன். மிருகங்கள் கூடச் செய்யத்துணியாத கொடுஞ்செயல் இது. இந்த மாபாதகத்தில் ஈடுபட்டவர்கள் எத்தனை பிறவிகள் எடுத்தாலும் எந்தப் பிறவியிலும் அவர்களுக்கு மன்னிப்பே கிடையாது.

போருக்குப் பிறகு இதுபோன்ற கொலைகளும், சமூகவிரோதச் செயற்பாடுகளும் அதிகிரித்துள்ளன. இவற்றின் பின்னணியில் போதைப்பழக்கம் ஒரு பிரதான காரணமாக இருக்கின்றது. என்றும இல்லாத வகையில் இளைய தலைமுறையினரிடையே போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளது. எமது இளைய தலைமுறையைத் தவறான பாதையில் வழி நடத்துவதன்மூலம் அவர்களின் விடுதலை உணர்வை மழுங்கடிக்கச் செய்யலாம் என்ற நோக்கத்துடனேயே இங்கு போதைப்பொருள் பாவனை திட்டமிட்டு ஊக்கிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் பொலிஸ் குற்றங்களைக் கட்டுப்படுத்தியிருந்தது. இப்போது கடும்குற்றவாளிகள்கூட சுதந்திரமாக நடமாடக்கூடியதாக உள்ளது. எனவே, எமது இளைய தலைமுறையின் பாதுகாப்புக் குறித்து பெற்றோர்கள் எப்போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எமது இளைய தலைமுறையின் பழக்கவழக்கங்கள் குறித்துப் நாம் விழிப்பாயிருக்க வேண்டும். வடக்கு மாகாண சபையும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய தீர்க்கமான வழிமுறைகளை ஆராய வேண்டிய கட்டாயத்தில் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

நூற்றுக்கணக்கான மாணவர்கள் பங்கேற்ற இவ்வஞ்சலி நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, சிவஞானம் சிறிதரன், வடமாகாணசபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், மாகாணசபை உறுப்பினர்கள் அனந்தி சசிதரன், பா.கஜதீபன், விந்தன் கனகரத்தினம், க.சிவாஜிலிங்கம் ஆகியோருடன் கல்வித் திணைக்கள அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தார்கள். (இ-5)




## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 6 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் நாளை 18 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ். மாவட்ட செயலக மகாநாட்டு மண்டபத்தில் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப் பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவு இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் 5 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்ட அறிக்கையை சங்கச் செயலாளர் சமர்ப்பிக்கவுள்ளார். இதேவேளை பான் ஏசியா வங்கி -சனச வங்கிப் பிரதிநிதிகள் உரையும் இடம்பெறும். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹலோ ட்ரஸ்ட்

# பணியாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு 2கோடி 86 இலட்சம் ரூபா ஒதுக்கீடு

(கிளிநொச்சி )

கிளிநொச்சி ஹலோ ட்ரஸ்ட் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தில். பணியில் ஈடுபட்டு வந்த 450 வரையிலான பணியாளர்கள் திடீரென பணியில் இருந்து எவ்வித கொடுப்பனவுமின்றி நிறுத்தப்பட்ட பிரச்சினையை விரைவாக உரிய தரப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று பேசியமைக்கு அமைவாக பணியாளர்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் நேற்றைய தினம் பத்திரிகையாளர்களுடன் நடத்திய சந்திப்பின் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,தற்போது பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள பணியாளர்களுக்கு பணியில்லாது அவர்களது இரண்டு மாதச் சம்பளம் வழங்கப்படுகிறது.

இதேவேளை ஐந்து வருடத்தை பூர்த்தி செய்த அல்லது நெருங்கியுள்ள பணியாளர்களுக்கு போனஸ் கொடுப்பனவும் வழங்கப்படுகிறது.

இதற்காக 2கோடியே 86இலட்சம் ரூபா நிதி நிறுவனத்தினால் செலவு செய்யப்படுகிறது. பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரின் முயற்சியினால் ஜனாதிபதி,பிரதமர்,மீள்குடியேற்ற அமைச்சர் ஆகியோருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியதோடு கிளிநொச்சி மத்திய வங்கியின் பிராந்திய அலுவலக திறப்பு விழாவுக்கு வருகை தந்த மீள்குடியேற்ற அமைச்சருடன் சந்திப்புக்கு ஏற்பாடு செய்து தந்தமையினை தொடர்ந்து அவர் எங்களது நிறுவன உயரதிகாரிகளுடன் பேசியமைக்கு அமைவாக எங்களது கோரிக்கை நிறைவேற்றப்பட்டு பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (2-254)




# திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் பாப்பாமோட்டையில் திறந்து வைப்பு



(மன்னார்)

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் மன்னார் பாப்பாமோட்டை பகுதியில் அமைக்கப்பட்டு வந்த திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் நேற்று முன்தினம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டு மன் னார் நகர சபையிடம் கையளிக்கப்பட்டது.

உலக வங்கியின் 47 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் கீழ், புாப்பாமோட்டை பகுதியில் 4 ஏக்கர் கொண்ட காணியில் பசளை தயாரிப்பதற்கான திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் அமைக்கப்பட்டு வந்தது.

மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், நகர சபை உறுப்பினர்கள், மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம். ஏ.துரம், மன்னார் நகரசபையின் செயலாளர் லெனாட் பிரிட்டோ, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மன்னார் -வவுனியா மாவட்டங்களுக்கான பொறியிய லாளர் உதயசீலன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். (2)

# பெற்றோரால் மீட்கப்பட்ட சிறுமி பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(முள்ளியவளை)

முள்ளியவளை வடக்கு கிராம அலுவலர் பிரிவிலிருந்து கடந்த மாதம் 27ஆம் திகதி பாடசாலைக்கு மேலதிக வகுப்பிற்கு செல்வதாக பெற்றோருக்கு கூறிவிட்டு சென்ற 14 வயது மாணவி காணாமற் போனதாக மறுநாள் முள்ளியவளைப் பொலிஸ் நிலையத்தில் பெற்றோரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

பெற்றோருக்கு நேற்று முந்தினம் கிடைத்த தொலைபேசி தகவலையடுத்து சண்டிலிப்பாய்க்கு சென்ற பெற்றோர் சிறுமியை மீட்டு வந்து நேற்று காலை முள்ளியவளை பொலிஸ் நிலைய த்தில் முன்னிலைப்படுத்தினர்.

இதனையடுத்து இச்சிறுமியை முள்ளியவளைப் பொலிசார் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கவுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-302)

# பேயாடி கூழாங்குளம் பொதுக்காணி மக்களுக்கு மீள வழங்கப்படவேண்டும்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வவு.பிரதேச செயலாளருக்கு கடிதம்

(குருமன்காடு)

சர்ச்சைக்குரிய வவுனியா பேயாடி கூழாங்குளம் பொதுக்காணி கிராமத்தின் பொது தேவைக்கு பயன்படுத்தும் வகையில் மக்களுக்கு மீள கையளிக்கப்படல் வேண்டுமென வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பி.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வவுனியா பிரதேச செயலாளருக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

பேயாடி கூழாங்குளம் கிராமத்திலுள்ள பொதுக்காணியானது தங்களால் குறிப்பிட்டவொரு பொது அமைப்பிற்கு வழங்கப்படவுள்ளதாக கிராம மக்கள் எனக்கு முறையிட்டுள்ளனர். பழமையான இந்த கிராமத்தில் ஏற்கனவே இராணுவத்தினரின் தேவைக்கு பெருமளவிலான காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது மீள்குடியேறி வரும் மக்களுக்கான பொதுக் கட்டடங்களை அமைப்பதற்கு காணப்படும் மேற்படி காணியானது குறிப்பிட்டவொரு அமைப்பிற்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதை ஏற்றுக் கொள்ள முடி யாது.

இந்த கிராமத்தை சேர்ந்த மாணவர்கள் அருகிலுள்ள கிராமங்களிலேயே கல்வி கற்று வருகின்றனர். இந்த கிராமத்திலிருந்த பாடசாலை கடந்த 20 வருடங்களுக்கு மேலாக அயற்கிராமத்தில் இயங்கி வருகின்றது. இந்நிலையில் இவர்களுக்கான பாலர் பாடசாலையோ, பொதுநோக்கு மண்டபமோ அமைப்பதற்கு பொதுக்காணி அவசியமாகும்.

இது தொடர்பாக இரண்டு தரப்பினரையும் அழைத்து பேச்சு நடத்தப்பட்டது. இரு பகுதியினருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுதல் அவசியமாகும். குறிப்பிட்ட பொது அமைப்பின் சேவையின் தேவையை கருத்தில் கொண்டு அவர்களுக்கு வேறொரு இடத்தில் காணி வழங்க ஆவனசெய்யுமாறு அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(2-250)

# அனுமதியற்ற கடற்றொழிலை நிறுத்தக்கோரி முல்லையில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம்

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் கிராமிய அமைப்புக்களும் அதன் சம்மேளனமும், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும் அதன் சமாசமும் இணைந்து மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8மணியிலிருந்து பிறபகல் 4மணிவரை முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அலுவலகத்திற்கு முன்பாக நடத்தவுள்ளதாக கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் அ.மரியராசா தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் தெரிவிக்கையில்,முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய் முதல் முல்லைத்தீவு வரை கரையிலிருந்து 5 கடல் மைல் தொலைவில் தென்னிலங்கை மீனவர்களால் கடல் நீரினுள் அதி சக்தி வாய்ந்த மின் ஒளியைப்பாய்ச்சி மீன்பிடிக்கும் நடவடிக்கையை உடன் தடுத்து நிறுத்தக்கோரியும் கொக்கிளாய் முதல் சாலை வரையிலான முல்லைத்தீவு மாவட்ட கடற்பரப்பினுள் தென்னிலங்கை மீனவர்களால் மேற்கொள்ளப்படும் அத்துமீறிய மீன்பிடி மற்றும் அனுமதியற்ற கடற்றொழில் ஆகியவற்றை முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினரை தடுத்து நிறுத்தக்கோரி இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-302)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு

(மல்லாவி)

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் மே18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு அன்றுபிற்பகல்3மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறுமென பிரஜைகள் குழுவின் தலைவர் கி.தேவராசா அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு முள்ளிவாய்க்காலில் குறித்த நிகழ்வு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளதால் நேரம் மாற்றப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

. வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவினரால் ஏற்கனவே முற்பகல் 10 மணிக்கு குறித்த நிகழ்வு முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(2-15)

• • • • • • • • • •

உயிர்நீத்த எங்கள் உறவுகளை நினைவு கூர்ந்து, எங்களின் நியாயமான உணர்வுகளை அமைதியான முறையில் வெளிப்படுத்தி எம் மரபை மீள நிலைநிறுத்த மே 18இல் தமிழ் மககளை முள்ளிவாய்க்கால் நோககி அணிதிரளுமாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் அழைப்பு விடுத்துள்ளார்.

வடக்குமாகாண சபையால் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிற நினைவேந்தல் நிகழ்வு மே 18 இல், முள்ளிவாய்க்கால் கிழக்கு அ.த.க. பாடசாலைக்கு அருகில் முற்பகல் 10 மணியளவில் நடைபெறும். எனவே அனைத்து மக்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இத்தீவிலே பல்லாயிரக்கணக்கான ஆண்டு தொன்மையான அரசியல் மற்றும் பண்பாட்டு இருப்பை தமிழர்கள் நாம் கொண்டு வந்திருக்கின்றோம. 2009ஆம் ஆண்டு மே 18இல் இறுதிப்போரின் இறுதிக் கணங்களில் உலகம் பார்த்திருக்க நடத்தப்பட்ட இந்த இன அழிப்பானது மனித நாகரீகத்தின இழிவான அடையாளமாகும்.

இந்நாளில் எண்ணிலடங்காத எங்கள் உறவுகளையும்,எங்கள் வளங்களையும் நாம் இழந்திருக்கின்றோம்.எங்கள் இனத்தின் விலைமதிப்பில்லாத இயங்கு சக்தியைத் தொலைத்திருக்கிறோம். வாழ்வை இழந்தோம் .வரலாறைப் பறிகொடுத்தோம். எக்காலத்திலும் எதன் மூலமும் ஈடு செய்யப்பட முடியாத இழப்புக்களை நாம் அனைவரும் முகம் கொடுத்தோம்.

காலமே கதறி அழுத இந்த கடும் பேரழிவுகளை நாம் சந்தித்து. வருகிற மே 18 உடன் ஆறு ஆண்டுகள் முடிவடைகின்றன.

2009 இறுதிப்போரில் உயிரிழந்த எங்கள் உறவுகளை நினைவேந்துவதற்காக ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிற நினைவேந்தல் நிகழ்வில் தவறாது கலந்து கொண்டு எமது வரலாற்றுக் கடமையை ஆற்றுவோம். இன அழிப்புப்போரில் உயிர்நீத்த எங்கள் அனைத்து உறவுகளையும் நினைவுகூர்ந்து, எம்மரபை மீள நிலைநிறுத்த ஒன்று கூடுவோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# வன்புணர்வின்பின் மரணமடைந்த சரண்ஜாவின் வழக்கு விசாரணை நாளை வவு.நீதிமன்றத்தில்

(குருமன்காடு)

வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்ட நிலையில் மரணமடைந்ததாக சந்தேகிக்கப்பட்ட நிலையில் தோண்டி எடுக்கப்பட்ட சரண்ஜாவின் சடலம் உடல்கூற்று பரிசோதனையின் பின் மீண்டும் புதைக்கப்பட்டது.

இதேவேளை, இது தொடர்பான வழக்கு விசாரணை நாளை திங்கட்கிழமை வவுனியா நீதிமன்றில் இடம்பெறவுள்ளது. அதன் போது உடல்கூற்று பரிசோதனை அறிக்கை மன்றில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த பெப்ரவரி 27 ஆம் திகதி கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்த செல்வராஜா சரண்ஜா (வயது 16) என்ற சிறுமியின் மரணத்தில் சந்தேகம் உள்ளதாகவும், சிறுமி வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் உறவினர்கள் சந்தேகம் வெளியிட்டதையடுத்து சட்டத்தரணிகள் ஊடாக வவுனியா நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. சிறுமியின் மரணம் தொடர்பாக வைத்திய அறிக்கையிலும் குழப்பமான நிலை காணப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் நீதிமன்றத்தினால் மார்ச் மாதம் 6 ஆம் திகதி சடலத்தை தோண்டியெடுத்து கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு மருத்துவ பரிசோதனைக்காக அனுப்புமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இதற்கமைவாக வவுனியா மாவட்ட நீதவான் முகமட் ரிஸ்வான், யாழ்.மாவட்ட சட்ட வைத்திய நிபுணர் ருத்திரபதி மயூரதன், கனகராயன்குளம் பொலிஸார் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் தோண்டி எடுக்கப்பட்டு உடல் கூற்று பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்ட சடலம் பரிசோதனை முடிவடைந்த நிலையில் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டு நேற்று முன்தினம் கனகராயன்குளம் மயானத்தில் மீண்டும் புதைக்கப்பட்டது.(2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவியின் கொலையை கண்டித்து நல்லூரில் இன்று கவனயீர்ப்பு போர்

## இளைஞர்களால் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

**புங்குடுதீவில் படுகொலை செய்யப்பட்ட மாணவியின் கொலையை கண்டித்து யாழ்.இளைஞர்கள் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது. இப் போராட்டம் இன்று ஞாயிறுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நல்லூர் ஆலயத்தின் முன்பாக இடம்பெறவுள்ளது.**

பாதிக்கப்பட்ட மாணவியின் குடும்பத்திற்கு நீதி கிடைக்கக் கோரியும் குற்றவாளிகளை கண்டறிந்து அவரகள்மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கோரியுமே இப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பெண்ணியத்தை காப்பதோடு இதுபோன்ற சம்பவங்கள் இனியும் தொடராதவாறு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியதை வலியுறுத்தியுமே இப் போராட்டம் தொடரவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

நண்பர்களே, நம் இனம் சார்ந்த உரிமைக்குக் குரல் கொடுப்போம், பெண்ணியம் காக்க திரண்டு வாரீர்!!! என இப் போராட்டத்திற்கு வலுச் சேர்த்து வேறுபாடுகள் எதுவுமின்றி அனைவரும் கலந்து கொண்டு ஆதரவளித்து பாதிக்கப்பட்ட மாணவியின் குடும்பத்திற்கு நீதி கிடைக்கவும் குற்றவாளிகளை கண்டறிந்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வலியுறுத்துமாறும் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (இ-9)

# உணர்வுபூர்வமாக நினைவுகூர அனைவரும் அணிதிரள வேண்டும்

எம் உறவுகள் கொன்றொழிக்கப்பட்ட நினைவு தினமான மே 18 ஐ உணர்வு பூர்வமாக நினைவுகூர அனைவரும் அணி திரள வேண்டும் என சிறீரெலோ கட்சியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2009 ஆம் ஆண்டு இறுதிக் கட்ட யுத்தத்தின் போது, எம் உறவுகள் கொத்துகொத்தாக கொன்றொழிக்கப்பட்ட நினைவு நாளாக, மே 18 நினைவுகூரப்பட்டு வந்தாலும் கடந்த கால ஆட்சியாளர்களால் பல தடைகள் விதிக்கப்பட்டு நினைவுகூருபவர்கள் அச்சுறுத்தப்பட்டுவந்தனர்.

ஆனால் புதிய ஆட்சியாளர்கள் இத்தினத்தினை நினைவுகூர அனுமதி வழங்கியிருப்பது நல்ல ஆரம்பமாகவே தெரிந்தாலும் எம் பிரச்சினைகளுக்கு தீர்வு இது அல்ல.

மே 18 வாரமானது தமிழர்களின் மனங்களில் என்றென்றும் நிலைத் திருக்கும்.

அடைக்கலம் தேடி வந்தவர்கள் அடக்கப்பட்டு அழிக்கப்பட்ட காலமாகும்.

இக்காலம் உலகம் கண்டிராத கொடுமையான காலமாகும். எம்மவர்களின் நெஞ்சங்களில் அழியாத வடு. எத்தனை சந்ததிகள் வந்தாலும் அவர்களின் நெஞ்சங்களில் இந்த ரணம் இருக்கத்தான் போகின்றது. இந்நாளினை நினைவுகூருவது ஒவ்வொரு தமிழனினதும் கடமையும் உரிமையுமாகும்.

எனவே எதிர்வரும் மே 18 அன்று எம் உறவுகளின் நினைவுநாளினை அரசியல் பேதங்களை மறந்து உணர்வுபூர்வமாக நினைவேந்தல்களை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 60 | 70-80 | 70 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 50 | 40 | 40 |
| தக்காளி | 80 | 100 | 50 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 50 | 40 |
| கோவா | 80 | 60 | 80 | 50-70 | 60 |
| கரட் | 150 | 100 | 140 | 160 | 100 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 30 |
| புடோல் | 60 | 50 | 80 | 60-80 | 70 |
| வாழைக்காய் | 60 | 50 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 120 | 90 | 120 | 50-100 | 90 |
| பெரிய வெங்காயம் | 120 | 110 | 130 | 140 | 130 |
| பாகற்காய் | 160 | 100 | 80 | 100-160 | 100 |
| வெண்டிக்காய் | 150 | 50 | 80 | 60-80 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 100 | – | 80 |
| பயற்றங்காய் | 180 | 120 | 100 | 150-200 | 240 |
| லீக்ஸ் | 160 | 130 | 180 | 140 | 160 |
| பீற்றூட் | 80 | 60 | 100 | 60 | 50 |
| கறிமிளகாய் | 100 | 70 | 100 | 70 | 80 |
| முருங்கைக்காய் | 350 | 300 | 400 | 200-300 | 400 |
| போஞ்சி | 200 | 150 | 160 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 40 | 40 | – | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 40 | 40 | 30-50 | 30 |
| தேசிக்காய் | 150 | 140 | 150 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 130 | – | 120 | 140 | 120 |
| வெங்காயப்பூ | – | – | - | – | - |
| முள்ளங்கி | 50 | 60 | 80 | 50 | 50 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 10 | 20 |

# வாழும் கலைப்பயிற்சி பாகம்-1 நாளை ஆரம்பம்

பூஜ்ய ஸ்ரீ ரவிசங்கர் குருஜியினால் வடிவமைக்கப்பட்ட வாழும் கலைப் பயிற்சி பாகம் -1 (ஆனந்தஅனுபவம்-1) நாளை 18ஆம் திகதி திங்கட்கிழமையிலிருந்து 24 ஆம் திகதி வரை தினமும் மாலை 5.30 மணிமுதல் இரவு 7.30 மணிவரை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


பெங்களூர் வாழும் கலை ஆச்சிரம ஆசிரியர் டி.சாயிராம்ஜி கலைப்பயிற்சிகளை வழங்குவார். எளிமையான யோகாசனங்கள், பிராணாயாமம், சக்தி வாய்ந்த சுதர்சனாக் கிரியா எனும் மூச்சுப் பயிற்சி, தியானம், ஆன்மீக அறிவு ஆகிய பயிற்சிகள் இடம்பெறவுள்ளன. இதில் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் சமய பால் வேறுபாடின்றி கலந்து கொள்ளலாம். (இ-7)

### காஞ்சி சங்கராச்சாரியார் இலங்கைக்கு வருகிறார்

காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயந்திர சரஸ்வதி சுவாமிகள், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் இலங்கை வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கான அழைப்பை அவர் ஏற்றுக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கும், மலையக பகுதிக்கும் விஜயம் செய்வார் என்று பிரதமர் தெரிவித்தார். (இ-5)



### நோய் எதிர்ப்பு முறையின் தந்தை எட்வர்ட் ஜென்னர்

எட்வர்ட் ஆண்டனி ஜென்னர் இங்கிலாந்திலுள்ள பெர்க்லி என்ற நகரில் 1749-ஆம் ஆண்டு மே 17-ஆம் திகதி பிறநதார். இவர் இங்கிலாந்து நாட்டு மருத்து வரும் அறிவியலாளரும் ஆவார்.

பெரியம்மை நோய்க்கு தடுப்பு மருந்து கண்டுபிடித்ததற்காக ஜென்னர் அறியப் படுகிறார். இவர் நோய் எதிர்ப்பு முறையின் (நிர்ப்பீடனம்) தந்தை என சிறப்பு பெற்றார். இவருடைய கண்டுபிடிப்பு பிற கண்டுபிடிப்புகளைக் காட்டிலும் மனித உயிர்களை கொடிய நோயிலிருநது காப்பாற்ற உதவியது.

ஏழாண்டுகள் அறுவைச் சிகிச்சைப் பயிற்சியின் பின் ஒரு சிறந்த அறுவை சிகிச்சை நிபுனராகத் தேர்ந்தார். அந்த சமயத்தில் பண்ணை மக்களிடையே நிலவிய ஒரு நம்பிக்கை ஜென்னருக்கு அம்மை நோய்க்கு மருந்து கண்டறிய வேண்டும் என்ற எண்ணத்தை விதைத்தது. "கௌபாக்சு" எனப்படும் பசுக்களின் மடிக்காம்புகளை புண்ணாக்கும் ஒரு நோய ஒரு மனிதனுக்கு ஒரு தடவை ஏற்பட்டு விட்டால் அதே மனிதனுக்கு பெரியம்மை நோய வராது என்பதுதான் அந்த நம்பிக்கை.

எனவே பெரியம்மை நோய் வராமல் தடுக்க "கௌபாக்சு" நோயை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் நம்பினர். அதற்காக சுமார் இருபது ஆண்டுகள் விடாமல் பல்வேறு ஆராய்ச்சிகளை செய்தார்.

1796-ஆம் ஆண்டு மே 14-ஆம் திகதி தனது தோட்டக்காரரின் மகனான ஜேம்ஸ் பிப்ஸ் என்ற எட்டு வயது சிறுவனுக்கு அம்மைக்கான தடுப்பூசி போட எத்தனித்தார் ஜென்னர். சாரா நில்மெசு என்ற பண்ணைப் பெண்ணின் கையிலிருந்த கௌபாக்சு கொப்புளத்திலிருந்து எடுத்த பாலை ஊசி மூலம் ஜேம்ஸ் பிப்ஸின் உடலுக்குள் செலுத்தினார். எதிர்பார்த்தது போலவே அச்சிறுவனுக்கு கௌபாக்சு நோய் ஏற்பட்டது. ஆனால விரைவில் குணமடைந்தான்.

சில வாரங்கள் கழித்து பெரியம்மை கிருமியான அம்மைப் பாலை ஊசி மூலம் அதே சிறுவனுக்கு செலுத்தினார். ஆனால் ஜென்னர் சற்றும் மனம் தளராமல் அந்த தடுப்பூசியை சிறுவனுக்குக் குத்தினார். கிராமவாசிகள் எண்ணியதைப் போலவே, ஜென்னர் ஆராய்ச்சி செய்து உறுதிப்படுத்தியது போலவே அந்த சிறுவனுக்கு பெரியம்மை நோய் ஏற்படவில்லை. சிறுவனை இரகசியமான முறையில் பெற்றோரின் அனுமதியின்றி, சிறுவனுக்கு தெரியப்படுத்தாமல் இப்பரிசோதனையை அவர் மேற்கொண்டமையை தற்போது மருத்துவ ஒழுக்கவியல் தவறான அணுகு முறை என சுட்டிக்காட்டுகிறது. ஆயினும், அம்மைக்கான தடுப்பூசி கிடைத்துவிட்டது என்பதை உறுதி செய்தமைக்கும், ஜேம்ஸ் பிப்ஸ் என்ற அந்த சிறுவனுக்கும் மருத்துவ வரலாற்றில் அழியா இடம் கிடைத்தது.

அவரின் கண்டுபிடிப்புக்கும் சேவைக்குமாக பிரித்தானிய அரசின் பரிசில்களையும் விருதுகளையும் பெற்றார். இயற்கையை அளவில்லாமல் நேசித்த ஜென்னர் தனது கண்டுபிடிப்புக்கு காப்புரிமை பெற நினைக்காமல் அதனை உலகுக்கு இலவசமாக வழங்கினார். ஏழை எளியவர்களுக்கு இலவசமாக அம்மைக் குத்தினார். ஒவ்வொரு நாளும் அவரின் மருத்துவ அறைக்கு முன் முன்னூறு ஏழை மக்கள் வரை வரிசை பிடித்து நின்று அம்ம்மக்கான தடுப்பூசியை போட்டுக்கொண்டனர்.

1823-ஆம் ஆண்டு பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட இவர் ஜனவரி 26-ஆம் திகதி தனது 73-ஆவது அகவையில் காலமானார்.

# 17 05.2015 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1498 - வாஸ்கொடகாமா இந்தியாவின் கோழிக் கோட்டை அடைந்தார்.
- 1521 - பக்கிங்ஹாமின் மூன்றாவது நிலை சீமானான (Duke) எட்வேர்ட் ஸ்டாஃபேர்ட் தூக்கிலிடப் பட்டான்.
- 1590 - டென்மார்க்கின் ஆன் ஸ்கொட்லாந்து அரசியாக முடிசூடினாள்.
- 1792 - நியூ யோர்க் பங்குச் சந்தை ஆரம்பிக்கப்பட்டது.
- 1809 - பிரெஞ்சுப் பேரரசுடன் இத்தாலியின் திருச்சபை நாடுகளை இணைக்க முதலாம் நெப்போலியன் ஆணையிட்டான்.
- 1814 - நோர்வே நாட்டின் அரசியல் நிர்ணயம் அமைக்கப்பட்டது.
- 1846 - அடொல்ஃப் சாக்ஸ் என்பவரால் சாக்சபோன் வடிவமைக்கப்பட்டது.
- 1865 - அனைத்துலகத் தொலைத் தொடர்பு மையம் ஏற்படுத்தப்பட்டது. இது பின்னர் அனைத்துலகத் தொலைத்தகவல் தொடர்பு மையம் எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- 1915 - பிரித்தானியாவின் கடைசி லிபரல் கட்சி ஆட்சி வீழ்ந்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனி பெல்ஜியத்தின் பிரசல்ஸ் நகரைக் கைப்பற்றியது.
- 1969 - சோவியத்தின் வெனேரா 6 விண்கலம் வீனஸ் கோளின் வளிமண்டலத்துள் சென்று வீனசில் மோத முன்னர் வளிமண்டலத் தரவுகளை பூமிக்கு அனுப்பியது.
- 1983 - லெபனானில் இருந்து இஸ்ரேல் வெளியேறுவதற்கான உடன்பாடு லெபனான், இஸ்ரேல், ஐக்கிய அமெரிக்கா ஆகியவற்றுக்கிடையில் எட்டப்பட்டது.
- 2006 - தமிழ்த் தொலைக்காட்சி நடிகை ஷ்ரத்தா விஸ்வநாதன் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.
- 2009 - தமிழினப் படுகொலை நாள். வன்னிப் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் இலங்கை அரசபடைகளால் படுகொலை செய்யப்பட்டனர். நான்காம் கட்ட ஈழப்போர் முடிவுக்கு வந்தது.

**பிறப்புகள்**

- 1749 - எட்வர்ட் ஜென்னர் - ஆங்கில மருத்துவ ஆராய்ச்சியாளர் (இ. 1823)
- 1920 - பி. சாந்தகுமாரி, நடிகை, பாடகி
- 1974 - செந்தில் ராமமூர்த்தி, அமெரிக்க நடிகர்

**இறப்புகள்**

- 2007 - நகுலன், தமிழ் எழுத்தாளர்

**சிறப்பு நாள்**

உலகத் தொலைத்தகவல் தொடர்பு தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்வதைத் தடுக்காதீர்

## மாதுளுவாவே சோபித தேரர்

(கொழும்பு)

**யுத்தத்தில் உயிர் நீத்த இராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதைப் போல் வடக்கில் உயிரிழந்த பொதுமக்களையும் நாம் நினைவுகூரவேண்டும். தமிழ் மக்களை மட்டும் தடுப்பது அவர்களின் உரிமைகளையும் உணர்வுகளையும் பறிக்கும் செயல் என சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.**


யுத்தத்தில் உயிரிழந்த பொது மக்களை நினைவுகூருவதில் தடைகள் இருக்கின்ற நிலையில் அது தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த மூன்று தசாப்த காலமாக நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாதம் நாட்டை தேசிய ரீதியில் பிளவுபடுத்தியது. இன ரீதியான முரண்பாடுகள் தோன்றி இன்றுவரை இனப் பிரச்சினை வேரூன்றி இருப்பதற்கு பயங்கரவாதமே பிரதான காரணமாகும். அவ்வாறான நிலைமையில் பயங்கரவாதத்தில் இருந்து இந்த நாடு விடுபட்டுள்ளளது.

ஆயுதப் போராட்டம் முற்றாக முடிவுக்கு கொண்டுவந்த பின்னரும் கடந்த ஐந்து ஆண்டுகளில் தொடர்ச்சியாக யுத்த வெற்றியை மட்டுமே சுட்டிக்காட்டி அரசாங்கம் ஆட்சி செய்தது. ஆயுதப் போராட்டம் வடக்கில் மக்களிடையே மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த நிலையில் தொடர்ச்சியாக அம்மக்களை பயங்கரவாதிகளாக சுட்டிக் காட்டிஇனவாத அரசியலைமுன்னைய தலைவர்கள் கையாண்டார்கள்.

இந்த நிலைமையில் தான் கடந்த ஆறு யுத்த வெற்றி தினங்களும் கொண்டாடப்பட்டன. ஆனால புதிய அரசாங்கம் இம்முறை மே 19ஆம் திகதியை யுத்த வெற்றி தினமாக கொண்டாடாது இராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் தினமாக அனுஷ்டிக்க நினைத்திருப்பது வரவேற்கத்தக்கது.

அதேவேளை வடக்கில் யுத்தத்தில உயிரிழந்த பொதுமக்களையும் நாம நினைவுகூர வேண்டும். விடுதலைப் புலிகள் நாட்டில் பயங்கரவாத செயல்களை செய்தாலும் அது வடக்கில் பொதுமக்களையே பாதித்தன. கடந்த அரசாங்கத்தில் யுத்தம் வெற்றி கொள்ளப்பட்ட போதிலும் வடக்கு மககள்பல துன்பங்களை அனுபவித்தனர்



தமது காணிகளை பறிகொடுத்து அநாதைகளாகவே கடந்த ஐந்து ஆண்டுகளாக வாழ்ந்தனர். எனினும் இந்த ஆட்சியில் அவர்களின் நிலங்களை மீண்டும் அவர்களிடம் கையளித்தமை அரசாங்கம் செய்த மிகப்பெரிய செயலாகும். அதே போல் ஒவ்வொரு முறையும் வடக்கில் பொதுமக்களை நினைவு கூர்ந்தால் இராணுவத்தினால் அச்சுறுத்தப்படுவதும் கைது செய்யப் படுவதுமே இடம்பெறும்.

இது அந்த மக்களின் உரிமைகளை பறிக்கும் செயலாகும். அவர்களின் உறவுகளுக்காக விளக்கேற்றி அனுதாபம் தெரிவிப்பது அவர்களின் உரிமை. அதை அரசாங்கததினால் தடுக்க முடியாது. ஆனால் விடுதலைப் புலிகளை நினைவுகூர்ந்து வடக்கில் எந்த செயற்பாடுகளும் நடைபெறுவது நாட்டில் மீண்டும் பிரச்சினைகள் உருவாக சந்தர்ப்பமாக அமைந்துவிடும். அதை மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்.

ஒரு சில அமைப்புக்களை சேர்ந்தவர்கள் மீண்டும் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த இவ்வாறாக முயற்சிப்பார்கள். ஆனால் மக்கள் அதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் இடம் கொடுக்கக் கூடாது. தமிழ் மக்களுக்கும் சேர்த்தே இந்த பயங்கரவாதம் வெற்றிகொள்ளப்பட்டது. இந்த வெற்றியை தமிழ் மக்களும் அனுபவிக்க வேண்டும்.

இந்த நாட்டில் இனி ஒரு சந்தர்ப்பத்திலும் இனப்பிரச்சினை தலை தூக்கக்கூடாது. இனவாத அரசியலுக்கு புதிய அரசாங்கம் முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. இனி இனவாதிகள் அதிகாரத்தை கைப்பற்ற முடியாது என்பதை மக்கள் ஆட்சி யாளர்களுக்கு சொல்லிவிட்டனர். எனவே வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் சம அளவில் மனித உரிமைகள் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3-5)

# நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் 5ஆண்டுகளாக வரையறுக்கப்படும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய தேர்தல் முறைமை மாற்றம் குறித்த சட்டத்தில் நாடாளுமன்றின் பதவிக் காலத்தை ஐந்து ஆண்டுகளுக்குவரையறுக்கயோசனை முன்வைக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஐந்து ஆண்டுகளாக குறைக்க வேண்டுமென சட்ட வல்லுநர்களோ அல்லது அரசியல் தரப்புகளோ கூறவில்லை.

நானாகவே ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஐந்து ஆண்டுகளாக குறைக்க வேண்டுமென 19 ஆம் திருத்தச் சட்டத்தில் அதனை உள்ளடக்க பரிந்துரை செய்தேன்.

தற்போதைய சட்டங்களின் அடிப்படையில் நாடாளுமன்றம் செல்லும் ஒருவர் ஆறு ஆண்டுகள் பதவி வகிக்கின்றார். உலகின் வேறு எந்த நாட்டிலும் ஜனாதிபதிக்கோ, நாடாளுமன்றிற்கோ ஆறு ஆண்டுகள் பதவிக் காலம் கிடையாது.

மககளின் வாக்குகளைப் பெற்றுக்கொண்டு பதவிகளை ஏற்றுக் கொண்ட எவரும் அதிகாரத்தைப் பயன்படுத்தி பதவிக் காலத்தை நீடித்துக்கொள்ளக் கூடாது.

அவ்வாறு செய்வது நல்லாட்சியாக அமையாது.


. உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் நீடிக்கப்பட மாட்டாது.

இவ்வாறு அக்குரன பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். (3-5)

# கோத்தாவை கைது செய்யும் தடையுத்தரவில் சிக்கல்கள்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

நாட்டின் அரசியலமைப்பின்படி உச்ச நீதிமன்றத்தினால் தடையுத்தரவு பிறப்பிக்க சம்பந்தப்பட்ட நீதிபதிகள் குழுவில் மூன்று நீதிபதிகள் இடம்பெறுவது முக்கியம், என்றும் கோத்தபாய ராஜபக்ஷவின் கைதை தடை செய்யும் உத்தரவை இரண்டு நீதிபதிகளே பிறப்பித்துள்ளதால் இதில் சிக்கல்கள் நிலவுவதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



இது தொடர்பில் சிக்கல்கள் உள்ளதாக தமது சட்டத்தரணிகள் தம்மிடம் தெரிவித்ததாகவும் இந்தத் தடையுத்தரவு அரசியலமைப்புக்கு அமைவாக இல்லாவிடில் இதனை நடைமுறைப்படுத்த முடியுமா என்பது சமபந்தமாக சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெறுவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ள பௌத்த மாநாடு தொடர்பில், நேற்று முன்தினம் அலரிமாளிகையில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீதான நீதிமன்ற தடையுத்தரவு தொடர்பில் கேள்வி எழுப்பிய போதே பிரதமர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷவின் அடிப்படை உரிமை மனுவின் பிரதி தமக்குக் கிடைத்துள்ளதாகவும் அந்த கோவை 600 பக்கங்களை கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்ட பிரதமர் அதனைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக தமது சட்டத்தரணிகளிடம் கையளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எனினும் நீதிமன்றத்தினால் வெளியிடப்பட்டுள்ளதாக ஊடகங்களில் குறிப்பிடப்பட்ட தடையுத்தரவின் பிரதி தமக்குக் கிடைக்கவில்லையென சுட்டிக்காட்டிய பிரதமர், தமக்குத் தெரிந்த வரையில் நீதிமன்றம் இன்னும் குறித்த தடை உத்தரவை வெளியிடவில்லை

அது காலதாமதமாகுவதாகவும், நீதி காலதாமதமாகும் போது நீதி நிராகரிக்கப்படலாம் என்பதே சட்டத்தின் சித்தாந்தம் என்றும் தெரிவித்தார்.

பதில் கொடுப்பதற்கான அவகாசம் ஒக்டோபர் வரை காலதாமதமாகுமானால் புதிய அமைச்சரவைக்கே பதில் கொடுக்க வேண்டியேற்படும் என்றும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (3-5)

# வாரம் ஒரு தகவல்

## சரித்திரச் சம்பவம்

"நல்வாழ்த்துக்கள்"

"என்ன... திடீரென்று"

"இன்றைக்கு உங்களுடைய பிறந்தநாள் சேர்"

"ஓ... மறந்துவிட்டேன்"

"என்ன இது... நீங்கள் ஒரு சரித்திரப் பேராசிரியர். சரித்திரக்கால சம்பவங்களையெல்லாம் சரியாக ஞாபகம் வைத்திருக்கிறீர்கள், ஆனால் உங்களுடைய பிறந்தநாளை மறந்து விடுகிறீர்கள்"

"ஹி! அது இருக்கட்டும். உங்களுக்கு ஒரு விடயம் தெரியுமா?

"என்ன... சரித்திர விடயம் ஏதாவது சொல்லப் போகிறீர்களா?"

"ஆமாம். 1957 இல் நடந்த சம்பவம் செக்கோஸ்லாவாக்கியாவில் சாத்தான் ஏரி என்று ஒரு ஏரி உண்டு. அந்த ஏரியில் ஒரு பையன் தவறி விழுந்து விட்டான். அவனைத் தேடி நீச்சல் வீரர்கள் போனார்களாம். ஒரு ஆழமான இடத்தில் ஏரியின் தரைப் பகுதியில் குதிரைகள் பீரங்கி சகிதமாக ஜேர்மன் படைப்பிரிவு ஒன்று போருக்கு தயாராக காத்துக் கொண்டி ருந்ததாம்"

"ஆச்சரியமாக இருக்கே... அது எப்படி?" "நீச்சல் வீரர்கள் கரையேறி வந்து இந்த விடயத்தை கூறியதும் எல்லோருக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்ததாம். ஆனால் அதன் பின்னர் பலர் ஆராய்ச்சி செய்து உண்மையைக்கண்டு பிடித்தார்களாம்"

"என்ன அது?"

"1945 இல் இரண்டாவது உலகப்போரின் இறுதிக் கட்டத்தை நாஜிப்படைகள் ரஷ்யக் குளிருக்குப் பயந்து பின்வாங்கியதால் அல்லவா? அப்போது ஜேர்மன் படைப்பிரிவொன்று இந்த ஏரி வழியாக ஓடிவந்து கொண்டிருந்தபோது பனிப்பாறை பிளந்து உள்ளே போய்விட்டது. அப்படியே சமாதியாகி விட்டது. அதைத்தான் இந்த வீரர்கள் பார்த்துவிட்டு ஆச்சரியப்பட் டிருக்கிறார்கள்"

"உங்களிடம் வந்துவிட்டால் பழையகால சமாச்சாரங்களுக்கு பஞ்சமேயில்லை சேர். செவிக்கு விருந்து கொடுத்து விட்டீர்கள். உங்கள் பிறந்தநாள் அதுவுமாக வாய்க்கும் அதுமாதிரி ஏதாவது கொடுக்கக் கூடாதா"

"இதோ வைத்திருக்கிறேனே லட்டு. எடுத்துச் சாப்பிடுங்க"

"தாங்ஸ் சேர். உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதோ இல்லையோ... சென்ற வருடம் உங்கள் பிறந்தநாளுக்கும் லட்டுத் தான் கொடுத்தீர்கள். அதுவும் நன்றாக இருந்தது. அதேபோல் இதுவும் நன்றாக இருக்கிறது"

"அதில் ஒன்றும் ஆச்சரியமில்லை"


"ஏன்?" "அதுவேதான் இதுவும். அப்பொழுது தயார் பண்ணியதுதான்"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 15.05.2015~15.06.2015



**சனி பகவான் அருளால் பண வரவு அதிகரிக்கும்! அதிகார பதவியில் உள்ளவர்களையும் அடிபணிய வைக்கும் தனுசு இராசி நேயர்களே!**

# சனி பகவான் அருளால் பணவரவு அதிகரிக்கும்!

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ராசி நாதன் குரு 8இல் சஞ்சரிக்கின்றார். அதன் பார்வை 8 இற்கு அதிபதியான சந்திரனின் மீது பதிகின்றது. எனவே, இழப்புகளை ஈடு செய்யும் வாய்ப்பு இம்மாதத்தில் அமையும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கவில்லையே என்று நினைத்தவர்களுக்கு இம்மாதம் ஏற்படும் சனியின் வக்ர இயக்கத்தின் மூலம் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கப் போகின்றது.

வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வசதிகள் பெருகும். இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி வக்ர இயக்கத்தில் இருந்தாலும் கூட தனாதிபதியாகவும், சகாய ஸ்தானாதிபதியாகவும் உங்கள் ராசி அடிப்படையில் விளங்குவதால் தன விருத்திக்கு குறைவு ஏற்படாது. குருவின் பரிபூரண பார்வையும் 2, 12 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே விரயத்திற்கேற்ற லாபம் வந்து கொண்டே இருக்கும். வீடு மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும்.

அந்நிய தேசத்திலிருந்து வரும் அழைப்புகளை யோசித்து ஏற்றுக் கொள்ள முன்வருவீர்கள். அலைச்சல் ஏற்பட்டாலும் அதற்கேற்ற ஆதாயம் கிடைக்கும். வாரிசுகளால் ஏற்பட்ட தொல்லை அகலும். கூட்டாளிகளில் ஒரு சிலரை விலக்கி விட்டு புதியவர்களைச் சேர்த்துக் கொள்ள முன்வருவீர்கள். என்ன இருந்தாலும் சனியின் வக்ர காலம் உங்களுக்கு நற்காலமாகவே அமையும்.

எனவே சனி பகவான் வழிபாட்டை முறையாக மேற்கொள்ளுங்கள். சனிக்கிழமை தோறும் நீங்கள் கடைப்பிடிக்கும் விரதமும், வழிபாடுகளுமே உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும்.

**வக்ர புதனின் ஆதிக்கம்!**

புதன் மே 24 ஆம் திகதி மேடத்திற்கு வக்ரமாக செல்கிறார். 7, 10 இற்கு அதிபதி வக்ரம் பெறுவது நன்மைதான். 5 இல் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளின் எதிர்கால திட்டங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். மாமன், மைத்துனர் வழி யில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். ஜூன் 6 ஆம் திகதி இடப புதனின் சஞ்சாரத்தால் உத்தியோகத்தில் உள்ள குழப்பங்கள் அகலும். அரசியல்வாதிகளால் அனுகூலம் கிடைக்கும். கடன் சுமை குறையும்.

**கடக சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிநாதன் குரு. அவருக்கு பகை கிரகமாக விளங்குபவர் சுக்ரன். இந்த இரண்டு முரண்பாடான கிரகங்களின் சேர்க்கை ஒரு சில சமயங்களில ஏற்படுவதுண்டு. அதுபோன்ற காலங்களில திடீர், திடீர் என்று மாற்றங்களும், திகைப்படைய வைக்கும் செய்திகளும் வந்து கொண்டே இருக்கும். திசாபுத்தி வலுவாக இருப்பவர்களுக்கு தித்திக்கும் செய்தி வந்து சேரும். இந்த நிகழ்வு மே 30 ஆம் திகதிக்கு மேல் நிகழவிருக்கிறது. கடகத்தில் உச்சம் பெற்றிருக்கும் குருவோடு சுக்ரன் சேரப்போகிறார், எனவே குடும்பததில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும். கொடுக்கல்-வாங்கல்களில் திருப்தி நிலவும்.

**சனியின் வக்ர இயக்கம்!**

ஜூன் 12 ஆம் திகதி துலாம் ராசியில் சனி வக்ரம் பெற்றுச் செல்கிறார்.




இதன் விளைவாக ஏழரைச்சனியில் உள்ள விரயச் சனியின் ஆதிக்கம் மாறுகிறது. விரயச் சனி காலத்தில் விழிப்புணர்ச்சி இல்லாவிட்டாலும் விரயங்களே கூடும். வரவைக் காட்டிலும் செலவு அதிகரிக்கிறதே என்ற கவலை மேலோங்கும். ஆனால் இப்பொழுது லாப ஸ்தானத்தில் சனி உச்சம்பெற்று வக்ரம் பெறுகிறார். எனவே தொழில் வளம் மேலோங்கும்.

**மிதுனச் செவ்வாயின் சஞ்சாரம்!**

5, 12இற்கு அதிபதியான செவ்வாய் 7 ஆம் இடத்தில் ஜூன் 15 ஆம் திகதி சஞ்சரிக்கப் போகின்றார். பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் பெருகும. வாரிசுகளுக்கு தேடிய வரன்கள் முடிவாகி திருமண வாய்ப்புகள் கைகூடும். உடல் ஆரோக்கியம் சீராகி உற்சாகத்தோடு இயங்க முடியும். உடன்பிறப்புகளும் உங்கள் பணிக்கு உறுதுணையாக இருப்பர். இம்மாதம் விநாயகப் பெருமான் வழிபாடு விருப்பங்களை நிறைவேற்றும். வைகாசி விசாகத்தன்று வடிவேலன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் சுபவிரயங்கள் அதிகரிக்கும் மாதமாகும். விரயச் சனி மாறப்போவதால் வீண் விரயங்களிலிருந்து விடுபடுவீர்கள். நூதனப் பொருள் சேர்க்கை அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை கூடும். குருச்சந்திர யோக அடிப்படையில் மங்கல நிகழ்ச்சிகள் நடப்பதற்கான அறிகுறிகள் தென்படும்.

பக்குவமாகப் பேசி பல காரியங்களை சாதித் துக் கொள்வீர்கள். குழந்தைகளின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சி கைகூடும். கல்யாண வாய்ப்புகளும வந்து சேரும். சனி பகவான் வழிபாடு சந்தோஷத்தை வழங்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**வாரிசுகளின் வளர்ச்சி கண்டு மகிழும் நேரம்! சகிப்புத் தன்மையால் நாளும் சந்தோஷத்தை சந்திக்கலாம் என்று கூறும் மகர இராசி நேயர்களே!**

# வாரிசுகளின் வளர்ச்சி கண்டு மன மகிழும் நேரம் இந்நேரம்

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது குருவின் பரிபூரண பார்வை உங்கள் ராசியில் பதிவாகிறது. ராசிநாதன் சனி, மாதத் தொடக்கத்தில் வக்ர இயக்கத்தில் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். பஞ்சமாதிபதியும், 6இற்கு அதிபதியும் பரிவர்த்தனை பெற்றிருக்கிறார்கள். புத ஆதித்ய யோகம் இருக்கிறது. இந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, இம்மாதம் இனிய மாதமாகவே அமைகின்றது.

எடுத்த காரியத்தை எளிதில் முடித்து வெற்றி காண்பீர்கள். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க நண்பர்கள் ஒத்துழைப்புச் செய்வர்.

இம்மாதத்தில் சனி வக்ர இயக்கத்தில் பின்னோக்கிச் செல்கிறார். உங்கள் ராசி அடிப்படையில் பார்க்கும் பொழுது தொழில் ஸ்தானத்திற்குத் தான் செல்கின்றது. அது சனிக்கு உச்ச வீடாகின்றது. அங்கு சனி வக்ரம் பெற்று சஞ்சரிக்கும் பொழுது தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்யும். புதிய ஒப்பந்தங்கள் வந்தாலும் வக்ரம் பெற்றிருப்பதால் அதை ஏற்றுக் கொள்ள இயலாது.

பணியாளர்களின் ஒத்துழைப்போடு தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள். சுக்ரன் 5, 10இற்கு அதிபதியாகி 6 இல் பரிவர்த்தனை பெற்றிருப்பதால் பெண்வழிப் பிரச்சினைகள் அகலும். பூர்வீக சொத்துக்களில் ஏற்பட்ட பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். வக்ரம் பெற்ற சனியால் வளர்ச்சி அதிகரிக்க தொடர்ந்து சனி பகவான் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**வக்ர புதனின் ஆதிக்கம்!**

உங்கள் ராசிக்கு 6, 9இறகு அதிபதியானவர் புதன். அவர் மே 24 ஆம் திகதி மேட ராசிக்கு வக்ரமாக செல்கிறார். 6இற்கு அதிபதி வக்ரம் பெறுவது ஒரு வழிக்கு நன்மைதான். கடன் சுமை குறைய வழிபிறக்கும். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்கிச் சேர்க்க முற்படுவீர்கள். வாங்கிய கடனைக் கொடுக்கவில்லையே என்ற கவலை அகலும். 3 இல் கேது இருப்பதால் உடன்பிறப்புகளை மட்டும் அனுசரித்துக் கொள்வது நல்லது. அதே நேரத்தில் ஜூன் 6 ஆம் திகதி இடபத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். எனவே, உறவினர் பகை அகலும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். மறைமுக எதிர்ப்புகள் மாறும். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு கிடைத்து சேமிப்பு அதிகரிக்க வழிபிறக்கும்.

**கடக சுக்ரனின் சஞ்சாரம்!**

மே மாதம் 30 ஆம் திகதி சுக்ரன் கடகத்தில் சஞ்சரிக்கப் போகிறார். 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதி 7 இல் சஞ்சரிக்கும் பொழுது இல்லறம் நல்லறமாகும். முக்கியப் புள்ளிகளின் ஒத்துழைப்போடு குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றியாகும். பெண்வழிப் பிரச்சினை அகலும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. விட்டுப் போன வரன்கள் மீண்டும் வந்து வீட்டில் கெட்டி மேளம் கொட்ட வைக்கும் வாய்ப்பை உருவாக்கலாம்.

**சனியின் வக்ர காலம்!**

ஜூன் 12 ஆம் திகதி துலாம் ர்ராசியில் சனி வக்ரம் பெற்று சஞ்சரிக்கப் போகிறார். ராசிநாதன் உச்சம் பெற்றாலும் வக்ர இயக்கத்தில் அல்லவா இருக்கின்றார். எனவே தொழிலில் நண்பர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் நடைபெறுமா? என்பது சந்தேகம்தான். உங்கள் மேற்பார்வையிலேயே அனைத்தையும் வைத்துக்கொள்வது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்கள் கூடுதல் நன்மை அடைவர். தனாதிபதியாகவும் சனி விளங்குவதால் தனவரவில் தடைகள் ஏற்படாது.




**மிதுன செவ்வாயின் ஆதிக்கம்!**

ஜூன் 15 ஆம் திகதி மிதுன ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 4இற்கு அதிபதி 6இல் சஞ்சரிக்கும் பொழுது பயணங்களை அடிக்கடி மாற்றியமைப்பீர்கள். வாகனப் பழுதுச் செலவுகள் அதிகரிக்கும். தாய்வழி உறவில் பகை ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நல்லது. சொத்து விற்பனை உருவாகும். இம்மாதம் குரு வழிபாட்டை மேற்கொள்வதோடு விசாகத்தன்று செந்தில் வடிவேலனையும் வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் குரு பார்வையால் குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும். கடுமையாக முயற்சித்தும் இதுவரை நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். கணவன் மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் சென்றால் விருப்பங்கள் நிறைவேறும். துலாத்தில சனி சஞ்சரிக்கும் பொழுது உங்கள் பெயரிலேயே வீடு, இடம் வாங்கலாமா என்று யோசிப்பீர்கள். எதையும் பலமுறை யோசித்துச் செய்வதுதான் நல்லது. குழந்தைகளின் முன்னேற்றம் நன்றாக அமையும். அனுமன் வழிபாடு அல்லல் தீர்க்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற் போனவர்கள் வெலிக்கடையில் இல்லை

## ஜனாதிபதி ஆணைக்குழு விளக்கம்

(கொழும்பு)

**காணாமற் போனவர்கள் வெலிக்கடை சிறைச்சாலையில் இருப்பதாக அவர்களின் உறவினர்கள் தெரிவித்தபோதும் அவ்வாறு எவரையும் இதுவரை அங்கு கண்டுபிடிக்க முடியவில்லை என காணாமற் போனோர தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

வெலிக்கடை சிறைச்சாலையில் நடைபெற்ற பொங்கல் தின விழாவில் எடுக்கப்பட்ட புகைப்படங்களில் தங்களின் காணாமற் போன உறவினர்கள் இருப்பதாக சிலர் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பில் அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டிற்கமைய காணாமற் போனோரின் உறவினர்கள் வெலிக்கடை சிறைச்சாலைக்கு அழைத்து செல்லப்பட்டதாக ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

எனினும் அங்கு காணாமற் போனவர்கள்எவரும்இருக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை யுத்தம் இடம்பெற்ற காலகட்டத்தில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்ற 14 ஆயிரம் பேரின் விபரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அவர்களுள் காணாமற் போனவர்களின் பெயர்கள் இருக்கின்றனவா? என ஆய்வு செய்யவுள்ளதாகவும், அவ்விபரங்களை விரைவில் இணையத்தளத்தில் வெளியிடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வெளியிடப்படும் விபரங்களின் அடிப்படையில் காணாமற் போனவர்கள் இருக்கிறார்களா? என்பதை கண்டறிய முடியும் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

## இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகத்தை இல்லாதொழிக்க ஜப்பான் அனுசரணை

(கொழும்பு)

இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகத்தை இல்லாதொழித்தல், சிறுவர் அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு தொழில்நுட்ப மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்காக அனுசரணையை வழங்க ஜப்பான் அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஸி சேனாநாயக்கவிற்கும் இலங்கைக்கான ஜப்பான் உயர்ஸ்தானிகர் நொபுஹித் தோவுக்கும் இடையில் அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில் இத்தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. சிறுவர் துஷ்பிரயோகத்தை குறைக்கும் நோக்கில் உடனடியாக முறைப்பாடு செய்ய பயன்படுத்தப்படும் 1929 தொடர்பு எண்ணின் சேவையை விரிவுபடுத்தவும் உயர்ஸ்தானிகர் விருப்பம் தெரிவித்துள்ளார். மேலும் சிறுவர் விவகார அமைச்சில் நோக்கம் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் இச்சந்திப்பின் போது அமைச்சர் இவ்வாறு விளக் கமளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-5)

# சு.க. நீலப்படையணி வேறு பெயரில் இயங்கவுள்ளதாம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷவின் தலைமையிலான நீலப்படையணி வேறு பெயரில் இயங்கவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியை பொறுப்பேற்றுக் கொண்டதன்பின்னர் நீலப்படையணி என்ற இளைஞர் அமைப்பு கலைக்கப்பட்டது.

இந்த அமைப்பினை வேறு பெயரில் மீளவும் இயங்கச் செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

அண்மையில் நாரஹன்பிட்டி அபயராமயவில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் நீலப்படையணியை மீள இயங்கச் செய்வது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

நீலப்படையணியின் தலைவர் நாமல் ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க மற்றும் படையணியின் உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

தற்போதைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணி தம்மை கண்டுகொள்வதில்லை எனவும் இதனால் தமக்கும் ஓர் இளைஞர் முன்னணி அவசியம் எனவும் கூட்டததில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலுக்கு முன்னதாக நீலப்படையணி வேறு பெயரில் உருவாக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (3-5)

## புங்குடுதீவில் பாடசாலை மாணவி மீதான வன்புணர்வுக்கும் கொலைக்கும் கண்டனம்

யாழ்.புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவி சிவலோகநாதன் வித்தியா பாடசாலையில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கும் போது கடத்தப்பட்டு கொடூர மான முறையில் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்டு ள்ளார்.

மேற்படி மாணவி மீதான பாலியல் வல்லுறவு மற்றும் படுகொலையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது.

மாணவி சம்பவ தினம் வீடு திரும்பாமை தொடர்பில் குடும்பத்தினரால் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டபோதும் அவர்கள் கீழ்த்தரமான கருத்துக்களை கூறி குடும்பத்தினரை அவமதித்து அனுப்பியுள்ளனர்.

பொலிஸாரது பொறுப்பற்ற விதமான பதிலும் செயற்பாடும் குற்றவாளிகளுக்கு துணை புரிந்துள்ளது.

பொலிஸார் இவ்வாறு பொறுப்பற்ற விதமாக செயற்படாது உடன் விரைந்து நடவடிக்கை எடுத்திருந்தால் குறித்த சிறுமியை ஆபத்திலிருந்து காப்பாற்றியிருக்க முடியும்.

பொலிஸாரது இத்தகைய பொறுப்பற்ற செயற்பாட்டினை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## எதிர்க்கட்சி தலைவர் யார்? சபாநாயகரிடம் கேள்வி

எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பது குறித்து சபாநாயகரிடம் கேள்வி எழுப்பபடும் என ஜே.வி.பி கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பது குறித்து இதுவரையில் அறிவிக்கப்படவில்லை.

எனவே எதிர்வரும் வாரத்தில் நடைபெறவுள்ள நாடாளுமன்ற அமர்வுகளின் போது எதிர்க்கட்சித் தலைவர் குறித்து சபாநாயகரிடம் கேள்வி எழுப்பப்படும்.எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பது குறித்து எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பியிருந்தன.

இந்தக் கேள்விகளுக்கு இரண்டு மாதங்கள் கடந்தும் சபாநாயகர் பதிலளிக்கவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் குறித்து திடமான ஓர் தீர்மானத்தை எடுக்குமாறு சபாநாயகரிடம் கோரப்படவுள்ளது. 19ம் திருத்தச் சட்டத்தின அடிப்படையில் எதிர்க்கட்சித் தலை வர யார் என்பதனை அரசியல் சாசன சபை நிர்ணயிக்க வேண்டுமென அநுரகுமார திஸாநாயக்க சிங்கள பத்திரிகை யொன்றுக்கு அளித்த நேர காணலில் சுட்டிக்காட்டியுள்ளார். (3-5)

## சு.கவின் 4 அமைச்சர்கள் பதவி விலகத் தீர்மானம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நான்கு அமைச்சர்கள் பதவி விலகுவதற்கு தீர்மானித்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தேசிய அரசாங்கத்தில் அமைச்சுப் பொறுப்புக்களை பெறறுக் கொண்ட அமைச்சர்களே இவ்வாறு பதவி விலகவுள்ளனர்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு வெளியிடும் நோக்கில் இவ்வாறு பதவி விலகத் தீர்மானித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் தொடர்ச்சியாக கைது செய்யப்படுவதற்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கைது உள்ளிட்ட காரணிகளினால் குறித்த அமைச்சர்களின் தொகுதிகளைச் சேர்ந்த மக்கள், அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொண்டமைக்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இதன் காரணமாகவே அமைச்சர்கள் பதவியை துறக்கத் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (3-5)

# பிரிவுத்துயர் பகிர்வு



### இராசரத்தினம் சிவநாதன்

(முன்னாள் தலைவர்-வேலணை ப.நோ.கூ.ச,பொருளாளர்)

வேலணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் சிவநாதன் கடந்த 13ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று மு.ப11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சாட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி ஆறுமுகம் தனலட்சுமி (பூமணி)

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தனலட்சுமி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடாகடம்பை இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.



### மனுவேற்பிள்ளை அல்போன்ஸ்

கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி, லண்டன் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட மனுவேற்பிள்ளை அல்போன்ஸ் கடந்த 9ஆம் திகதி சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னாரின் திருப்பலி நாளை நண்பகல் 12 மணியளவில் Holy Cross RC Church,208 Sangley Road,London SE6 2JS,United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### நல்லதம்பி பந்துபாலன்

(இளைப்பாறிய தபால் அதிபர்)

புங்குடுதீவு 8ஆம் வட்டாரம் மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும் வவுனியா வைரவபுளியங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி பந்துபாலன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் தச்சனாங்குளம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### மதியாபரணம் சண்முகராஜா

வண்ணார்பண்ணை பெரியதம்பிரான் வீதியைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட மதியாபரணம் சண்முகராஜா கடந்த 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10.30 தொடக்கம் ந.ப.12.00 மணிவரை Cimetiere Inter communal des Joncherolles,95 Rue Marcel Sembat,93430 Villetaneuse,France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது இனப்படுகொலையா? இல்லையா?
# ஆவணப்படம் சென்னையில் வெளியீடு

இலங்கையில்நிகழ்ந்த தமிழினப படுகொலைகளை ஆரம்பத்தில் இருந்து வரலாற்று ஆய்வுக் கண்ணோட்டத்துடனும் தகுந்த ஆதாரங்களுடனும் தொகுத்து "இது இனப்படுகொலையா? இல்லையா?" என்கிற புதிய ஆவணப்படமொன்றனை சுமார் ஆறு மாதகால அயராத உழைப்பின் பயனாக உருவாக்கி இருக்கிறார் இயக்குநர் கௌதமன.

குறித்த ஆவணப்படமானது உலகத் தமிழர் பேரமைப்பின் ஏற்பாட்டில் சென்னை வடபழனியில் 600 க்கும் மேற்பட்ட தமிழின உணர் வாளர்கள் மத்தியில் திரையிட ப்பட்டது.

ஈழத்தில் தொடர்ச்சியாக, பல ஆண்டுகளாக நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலைகளை தொகுத்து ஒரு சிறந்த வரலாற்று ஆவணமாக்கிய கௌதமனின் படைப்பாக்கத்தை பார்த்த தமிழ் மக்கள் கனத்த மனதோடு கண் கலங்கி அழுதுள்ளனர்.


ஆவணப்படம் திரையிடல் முடிந்தவுடன் தமிழினத் தலைவர்கள் அனைவரும் இதுவரை காலமும் ஈழப் போரில் உயிர்நீத்த மாவீரர்களுக்கும், பொதுமக்களுக்கும் மலரஞ்சலி செலுத்தினார்கள்.

தொடர்ந்து, முதன்முறையாக ஈழத் தமிழினத்துக்காக குரல் கொடுக்கும் பெரும்பாலான அனைத்து தலைவர்களும் ஒரே மேடையில் ஓரணியில் நின்று ஆவணப் படததை வெளியிட்டு வைக்க அனைத்து மாணவ இயக்கங்களும், அதன் தலைமை ஒருங்கிணைப் பாளர்களும் குறித்த ஆவணப் படத்தை பெற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து ஆவணப்படம் குறித் தும் தமிழினப் படுகொலை குறித் தும் தமிழினத் தலைவர்கள் உரை யாற்றினார்கள்.

**தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ.நெடுமாறன்**

உலகம் முழுதும் பரந்து வாழும அனைத்து மக்களிடத்திலும் இந்த ஆவணப்படத்தினை எடுத்துச் செலவேண்டும். இந்தச்செய்தியை உலகம் பூராகவும் பரப்புவதன் ஊடாக மட்டுமே நம்முடைய இனத் தின் அழிவை உலகத்தின் கவனத் தின் பால் ஈர்க்க முடியும். அதற்கு இந்தப படம் சிறப்பாக உதவும் என்று நிச்ச யமாக நம்புகின்றேன். சிறப்பாக காட் சிகளைத் தொகுத்து பதிவு செய்த தம்பி கௌதமனுக்கு பாராட்டுக்கள்.



**உணர்ச்சி பாவலர் காசி ஆனந்தன்**

கௌதமன் போன்றவர்கள் தமிழீழ விடுதலைப் போரில் ஆற்றி வருகின்ற பணி மிகப்பெரியது. பேசாத படங்கள் வந்த காலம் முதலான கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாக ஈழத் தமிழர்கள் தங்களுக் கென்று திரைப்படங்களை உருவாக்கியது இல்லை. இதுவரை காலமும் அவர்கள் தமிழ்நாட்டில் உருவாகும் திரைப்படங்களைத் தான் பார்த்தார்கள் பார்த்து வருகின்றார்கள். தமிழ்நாட்டில் உருவாகும் திரைப்படங்களுக்கு கிடைக்கின்ற வருமானம் தமிழ்நாட்டை விட புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழர்களால் தான் கிடைக்கின் றது. இது வரை காலமும் தமிழ் திரையுலகத்துக்கு அவர்கள் எத்தனை கோடி ரூபாயினை கொடுத்திருப்பார்கள் என்பதனை மறந்து விடாதீர்கள். ஈழத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் தமிழ்த் திரையுலகம் பெருமளவு துணை நின்றிருக்கின்றது என்பதனை நாம் மறக்கவில்லை. ஆனால், கௌதமன், புகழேந்தி தங்கராஜ் போன்றவர்கள் தமிழீழ விடுதலைப் போரில முழுமையாகத் துணை நிற்கின்றார்கள். மூச்சோடும் தமிழின விடுதலையைப் பேசும் திரைப்படங்களாக புகழேந்தி தங்கராஜின் திரைப்படங்கள் அமைந்தன.

கடந்த முறை வெளியான கௌதமனின் நீதியைத் தேடி என்கிற ஆவணப்படம் தமிழீழத்தில் பெண் களுக்கு நிகழ்ந்த கொடுமைகளைத் தோலுரித்துக் காட்டியது. ஐ.நாவில் குறித்த ஆவணப்படம் திரையிடப்படடது. அதனைப் பார்த்த பான் கீ மூன இலங்கையில் பெண களுக்கு நிகழும் கொடுமைகளை தடுக்க காத்திர மான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என அவரே கூறும ளவுக்கு கௌதமனின ஆவணப் படம் நிதர்சனத்தை காட்டியுள் ளது. முள்ளிவாய்க்கால் மட்டுமல்லாமல் தொடர்ச்சியாக தமிழினத்துக்கு நடந்த கொடுமையை, இன அழிப்பை முழுமையாகக் காட்டுகின்றது குறித்த ஆவணப்படம் என அவர் மேலும் தெரிவித்தார்.

**மே17 அமைப்பின் தலைவர் திருமுருகன் காந்தி**

இவ்வாறான ஆவணப் படங்கள் இல்லை என்றால் பல்வேறு தகவல் களை வெளியில் கொண்டு போய்ச் சேர்த்திருக்க முடியாது. ஒரு வரலாற்றை முழுமையாகச் சொல்ல வேண டிய கட்டாயத்தில் இருக்கின் றோம். ஈழத்தில் நடந்தது இனப்படு கொலை இல்லை என்று மேற்குலகம் முன்மொழிந்து கொண்டிரு க்கக்கூடிய இந்த தருணத்திலே இவ்வாறான ஆவணப்படங்கள் அங்கு நடந்தது இனப்படுகொலை தான் என்பதனை நிரூபிக்க பெரும் பங்கு ஆற்றுகின் றன. வரலாற்றுப் புத்தகங்களை புரட்டி நாம் தெரிந்து கொள்ளக் கூடிய விடயங்களை காணொளி மிக எளிமையாக விளக்கி விடுகின் றது. அந்தவகையில் கௌதமனின் இந் தப் படைப்பு போற்றுதலுக்கு உரிய தாக இருக்கின்றது எனத் தெரிவித்தார்.

**இயக்குனர் கௌதமன்,**

எவ்வளவு முயற்சி செய்தாலும் சரி, எவ்வளவு மூடி மறைத்தாலும் சரி. எங்களுடைய இனம் எழும், எழ வேண்டும். அப்படி மீண்டெழும் என்கிற அடிப்படையில் தான் இந்தப் படைப்பை நான் செய்திருக் கிறேன். என் இனம் விடுதலை அடைகின்ற வரைக்கும் நான் படைப்புக்களை படைச்சுக்கிட்டே இருப்பேன்.

ஏராளமான காட்சித் துண்டங்களைத் தொகுத்து பல ராத்திரிகள் கண்விழித்து அழுதழுது படித்தவை தான் இந்த ஆவணப் படைப்புக்கள். தமிழீழமும், தாய்த் தமிழ் நாடும் விடுதலை அடைகின்ற வரைக்கும் நான் ஓயவே மாட் டேன். படைப்பைச் செய்து கொண்டே இருப்பேன். ஒன்று என் இனம் விடு தலை அடைய வேண்டும். அல்லது நான் சாக வேண்டும். அப்போது தான என் படைப்புப் பயணம் நிற்கும். இதனை நான் உணர்ச்சி வசப்பட் டுச் சொல்லவில்லை. தெளிவான மனநிலையில் சொல்கிறேன். ஏனென்றால், இந்தப் பூமிப்பந்தில் யாருக்கும் இல்லாத பெருமையும் தீரமும் அறமும் இலட்சியமும் வாழ் வியலும் வரலாறும் வரைப டமும் என் இனத்திற்கு மட்டுமே சொந்த மானது. நாங்கள் ஈழத்தில் வாழ்ந் தோம் என்று எத்தனையோ பதிவு கள் வந்திருக்கின்றன. நாங்கள் வாழ வில்லை. ஆண்டு வாழ்ந் தோம என்பது தான் முக்கியமானது.

மறுபடியும் இந்தப் பூமிப்பந்தில் இரு தேசங்கள் உருவாகியே ஆக வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம். அதற்காக காலம் காலமாக எத்தனை இலட்சம் தமிழ் உயிர்கள் மண்ணைக் காக்க இறந்திருக்கிறார்கள். இதற்காக தான் என் மனநிலை சிதைந்தாலும், சுயநினைவு இருக் கின்ற வரை படைப்புக்களைச் செய்ய வேண்டும் என நினைக்கி ன்றேன். Pursuit Of Justice - நதிக்கான இடைவிடாத போராட்டம் எனகிற எனது முன்னைய ஆவண ப்படம் ஐ.நா. மன்றத்தில் திரையிட பபட்ட போது அங்கே திரணடிருந்த கறுப்பின, வெள்ளையின அரசியல அறிஞர்கள், மனித உரிமைப் போரா ளிகள் கண்ணீர் விட்டு அழுதார்கள் என அறிந்தேன். உண்மையான ஆன்மாவோட ஒன்றி அந்தப் படை ப்பு உருவானதால் அதன் தாக்கம் அந்தளவு இருந்திருக்கிறது.



அந்தப் படைப்பை உருவாக்கிய இறுதிக்கட்ட வேலையில் இருந்த போது, அங்கே ஒரு கேள்வி வரும். இந்த உலகம் கோடான கோடி ஆண் டுகளாக அறத்தோடு தான இயங்கிக கொண்டு இருக்கின்றது. எங்களு டைய இனம் இன்று வரைக்கும் அறத்தோடு, ஒழுக்கத்தோடு, நீதியோடு இயங்கிக் கொண்டிருக்கின் றது.

இந்த இரு அறங்களும் உண்மை என்றால் எங்களைச் சிதைத்ததை இன்றைக்கு வரைக்கும் வேடிக்கை பார்க்கின்றீர்களே? இது அறமா என்று கேட்ட அந்த இடம் வரும் போது குலுங்கிக் குலுங்கி அழுதேன்.

இந்தக் குமு றல் இந்தக் கோபம் இந்த வெறி ஒவ்வொரு தமிழனு க்குள்ளும் இருக்கவேண்டும். நம க்கு விடு தலை கிடைக்கின்ற வரைக்கும் அந்த வெறி ஓயவே கூடாது என அவர் மேலும் தெரி வித்தார். (இ)

## உயிர்நீத்த உறவுகளுக்காக ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

இன்று ஞாயிற்றுக்கிழமை மே மாதம் 17ஆம் திகதி காலை உயிர் நீத்த அனைத்து உறவுகளின் ஆத்ம சாந்திக்காக யாழ்ப்பாணம், கிளி நொச்சி, முலலைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்ட அமைப்பாள ர்கள் தலைமையில் கிறிஸ்தவ தேவாலயங்களில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைத் திருப்பலிகளும் அதே தினத்தில் முற்பகல் 10.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கடற் கரையில் புண்ணி யாதானமும் ஆத்ம சாந்திப் பிரா ரத்தனையும் செய்யவுள்ளதுடன் மே மாதம் 18ஆம் திகதி இறுதியாக யுத்தம் நடைபெற்ற யுத்தகளமாக இனங்காணப்பட்ட முள்ளிவாயக் காலில் முல்லை மாவட்ட அமைப் பாளர் க.டக்ளஸ் தலைமையில் உறு ப்பினர்கள், ஆதரவாளர்கள் அனை வரும் ஒன்றிணைந்து நினைவுச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்து வத ற்கும் ஏற்பாடு செய்திருக்கின்றோம்.


மேற்படி இரு நிகழ்வுகளிலும் உறவுகளைப் பறிகொடுத்த அனை த்து உறவுகளையும் கல்ந்துகொள் ளுமாறும் கேட்டுக்கொள்வதுடன் எமது கட்சி உறுப்பினர்கள், ஆதர வாளர்களையும் கலந்து கொண்டு உயிர்நீத்த உறவுகளிற்கு அஞ்சலி செலுத்துமாறும் கேட்டுக் கொள்கின் றோம் என முற்போக்கு தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் எஸ்.விஜ யகாந் அறிவித்தார். (இ-5)

## தந்தையின் வழியில் சஜித்

எனது தந்தையினால் உருவா க்கப்பட்ட வீடற்றவர்களுக்கு வீடு பெற்றுக்கொடுக்கும் செயற்திட்ட த்தை சர்வதேசமே வரவேற்றது என வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தெரி வித்துள்ளார்.

ஐம்பதாயிரம் வீடுகள் நிர்மா ணிக்கும் திட்டத்தின் கீழ் கண்டி பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆயிரம் பேருக்கு தலா ஒரு இலட் சம் ரூபா நிதியும் அதற்கான உறு திப்பத்திரமும் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது இதில் பிரதம விருந்தினராக கல ந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் சஜித் பிரேமதாச இவ் வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற றுகையில், ஏழை மக்களின் வறுமை நிலையை கருத்தில் கொண்டு வீடற்றவர்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுக்கும் திட்டம் ஒன் றினை



எனது தந்தையார் அமரர் ரணசி ங்க பிரேமதாச செயற்படுத்தி வந்தார்.

எனினும் இந்த நாட்டில் தொடர் ந்து ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரண மாக இத்திட்டம் சீர்குலைக்கப்ப ட்டுவிட்டது. எனினும் எனது தந்தை யின் வழியில் செயற்பட்டு அத்திட் டத்தினை அடிப்படையாகக் கொண்டு வீடற்றோருக்கு வீடுக ளைப் பெற்று க்கொடுத்து, அவர்க ளின் பிரச்சி னையை தீர்த்து வைப் பதே எனது பிரதான நோக்கம்.

நான் எனது மாதாந்த சம்பளப் பணத்தை பெறுவதில்லை, அரச வாகனங்களை பயன்படுத்துவ தில்லை, அத்துடன் எரிபொரு ளுக் கான பணத்தை பெறுவதி ல்லை, இப்பணத்தை கொண்டு ஏழைக ளின் வீடற்ற பிரச்சினையை தீர்ப்ப தற்கு பயன்படுத்தி வருகின்றேன்.

இலங்கையில் 51 இலட்சம் குடும்பங்கள் இருக்கின்றன, இதில் 21 இலட்சம் குடும்பங்கள் குறைந்த வருமானம் பெறுபவர்கள், இவர்க ளின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக எனது பணிகளை தொடர்ந்து முன் னெடுப்பேன். அத்துடன் வீடில்லாத வர்களுக்கு வீடுகளை நிர்மாணி பபதற்கான மூலப்பொருட்களை மலி வான விலைகளில் பெற்றுக் கொடு க்க பல்வேறு நிறுவனங்க ளுடன் பேச்சு வார்த்தைகள் முன் னெடுப் பதாக வும் அவர் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பேச்சுக்கலையே நாகரிகம். முரண்பட்ட பேச்சுக் கூட தொடர்பை வளர்க்கிறது. ஆனால் மௌனம் மக்களை ஒதுக்கி வைக்கிறது.
– தோமஸ் பெய்ன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பொலிஸ் அதிகாரிகளுடன் சந்திப்பை ஏற்படுத்த வேண்டும்

இலங்கை அரசு தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட பின்னர்– அதிகாரங்களைத் தந்த பின்னரே எதுவும் நாம் செய்ய முடியும் என்று நினைத்தால் அது மிகப்பெரிய பாதக விளைவுகளையே ஏற்படுத்தும்.

அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் அதேநேரம் எங்கள் தமிழர் தாயகத்தில் சட்டம், நீதி, ஒழுங்கு என்பவற்றைக் கட்டிக்காப்பது தொடர்பில் பொலிஸாருடன் புரிந்துணர்வின் அடிப்படையில் செயற்படுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வது அவசியம்.

யுத்தம் முடிந்த கையோடு வடபகுதி முழுவதும் இராணுவக் காவலரண்கள் அமைக்கப்பட்டிருந்தன. இராணுவக் காவலரண்கள் இயல்பு வாழ்க்கைக்குப் பாதகமானது என்ற கருத்துக்கள் உண்மையாயினும் இராணுவக் காவலரண்கள் அகற்றப்பட்டபோது, அதற்குப் பதிலீடாக பொதுமக்களின் பாதுகாப்புக்கான ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை.

இத்தகையதொரு நிலைமை ஒரு அச்சமான சூழ்நிலையை உருவாக்கியது என்பது மறுக்க முடியாத உண்மை.

அதேநேரம் வட மாகாணத்தில் பொலிஸ் சேவை நடைமுறையில் இருந்தாலும் பொலிஸாரின் சேவையில் மக்கள் திருப்தியடையவில்லை என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

இலஞ்ச ஊழல்கள் பொலிஸ் மீதான நம்பகத்தன்மையை இழக்கச் செய்தது. அதேநேரம் ஒவ்வொரு பொலிஸ் பிரிவிலும் அந்தந்த நிலையங்களுக்குப் பொறுப்பாக இருக்கக்கூடிய பொலிஸ் பொறுப்பதிகாரிகளைப் பொறுத்தே அந்தப் பொலிஸ் நிலையங்களின் இயங்குநிலை இருப்பதை அவதானிக்க முடிகிறது.

எனவே வடபுலத்தில் உள்ள அத்தனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுடனும் வடக்கு மாகாண அரசு ஒரு நல்ல தொடர்பாடலை பேணிக்கொள்வதன் ஊடாக, வடபுலத்தில் சட்டம் ஒழுங்கை உறுதி செய்ய முடியும்.

வடபுலத்தின் சமகால நிலைமைகளை ஒரு கணம் சிந்திப்போமாயின் நாளாந்தம் நடக்கின்ற விபத்துக்களால் ஏற்படுகின்ற மரணங்கள், போதைப் பொருட்களின் பயன்பாடுகள், வாள்வெட்டுச் சம்பவங்கள், இளைஞர்களிடையே உருவாகிவரும் "குறூப்" கலாசாரங்கள் என்பனவற்றின் தாக்கம் வடபகுதியின் அமைதி நிலைக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைவதை அவதானிக்க முடியும்.

எனவே இதனைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு விரும்பியோ விரும்பாமலோ பொலிஸாருடையதாகும். அந்தப் பொறுப்பைச் சிறப்பாகச் செய்வதற்கு வடக்கு மாகாண அரசு பொலிஸ் பொறுப்பதிகாரிகளுடன் வாராந்த, மாதாந்த சந்திப்பை மேற்கொள்வது பயன்தரக் கூடியது.

அதேவேளை தமது கடமைப் பொறுப்பை பொலிஸ் பொறுப்பதிகாரிகள் செய்யத் தவறும் பட்சத்தில், அது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சர், பிரதமர், ஜனாதிபதி ஆகியோருக்குத் தெரியப்படுத்தி பொலிஸ் சேவையைச் சீர்படுத்தும் பணியையும் வடக்குமாகாண அரசு செய்ய வேண்டும். செய்ய முடியும்.

இதற்காக பொலிஸ் சேவை தொடர்பில் பொது மக்கள் கொண்டுள்ள அதிருப்தியை வடக்கு மாகாண அரசு அறிந்து கொள்வதும் அவசியமாகும்.

இதைவிடுத்து, பொலிஸ் அதிகாரம் கிடைக்கும் வரை காத்திருப்போம் என்றால், அந்த அதிகாரம் கிடைக்கும்போது; வடக்கில் அமைதியைப்பேண அண்டைநாட்டு இராணுவம்தான் தேவை என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். கவனம்.

## கூட்டமைப்பும் தேசம் நோக்கியே பயணிக்கின்றது

# த.தே.ம முன்னணியை கூட்டமைப்பில் இணைய அழைப்பு

## சுமந்திரன் விடுப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் தேசம் நோக்கியதான தீர்வு நோக்கியே பயணிக்கின்றது அணுகுமுறையே வேறுபடுகின்றது என தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன், ஒற்றையாட்சிக்குள் தீர்வொன்றினை தமது கட்சி ஒரு போதும் ஏற்காது எனவும் தெரிவித்துள்ளார். தமிழ் மக்களுக்கான வெளியில உள்ள வழி எனும் தலைப்பில் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் பாதிரியார ஜெயக்குமார் தலைமையில் கருத்தாடல் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாங்கள் கடந்த அறுபது வருடங்களுக்கும் மேலாக சிக்கிக்கொண்டுள்ள பிரச்சினைகளில் இருந்து வெளிவருவது, விடுபடுவது எவ்வாறு என்பதனை ஆராய வேண்டும்.

ஏனைய நாடுகளில் ஆயுத போராட்டம் இடம்பெற்று கொண்டிருக்கும் போது இராஜதந்திர ரீதியிலான அரசியல் போராட்டமும் ஆயுதப்போராட்டத்துடன் சமநிலையாக முன்னெடுக்கப்பட்டு வந்தது. ஆனால் ஆயுத ரீதியிலான எமது விடுதலை போராட்டத்தில் அவ்வாறான நிலை இருக்கவில்லை.

ஆயுத ரீதியிலான எமது போராட்டத்தை சிங்கள தலைவர்கள் முறியடித்தமை வெறுமனே ஆயுதப்போராட்டத்தை தோற்கடிப்பது மட்டும் அவர்களின் நோக்கல்ல, மாறாக தமிழ் மக்கள் இனிமேல் தமது உரிமைகளை எக்காலமும் கேட்டுவிடக்கூடாது என்பதே அவர்களின் ஒரே நோக்கமாக இருந்தது.

ஆனாலும் எமது மக்கள் அரசியல் ரீதியாக தொடர்ந்தும் போராடி வந்தனர். போரில் வெற்றி பெற்ற முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற தேர்தல்கள் அனைவற்றிலுமே எம்மை ஆள்வதற்கு உமக்கு சந்தர்ப்பம் வழங்க மாட்டோம் என கூறும் விதத்தில் அவரை எமது மக்கள் தொடர்ச்சியாக நிராகரித்து வந்தனர். இதன்மூலம் தமிழ் மக்களை ஆள்வதற்கு ராஜபக்ஷ ஏற்றவர் அல்ல என்பதனையும் சர்வதேசம் ஏற்றுக்கொண்டது.

சிங்கள அரசிற்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட எம்மை அடித்த ராஜபக்ஷ பின்னர் முஸ்லிம் மக்களையும் அடித்தார். இறுதியில் தனது மக்களையும் அடித்தார். இந்த நிலையிலேயே ராஜபக்ஷவினை கடந்த ஜனாதிபதி தேர்தலில் தோற்கடிக்க முடிந்தது.

நாம் சந்தர்ப்பங்களை நழுவிவிட முடியாது. ஏதாவது கதவு திறந்திருந்தால அதனை நாம் பயன்படுத்தி கொள்ள வேண்டும். புதிய அரசின் காலத்தில் அந்த கதவு திறந்துள்ளது. அதனை நாம் பயன்படுத்த முயல்கின்றோம். ராஜபக்ஷவின் ஆட்சி தொடருமாக இருந்தால் இந்த நிலையை அவசரமாக மாற்ற வேண்டிய நிலை காணப்பட்டிருந்தது. இதற்காக எமக்கு அவசர எதிரி மாற்றம் ஒன்றும் தேவைப்பட்டது. இதனையே நாமும் மேற்கொண்டிருந்தோம். எமது மக்களும் வட மாகாண சபை தேர்தலில வாக்களித்ததை விட ஜனாதிபதி தேர்தலில் அதிகமாகவே வாக்களித்திருந்தனர்.

வீடு பற்றி எரிந்து கொண்டிருக்கும் போது தப்பி ஓடும் அவசர வேலை ஒன்றினையே கடந்த ஜனாதிபதி தேர்தலில் நாம் மேற்கொண்டிருந்தோம். இத் தப்பித்தலின் பின்னர் எமக்கு தீர்வை பெற ஒரு படகொன்று கடந்த ஜனவரி மாதம் எட்டாம் திகதி கிடைத்தது. அந்த படகில் ஏறியுள்ளோம். அந்த படகு மறு கரைக்கு போய் சேர வேண்டுமாக இருந்தால் கூத்தாடி கும்மியடிச்சு துள்ளி குதித்து படகை கவிழ்த்து விடக்கூடாது.

அதற்காக விமர்சிக்க வேண்டாம் என கூறவில்லை தவறுகள் விடப்படும் போது சுட்டிக்காட்டப்படல் வேண்டும். இதனையே புதிய அரசின் காலத்திலும் நாம் மேற்கொண்டு வருகின்றோம். ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு இல்லை. ஆனாலும் இழந்தவற்றில் சிலவற்றை பெற முடியும் என்ற ஒரே நோக்கத்திலேயே நாம் செயற்படுகின்றோம்.

எமது இனப்பிரச்சினை தீர்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின கொள்கையிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் கொள்கையிலும் வித்தியாசம் இல்லை. அணுகுமுறையில்தான் வித்தியாசம் உள்ளது. உணர்வுகளை வைத்துக்கொண்டு நிரந்தர தீர்வை பெற வேண்டும். பொது தேர்தலுக்கு முன்னர் எமக்கும் புதிய அரசிற்கும் இடையிலான இதய ரீதியிலான உடன படிக்கையை வெளிப்படுத்துவோம். எம்முடைய அடிப்படைகளை விட்டுக் கொடுத்து தீர்வினை பெறுவதற்கு நாம் தயாரில்லை. ஒருகாலமும் இது நடக்காது. என தெரிவித்துள்ள சுமந்திரன் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியை கூட்டமைப்பில் ஒரு கட்சியாக இணையுமாறும் அழைப்பு விடுத்தார். (4)

## மாடுகள் பிடிபட்டன

(கரணவாய்)

அல்வாய்ப் பகுதியில் தோட்டம் ஒன்றினுள் நுழைந்து மரக்கறிப் பயிர்களுக்கு அழிவை ஏற்படுத்திய இரண்டு மாடுகள் கமக்கார அமைப்பைச் சேர்ந்தவர்களால் பிடிக்கப்பட்டுள்ளது.

மாடுகளின் உரிமையாளர்கள் பயிரழிவுக்கான நட்ட ஈட்டைச் செலுத்தி மாடுகளை மீளப்பெற்று கொள்ள முடியும் எனவும் இல்லாதவிடத்து பெரும்பாக உத்தியோகத்தரின் அனுமதியுடன் இரண்டு மாடுகளும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் எனவும் அல்வாய் கிழக்கு கமக்காரர் அமைப்பு அறிவித்துள்ளது. (இ-3-60)

## இயேசு எம்மோடு இருக்கிறார், என்றும் சான்று பகர நாம் தயாரா?

இயேசு விண்ணேற்றமடைந்த திருவிழாவை நாம் இன்று கொண்டாடுகின்றோம். இறைதந்தையின் பெயரையே உயிர் மூச்சாக உச்சரித்த இயேசு, தந்தையின் விருப்பத்தைச் செய்து முடிப்பதையே உணர்வாகக் கொண்ட இயேசு, தந்தையைச் சென்றடையும் நிகழ்வே விண்ணேற்பு. தந்தையிடமிருந்து தந்தையின் சார்பாக உலகத்திற்கு வந்த இயேசு தம் பணி முடித்தபின் மனிதரின் சார்பாக தந்தையிடம் செல்கிறார். தந்தையை மகிமைப்படுத்தத் தம் மகிமையைத் துறந்து வந்த இயேசு தந்தையிடமிருந்து மீண்டும் மகிமையைப் பெறுகின்ற நேரம்தான் விண்ணேற்பு. மாட்சி பெற்று தந்தையிடம் சென்ற இயேசு மாறுபட்ட தமது பிரசன்னத்தால் நம்மோடு இருப்பதையே விண்ணேற்பு உணர்த்துகிறது.

உலகம் முடியும் வரை எம்மோடு இருப்பதாகக் கூறிய இயேசு புதிய மண்ணகத்தைக் கைவிட்டு சென்று விடவில்லை. இன்றும் உலகனைத் தோடும் தொடர்பு கொண்டு வாழ்கிறார். தம் வழியாகக் கடவுளை அணுகிச் செல்வோரை முழுவதுமாக மீட்க வல்லவராயிருக்கிறார். அவர்களுக்காக பரிந்து பேசுவதற்கென என்றுமே வாழ்கிறார். எனவே இயேசு விண்ணகம் சென்றது நமக்காக, எமக்காகத் தந்தையிடம் பரிந்து பேசுவதற்கேயாகும்.

விண்ணகத்தில் மட்டுமன்றி மண்ணகத்திலும் இயேசுவின் பணி தொடர்கிறது. எங்கெல்லாம் நற்செய்தி போதிக்கப்படுகிறதோ, நற்செய்தி மதிப்பீடுகள் வாழ்க்கையாகின்றனவோ அங்கெல்லாம் இயேசுவே செயலாற்றுகிறார். இயேசுவின் பெயருக்கென்று தனி சக்தி உண்டு. இயேசுவின் பெயரை கூவி வேண்டுவோர், இயேசுவின் பெயரிலே நம்பிக்கை வைப்போர், தம் பாவங்களிலிருந்து மீட்படைவர். அருங்



களை உண்மைப்படுத்துகின்றன. இன்றும் நம்மிடையே இயேசுவின் பெயர்-சொற்கள் பொய்த்து விடவில்லை என்பதற்குச் சாட்சியங்கள் தேட வேண்டியதில்லை.

எனவே விண்ணெழுந்த இயேசு மண்ணக மக்களோடு நெருங்கிய உறவு கொண்டிருக்கிறார் என்பதை ஆழ்ந்து விசுவசிப்போம். அந்த நம்பிக்கை நம்மை வழி நடத்துவ

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திரப் பத்திரிகையாளர்**

### பரமபிதா காட்டிய பாதை

சக்தியையும், அருளையும் தந்து நாம் அவருடைய சாட்சிகளாக இருக்க வழிகாட்டுகிறார். நாம்தான் அவருடைய போதனைகளுக்குப் பிரமாணிக்கமாக இருக்கவேண்டும். உலகின் கடைசி எல்லை வரை நாம் தான் இயேசுவிற்கு சாட்சிகளாக இருக்க வேண்டும்.


விண்ணகம் சென்ற ஆண்டவர் குறிகள் பல செய்வர். வெள்ளியோ பொன்னோ தேவையில்லை என்பதல்ல.

ஆனாலும் இயேசுவின் பெயரே போதும் எல்லாம் நடக்கும் - இயேசுவின் பெயரால் முடவர்கள் எழுந்து நடக்க ஆணையிடும் தூய பேதுருவின் செயல் இயேசுவின் பெயரை, சொற்

தாக. ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்பு விழா நமது வாழ்வின் இலக்கை ஆய்வு செய்ய அழைப்பு விடுக்கிறது. அந்த இலக்கு இயேசுவை நம்பி நாம் செயற்படுவதேதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோம் மாஸ்டர்ஸ் டென்னிஸ் அரையிறுதியில் டேவிட் ஃபெரர்



ரோம் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார் ஸ்பெயினின் டேவிட் ஃபெரர்.

இத்தாலி தலைநகர் ரோமில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதியில் டேவிட் ஃபெரர் 6-2, 4-6, 6-3 என்ற செட் கணக்கில் பெல்ஜிய வீரர் டேவிட் கோஃபினை தோற்கடித்தார்.

இந்தப் போட்டியின் 2 ஆவது சுற்றில் பிரான்ஸின் ஜோ வில்பிரைட் சோங்காவுக்கு அதிர்ச்சி தோல்வியளித்த டேவிட் கோஃபின், அடுத்த சுற்றில் பிரிட்டனின் ஆன்டி முர்ரேவை எதிர்த்து விளையாடவிருந்தார். ஆனால் முர்ரே களைப்பு காரணமாக போட்டியிலிருந்து விலகியதைத் தொடர்ந்து, காலிறுதிக்கு முன்னேறிய டேவிட் கோஃபின் இப்போது ஃபெரரிடம் தோற்று போட்டியிலிருந்து வெளியேறியுள்ளார்.

காலிறுதியில் டேவிட் ஃபெரருக்கு ஓரளவு சவால் அளித்த கோஃபின் 2 ஆவது செட்டைக் கைப்பற்றியபோதிலும், 3 ஆவது செட்டில் ஆதிக்கம் செலுத்த முடியாமல் தோல்வி கண்டார். 2010 இல் ரோம் மாஸ்டர்ஸ் போட்டியில் இறுதிச் சுற்று வரை முன்னேறியுள்ள ஃபெரர், ஒருமுறைகூட ரோம் போட்டியில் சம்பியன் பட்டம் வென்றதில்லை.

டேவிட் ஃபெரர் தனது அரையிறுதியில் உலகின் முதல் நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச் அல்லது ஜப்பானின் கெய் நிஷிகோரியை சந்திக்க வாய்ப்புள்ளது. (க)

# இந்திய கிரிக்கெட்டின் தடுப்புச்சுவர் ராகுல் டிராவிட்தான்-ரகானே




இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தடுப்புச் சுவர் என்று அழைக்கப்படும் ராகுல் டிராவிட் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டார். அப்போது ராஜஸ்தான் ஐ.பி.எல். அணியில் விளையாடும் ரகானேவை வெகுவாக பராட்டினார்.

இதுகுறித்து ரகானே கூறுகையில்,

"மிகப்பெரிய பாராட்டு ராகுல் டிராவிட்டிடம் இருந்து வந்திருக்கிறது. இது மேலும் நான் நன்றாக விளையாடவும், கடின பயிற்சி எடுக்கவும் உறுதுணையாக இருக்கும். இதற்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படுகிறேன். ஆனால் நல்ல முடிவு கிடைக்கவில்லை. கடந்த இரண்டு வருடமாக அதற்காக உழைத்து வருகிறேன்.

நான் கடந்த ஓராண்டில் நான்கு நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து சிறப்பாக விளையாடி வருவதாக டிராவிட் கூறியுள்ளார். ஆனால், இந்திய அணியில் ஒரே சுவர்தான். அது அவரைத் தவிர யாருமில்லை. நான் அந்த இடத்தை பிடிக்க முடியும் என்று நினைக்கவில்லை" என்றார். (க)



வங்கதேச சுற்றுப்பயணத்திற்கான இந்திய அணியில் தன்னை சேர்க்க வேண்டாமென்று விராட் கோலி தேர்வுக்குழுவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

# வங்கதேச தொடரிலிருந்து விராட்கோலி விலகல்

சந்தீப் பட்டேல் தலைமையிலான இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் தேர்வுக்குழுவுக்கு கோலி எழுதியுள்ள கடிதத்தில், இங்கிலாந்து, அவுஸ்திரேலிய தொடர்கள், பின்னர் உலகக் கிண்ணம், தற்போது ஐ.பி.எல். என தொடர்ச்சியாக ஓய்வே இல்லாமல் கிரிக்கெட் விளையாடி வருவதால் தனக்கு ஓய்வு தேவைப்படுவதாகவும், இதன் மூலம் தன்னை புத்துணர்ச்சியுடன் அடுத்த தொடருக்கு தயார் செய்து கொள்ள முடியுமென்றும் கூறியுள்ளார்.

இதனால் இந்திய டெஸ்ட் அணிககு புதிய அணித்தலைவரை தெரிவு செய்யும் நிலையில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் உள்ளது.

இம் மாதம் 20 ஆம் திகதி வங்கதேச சுற்றுப்பயணத்துக்கான இந்திய அணி அறிவிக்கப்படவுள்ளது.

ஜூன் மாதம் 10 ஆம் திகதி இந்திய அணி, வங்கதேச அணியுடன் முதலில் டெஸ்ட் போட்டியில் விளையாடுகிறது.

பின்னர் 18,21,24 ஆகிய திகதிகளில் ஒருநாள் போட்டிகள் நடைபெறவுள்ளன. (க)

# யாழ்.கல்வி வலய மெய்வல்லுநர் போட்டி முடிபுகள்

யாழ்.கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றது.

இதில் ஆண்களுக்கான போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்கள் விபரம் பின்வருமாறு,

**13 வயதுப்பிரிவில்**

100 மீற்றர் ஓட்டம்- எம்.பிரசாந் (13.8 செக்) யாழ்.இந்துக்கல்லூரி, எம்.ஆரண் சென். ஜோன்ஸ் கல்லூரி, ஏ.சஞ்ஜை கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.

200 மீற்றர் ஓட்டம்-எம்.பிரசாந் (31.5செக்) யாழ்.இந்துக்கல்லூரி, ரி.டிலக்சன் உயரப்புலம் மகாவித்தியாலயம், எம்.ஆரண் சென்.ஜேன்ஸ் கல்லூரி,

நீளம் பாய்தல் -எம்.பிரசாந் யாழ்.இந்துக்கல்லூரி, எம்.ஆரண் சென்.ஜோன்ஸ் கல்லூரி, பி.அபிசாத் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி.

**15 வயதுப் பிரிவில்**

100 மீற்றர் ஓட்டம்-ஜி.பிரவிந்தன் (12.8 செக்) சென்.ஜோன்ஸ் கல்லூரி, ஏ.ஆரோகணன் யாழ்.இந்துக்கல்லூரி, வி.விவேகன் சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

200 மீற்றர் ஓட்டம்-ஜி.பிரவிந்தன் (26.8 செக்) சென்.ஜோன்ஸ் கல்லூரி, டினிசன் கொக்குவில் இந்துக் கல்லூரி,பி.அபிசேக் சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

400 மீற்றர் ஓட்டம்-டினிசன் (1:01.9 செக்) கொக்குவில் இந்துக் கல்லூரி, எவ்.இராமறியான் யாழ்.மத்திய கல்லூரி, கே.றெமிங்ரன் சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

நீளம் பாய்தல்-ஜி.பிரவிந்தன் (5.09 மீ.) சென்.ஜோன்ஸ் கல்லூரி, கே.லகீசன் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, டினிசன் கொக்குவில் இந்துக் கல்லூரி.

குண்டு எறிதல்-எஸ்.ராகுலன் (8.26 மீ.) சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை, எஸ்.சண்றோசன் சென்.பற்றிக் கல்லூரி, எஸ்.றேமுசன் சென்.ஜோன்ஸ் கல்லூரி.

தட்டெறிதல்-ரி.கேசவன் (30.92 மீ.) சென்.ஜோன்ஸ் கல்லூரி, ஏ.நிறோசன் யாழ்.மத்திய கல்லூரி, எஸ்.ராகுலன் சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை.

ஈட்டி எறிதல்-எஸ்.சண்றோசன் (34.27 மீ.) சென்.பற்றிக்ஸ் கல்லூரி, எஸ். யூலியட்டினோசன் சென்.ஜோன்ஸ் கல்லூரி, எஸ். சதுஸ்காந் சென்.ஜோன்ஸ் கல்லூரி.

**17 வயதுப் பிரிவில்**

100 மீற்றர் ஓட்டம்-ஆர்.திலக்சன் (12.2 செக்) சென்.பற்றிக்ஸ் கல்லூரி, ஐ.கோல்ட்சயன் சென்.ஜோன்ஸ் கல்லூரி, எஸ்.இனோராஜ் யாழ்.இந்துக் கல்லூரி.

200 மீற்றர் ஓட்டம்-பி.கிருசாந் (26.2 செக்) யாழ்.மத்திய கல்லூரி, ஆர்.திலக்சன் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, ஆர்.றொசான் சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

400 மீற்றர் ஓட்டம்-எஸ்.யதுர்சன் யாழ்.மத்திய கல்லூரி, எஸ்.சர்மிலன் யாழ்.இந்துக் கல்லூரி, ஆர்.திலக்சன் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி.

800 மீற்றர் ஓட்டம்-எஸ்.யதுர்சன் யாழ்.மத்திய கல்லூரி, ஆர்.றெனோல்ட் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, என்.திலக்சன் யாழ்.இந்துக் கல்லூரி.

400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டம்-எஸ்.யதுர்சன் (1.03 செக்) யாழ்.மத்திய கல்லூரி, என்.திலக்சன் யாழ்.இந்துக் கல்லூரி, எஸ்.சுஜன் யாழ்.மத்திய கல்லூரி.

நீளம் பாய்தல்- கே.டிலக்சன் (6.22 மீ.) கோண்டாவில் இந்துக் கல்லூரி, ஐ.கோல்ட்சயன் சென்.ஜோன்ஸ் கல்லூரி, எஸ்.இனோராஜ் யாழ்.இந்துக் கல்லூரி.

குண்டு எறிதல்-ஆர்.இசைவாணன் கோப்பாய் மத்திய கல்லூரி, எஸ்.நிலக்சன் யாழ்.மத்திய கல்லூரி, எல்.ஜோன் நிலுக்சன் சென்.ஜோன்ஸ் கல்லூரி,

தட்டி எறிதல்- ஆர்.இசைவாணன் கோப்பாய் மத்திய கல்லூரி, எஸ்.நிலக்சன் யாழ்.மத்திய கல்லூரி, எஸ்.மிதுன் யாழ். இந்துக் கல்லூரி.

ஈட்டி எறிதல்-எஸ்.அரவிந் (48.80 மீ.) சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஜி.றதீசன் சென்.பற்றிக்ஸ் கல் லூரி, கே. அரவிந் அச்சுவேலி மத்திய கல்லூரி.

**19 வயதுப் பிரிவில்**

100 மீற்றர் ஓட்டம்- ரி.அன்ரனி றொக்சன் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, எம்.தனுசன் யாழ்.இந்துக் கல்லூரி, எம்.நிலோஜன்சென்.ஜோன்ஸ்கல்லூரி.

200 மீற்றர் ஓட்டம்- எம்.நிலோஜன் (24.1 செக்) சென்.ஜோன்ஸ் கல்லூரி, ரி.அன்ரனி றொக்சன் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, எஸ்.சுஜீகன் இடைக்காடு மகா வித்தியாலயம்.

400 மீற்றர் ஓட்டம்- ரி.அன்ரனி றொக்சன் (54.7 செக்) சென்.பற்றிக்ஸ் கல்லூரி, எம்.நிலோஜன் சென்.ஜோன்ஸ் கல்லூரி, எஸ்.செந்தூரன் யாழ்.மத்திய கல்லூரி.

800 மீற்றர் ஓட்டம்-ஜே.மதுராங்கர் (2:13.2செக்) சென்.ஜேன்ஸ் கல்லூரி,எஸ்.செந்தூரன் யாழ். மத்திய கல்லூரி, பி.எஸ்லாராஜ் சென். பற்றிக்ஸ் கல்லூரி.

1500 மீற்றர் ஓட்டம் - ஜே.மதுராங்கர் சென். ஜோன்ஸ் கல்லூரி, பி.எஸ்லாராஜ் சென். பற்றிக்ஸ் கல்லூரி, எல்.டினோசன் சென். ஜோன்ஸ் கல்லூரி.

5000 மீற்றர் ஓட்டம்- கே.கிரிசாந்தன் (19:31. 3செக்) சென். ஜோன்ஸ் கல்லூரி, எஸ்.புகழ் இனியன் சென். ஜோன்ஸ் கல்லூரி, எஸ். நியூட்டன் கொக்குவில் இந்துக்கல்லூரி.

400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டம்-ஜே.மதுராங்கர் (1:00செக்) சென்.ஜோன்ஸ் கல்லூரி, ரி.செந்தூரன் யாழ்.மத்திய கல்லூரி, பி.டினோசன் சென்.ஜோன்ஸ் கல்லூரி.

நீளம் பாய்தல்- பி.கில்மன்ராஜ் (6.27மீ) சென்.பற்றிக்ஸ் கல்லூரி. ரி.சிவதர்சன் சென்.ஜோன்ஸ் கல்லூரி, ஆர்.கஜலக்சன் யாழ்.மத்திய கல்லூரி.

குண்டெறிதல்- எஸ்.கோணேஸ்வரன் யாழ்.மத்திய கல்லூரி, எம்.சஞ்சீவன் யாழ். மத்திய கல்லூரி, என்டிலக்ஸ்குமார்யாழ்மத்தியகல்லூரி.

தட்டு எறிதல் -ஆர்.விஜுசன் யாழ்.இந்துக் கல்லூரி, என்.டிலக்ஸ்குமார் யாழ்.மத்திய கல்லூரி, எஸ்.கோணேஸ்வரன் யாழ்.மத்திய கல்லூரி.

ஈட்டி எறிதல்- எம்.சஞ்சீவன் (48.41மீ) யாழ். மத்திய கல்லூரி, பி.கில்மன்ராஜ் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, பி.தேவகுமாரன் சென்.ஜோன்ஸ் கல்லூரி.

**21 வயதுப்பிரிவில்**

100 மீற்றர் ஓட்டம் ஜே.அபிராம் (11.7செக்) யாழ்.மத்திய கல்லூரி, ரி.ஸ்ரீவானுசன் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, ஏ.நிரோஜன் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி.

200மீற்றர் ஓட்டம்-ஜே.அபிராம் (24.1செக்) யாழ்.மத்திய கல்லூரி, ரி.ஸ்ரீவானுசன் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, ஏ.நிரோஜன் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

400மீற்றர் ஓட்டம்-ஜே.அபிராம் (52.3செக்) யாழ். மத்திய கல்லூரி, ஏ.அனோஜன் சென்.ஜோன்ஸ் கல்லூரி, டி.ஜோகாஸ் யாழ்.மத்திய கல்லூரி.

500 மீற்றர்-எம்.மகான் யாழ்.மத்திய கல்லூரி, சாம் டேவிட் சென்.ஜோன்ஸ் கல்லூரி, சுபாராஜ் யாழ்.இந்துக் கல்லூரி.

400 மீற்றர் தடை தாண்டல்-டி.ஜொல் ஆகாஸ் யாழ். மத்திய கல்லூரி,ஏ.அனோஜன்சென்.ஜோன்ஸ் கல்லூரி, கே.துஸ்யந்தன் உரும்பிராய் இந்துக்கல்லூரி.

நீளம்பாய்தல்-எஸ்.சாஸ்ஜெகன் (6.23மீ) சென்.பற்றிக்ஸ் கல்லூரி, டி.ஜோகாஸ் யாழ்.மத்திய கல்லூரி, எம்.சஞ்சீவன் யாழ்.மத்திய கல்லூரி.

குண்டு எறிதல்-பி.துவாரகசீலன் (8.10 மீற்றர்) சென்.ஜோன்ஸ் கல்லூரி.

தட்டெறிதல்-சாந்தனேஸ்வரன் பெரிய புலம் மகா வித்தியாலயம், பி.துவாரகசீலன் சென். ஜோன்ஸ் கல்லூரி, ரி.தனுசன் சென். ஜோன்ஸ் கல்லூரி.

ஈட்டி எறிதல்- ஜே.பினிகாஸ் (45.45மீற்றர்) யாழ்.மத்திய கல்லூரி, பி.துவாரகசீலன் சென்.ஜோன்ஸ் கல்லூரி, எம்.கஜீகரன் கோப்பாய் கிறிஸ் தவக்கல்லூரி. (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியை வீழ்த்தி புள்ளி பட்டியலில் முதலிடம் பிடித்தது சென்னை

பஞ்சாப் அணிக்கு எதிரான ஐபிஎல் லீக் ஆட்டத்தில் சென்னை அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

மொகாலியில் நேற்று நடந்த ஐபிஎல் ஆட்டத்தில் சென்னை-பஞ்சாப் அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணித்தலைவர் ஜோர்ஜ்



பெய்லி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தார்.

அதன்படி பஞ்சாப் அணி முதலில் களமிறங்கி விளையாடியது.

தொடக்க வீரர்களாக சகா, வோரா இறங்கினர். சகா 15 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்த வந்த அணித்தலைவர் பெய்லி 12 ஓட்டங்களில் நடையை கட்டினார்.

வோரா (4), குருக்கீரட் சிங் (15) நிலைக்கவில்லை. மக்ஸ்வெல் (6) ஏமாற்றினார். இதனால் 55 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 5 விக்கெட்டுகளை இழந்து பஞ்சாப் அணி தவித்தது.

பின்னர் வந்த மில்லரும் 11 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். அக்சர் படேல் (32) சற்று நம்பிக்கை அளித்தார்.

இதனால் பஞ்சாப் அணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 130 ஓட்டங்களே எடுத்தது. ரிஸி தவான் (25), ஹென்றிக்ஸ் (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

சென்னை சார்பில், நெகி 2, ஈஸ்வர் பாண்டே, நெஹ்ரா, அஸ்வின், ஜடேஜா, பிராவோ தலா ஒரு விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

இதைத் தொடர்ந்து களமிறங்கிய சென்னை அணிக்கு மைக் ஹசி (1), மக்கலம் (6) ஏமாற்றினர்.



பின்னர் ஜோடி சேர்ந்த டுபிளசி, ரெய்னா நிதானமாக விளையாடி ஓட்டங்கள் சேர்த்தனர். டுபிளசி (55) அரைசதம் கடந்து ஆட்டமிழந்தார்.

அடுத்து அணித்தலைவர் தோனி (25), ரெய்னாவுடன் சேர்ந்து பொறுமையாக விளையாடினார்.

இதனால் சென்னை அணி 16.5 ஓவர்களிலே 134 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

தோனி (25), ரெய்னா (41) கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தனர். போட்டியின் ஆட்டநாயகனாக சென்னை வீரர் நெகி தெரிவு செய்யப்பட்டார். (க)



# கொல்கத்தா நைட் ரைடர்ஸை பந்தாடி இறுதிக்குள் நுழைந்தது ராஜஸ்தான்

கொல்கத்தாவுக்கு எதிரான ஐ.பி.எல்., லீக் போட்டியில் ஷேன் வோட்சன் சதம் அடித்து கைகொடுக்க ராஜஸ்தான் அணி 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிச் சுற்றுக்குள் முன்னேறியது.

மும்பையில் நடந்த ஐ.பி.எல்., லீக் போட்டியில் ராஜஸ்தான், கொல்கத்தா அணிகள் விளையாடின. நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணி கப்டன் ஸ்டீவ் ஸ்மித், துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

ராஜஸ்தான் அணிக்கு அஜின்கியா ரகானே, ஷேன் வோட்சன் ஜோடி நல்ல தொடக்கம் தந்தது. முதல் விக்கெட்டுக்கு 80 ஓட்டங்கள் சேர்த்த போது ரகானே (37) அவுட்டானார். அடுத்து வந்த கப்டன் ஸ்டீவ் ஸ்மித் (14), சஞ்சு சாம்சன் (8), ஜேம்ஸ் போல்க்னர் (6), கருண் நாயர் (16) சொற்ப ஓட்டங்களில் அவுட்டாகினர். அபாரமாக ஆடிய வோட்சன், சிக்சர், பவுண்டரிகளாக விளாசினார். உமேஷ் யாதவ் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய வோட்சன், ஐ.பி.எல்., அரங்கில் தனது 2வது சதத்தை பதிவு செய்தார். கிறிஸ் மோரிஸ் (4) ஓட்டங்களில் அவுட் ஆனார்.



ராஜஸ்தான் அணி 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 199 ஓட்டங்கள் குவித்தது. வோட்சன் (104 ஓட்டங்கள், 59 பந்து, 5 சிக்சர், 9 பவுண்டரி) அவுட்டாகாமல் இருந் தார். கொல்கத்தா அணி சார்பில் ரசல் 3, உமேஷ் யாதவ் ஒரு விக்கெட் கைப்பற்றினர்.

200 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய கொல்கத்தா அணி 20 ஓவரில் 9 விக்கெட்டுகளை இழந்து 190 ஓட்டங்களை எடுத்தது. இதனால் ராஜஸ்தான் அணி 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் ராஜஸ்தான் அணி குவாலிபயர் சுற்றுக்கு தகுதி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக ஷேன் வோட்சன் தெரிவானார். (க)




# சோதிடருக்கு பணம் கொடுக்காது ஏமாற்றிய மகிந்த?

அரசியல்வாதிகள் தன்னை பயன்படுத்தி பாரிய தேவைகளை நிறைவேற்றி கொண்டதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆஸ்தான சோதிடர் சுமன தாஸ அபே குணவர்தன தெரிவித்துள்ளார். அதற்காக அந்த அரசியல்வாதி கள் தனக்கு கடன்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தன்னிடம் சோதிடர் சேவை பெற்றுக்கொண்ட அரசியல் வாதி கள இன்னும் அதற்கான கட்டணத்தை கூட செலுத்தவில்லை என அவர் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி தனது சோதிடத்தின் ஆலோசனையின் அடிப்படையிலே அவசரமாக ஜனாதிபதி தேர்தலை நடத்த தீர்மானித்ததாக தகவல் வெளியாகியிருந்தன.

மகிந்த ராஜபக்ஷ நிச்சயம் தேர்தலில் வெற்றி பெறுவார் என ஊடகங்களில் கூறி வந்தார். எனினும் தேர்தல் முடிந்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட சுமனதாஸ, முன்னாள் ஜனாதிபதி தேர்தலில் தோற்பார் என தான் அறிந்து வைத்திருந்ததாகவும் கூறியிருந்தார்.

எனினும் முன்னாள் ஜனாதிபதியின் மனநிலையை எண்ணி தான் அதனை அவரிடம் வெளிப்படுத்தவில்லை என சுமனதாஸ குறிப்பிட்டிருந்தார். (11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தமிழில்...

லாம் என்று தான் கருதுவதாக அவர தெரிவித்தார்.

உயர்கல்வி மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சுடன் செங்கலடி பிரதேச செயலகம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த கண்காட்சி நிறைவின் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நிகழ்வின் முடிவில் தமிழ் மொழியில் தேசிய கீதம் ஒலிக்கப்பட்ட போது அங்கிருந்த சிங்கள மாணவர்கள் ஆத்திரமுற்ற நிலையில் காணப்பட்டதாக அவர் கூறினார்.

பின்னர் அந்த மாணவர்கள் சிங்கள மொழியிலும் தேசிய கீதத்தை ஒலிக்கச் செய்ததாகவும் நிகழ்வின் பினனர் வெளியேறிச் சென்றவேளை இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

சிங்கள மொழியில் பேசியவர்களே தன் மீது தாக்குதல் நடத்தியதாகவும் தாக்குதல் நடத்திய முக்கிய நபரொருவரை தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும் பத்தக்குட்டி சுமன் கூறினார்.

தேசிய கீதம் ஒலிப்பது தொடர்பான பர்ச்சினையே தாக்குதலுக்கு காரணம் என்று தமது விசாரணையில் தெரிய வந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர கூறினார்.

இலங்கையில் நீண்டகாலமாக தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் தேசிய கீதம் ஒலிக்கப்பட்டு வந்த நிலையிலும் கடந்த அரசாங்கக் காலத்தில் சிங்கள மொழியில் மட்டும் ஒலிக்க வேண்டும் என்ற அறிவுறுத்தல்கள் வந்திருந்தன.

எனினும் தமிழில் தேசிய கீதம் பாடுவதற்கு நாட்டில் தடையேதும் இல்லை என்று புதிய அரசாங்கம் அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (11)

## செம்மணியில் விபத்து...

டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழநதுள்ளார். நேற்று சனிக்கிழமை காலை ஆறு மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில்,

நல்லூர் ராணி வீதியைச் சேர்ந்த சிவலிங்கம் சுஜந்தன் (வயது 23) என்பவரே உயிரிழந்தார்.

நல்லூரில் இருந்து முகமாலை நோக்கி சென்றுகொண்டிருந்த கண்ணி வெடியகற்றும் நிறுவன வாகனம் மீது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப் பாட்டை இழந்து மோதியதில் இவ்விபத்து இடம்பெற் றுள்ளது.

விபத்தில் உயிரிழந்த இளைஞனின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் குறித்த கண்ணிவெடியகற்றும் நிறுவனத்தின் வாகன சாரதியினை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கைதுசெய்யப்பட்ட சாரதியை யாழ்பொலிஸார நீதி மன்றில் ஆஜரப்படுத்திய போது, எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்கு மாறு நீதிவான் உத்தர விட்டுள்ளார். (4)


**தங்குமிடவசதி**

வெள்ளவத்தையில் A/C, Non A/C உடனான தனி அறைகள் வாடகைக்குப் பெற்றுக்கொள்ள இன்றே அழையுங்கள். யாழ்.மகால் Rest

தொடர்புகளுக்கு :- 19/1, சுவி சித்தாரா றோட், வெள்ளவத்தை, கொழும்பு-06 (065)

T.P :- 0113158398, 0770260180, 0773074477


## ரவிகரனும்...

செய்யப்பட்டுள்ளது.

கௌரவ முதலமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் கலந்து கொளளும் குறித்த நிகழ்வு அமைதியான முறையிலேயே நடைபெறும் என்றும் அமைதியைக் குலைக்கும் வகையிலான எந்த ஒரு நடவடிக்கையும் இடம்பெறாது என்றும் தெரிவித்தார்.

இதேவேளை வடமாகாண அவைத்தலைவரால் பொலிஸ் மேலதிகாரிகளுக்கு முறைப்படி இந்நிகழ்வு குறித்து அறிவிக்கப்படிருப்பதையும் தெரிவித்தார்.

பதிலளித்த பொலிஸ நிலைய பொறுப்பதிகாரி பேரணி, ஆர்ப்பாட்டம் என்று மட்டுமல்ல..அனைத்து வகையான நிகழ்வுகளையும் அந் நாளில் நீதிமன்று தடை செய்திருக்கிறது.

குறித்த நாளில் எந்த ஒரு நிகழ்வு அங்கே இடம்பெற்றாலும் அது நீதிமன்ற அவமதிப்பாகவே கருதப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இதையடுத்து ரவிகரன், இது குறித்து வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், சுகாதார அமைச்சர் அவர்களுக்கும் சக உறுப்பினர்களுக்கும் அறிவித்துள்ள தாகவும் நிலைமையை

சாதகமாக எதிர்கொளவது குறித்து கலந்துரையாடி வருவதாகவும் தெரிவித்துள்ளார். (11)

## காணாமல்...

சாலை பதிவேடுகளில் குறிப்பிடப் பட்டுள்ளமையே இதற்குக் காரணமாகும்.

வைத்தியசாலைகளின் நோயாளர பதிவேட்டிலுள்ள விபரங்கள் கணனியில் பதிவேற்றம் செய்யப்பட்டதன் பின்னரே தகவல்கள் ஆராயப்படும எனவும் காணாமற் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் மேலும் கூறியுள்ளார். (11)

## அனுராதபுர...

பிவிதுரு ஹெல உருமய தலைவர் உதய கம்மன்பில, அது தொடர்பான பிரசார நடவடிக்கைகள் குறித்து தற்போது விரிவான கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடாக தேர்தலில் போட்டியிட முன்னாள் ஜனாதிபதிக்கு வாய்ப்பு வழங்காவிட்டால் அதற்கான மாற்று நடவடிக்கை என்ன என எழுப்பப்பட்ட கேள்விக்கு, பதிலளித்த கம்மன்பில அதற்கான தீர்வு தமது அணியிடம் இருப்பதாக தெரிவித்துள்ளார். (11)

## அயுத பரல்...

டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு உடனடியாக தகவல் வழங்கியதையடுத்து குறித்த இடத்திற்கு வந்த பொலிஸார் அவற்றை இராணுவத்தினரின் உதவியுடன் மீட்டுள்ளனர்.

இச்சம்பவத்தினால் குறித்த இடத்தில் பெருமளவிலான பொது மக்கள் அதனை பார்ப்பதற்கு குவிந்ததோடு இராணுவம் மற்றும் பொலிசாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

மேலும் மீட்ட ஒரு பரலை திறந்து பார்த்தபொழுது கைக்குண்டுகள் மற்றும் 1986 ஆம் எழுதப்பட்ட கடிதம் போன்ற விளக்க குறிப்பொன்று காணப்பட்டுள்ளது அதில், 4 மூட்டை கிறிஸ், ஒன்பது கணக்கு வழக்குகள் என்று எழுதப்பட்ட கடிதம் ஒன்றும் காணப்பட்டது. மேலும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கோப்பாய பொலிஸார் மேற்கொணடு வருகின்றனர். (11)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## முள்ளிவாய்...

தாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொன்னம்பலம் கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரனுக்கு இந்த நீதிமன்ற தடை உத்தரவு தொடர்பில் அறிவிக கப்பட்டுள்ளது.

போரின் போது உயிரிழந்த பொது மக்களுக்கு அஞ்சலி செலுத்த தடையில்லை என இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்த நிலையில், நீதிமன்றம் இத்தடையை விதித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (11)

## தேர்தலின்...


எனவே, பிரதான தனிக் கட்சியே ஆட்சியமைக்க வேண்டும். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

எமது பிரதான எதிரி ரணில் விக்கிரமசிங்க ஆவார். அவரை ஒன்றிணைத்து எதிர்கால அரசியலை மேற்கொள்ள முடியாது.

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்த்துவதே எமது நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் மீண்டும் தேசிய அரசு அமைவதற்கான சாத்தியம் உள்ளதா எனக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (11)


**cctv துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் வாய்ப்பு**



ஒரு நாள் செயன்முறை பயிற்சி நெறி | 4 நாட்கள் வதிவிட பயிற்சி நெறி

**CCTV, PABX Intercom, Network Cabling & Wireless**

- CCTV Camera Installation
- Cabling for CCTV Camera
- PABX Intercom Installation
- Cabling for PABX System
- Structured Network Cabling
- Wireless Router Installation & Configuration



**CCTV, PABX Intercom Fiber & Copper Cabling Access Control System**

- Copper Cabling with Practicals
- Fiber Cabling with Practicals
- CCTV Camera Installation
- Cloud Configuration
- Mobile & Remote Monitoring
- DDNS Configuration
- Backup & Access Permission
- DVR/NVR & Hard Disk Configuration
- IP Camera Installation & Configuration
- PABX Intercom Installation
- Key Phones Configuration
- Smart Home Installation
- Access Control Systems
- Security Alarm Systems
- FingerPrint Access

* 12 வருடஅனுபவம்வாய்ந்த ஆசிரியர் குழாம்
* தொழிற்துறை அனுபவம் வாய்ந்த வல்லுனர்கள்
* குறைந்த கட்டணம்
* Real Equipments இனால் பயிற்சி வழங்கப்படும்
* உணவு மற்றும் தங்குமிட வசதி வழங்கப்படும்
* இலவசமாக கருவிகள் வழங்கப்படும்
* WinSYS இனால் அங்கீகாரம் வழங்கப்பட்ட சான்றிதழ்

**Hello 077-3013060**

**WinSYS NETWORKS®**
The network security training provider of the nation
#77, Clock tower Road, Jaffna
www.winsys.lk | info@winsys.lk

BRANCHES
Colombo : 0777-259927
Kandy : 0777-047708
Batticaloa : 0777-832871

(C-983)



**மருத்துவ ஆய்வுகூட சேவைகள்**

லக்ஸ்மி மருத்துவ ஆய்வுகூடம் யாழ் வீதி மானிப்பாய்
லக்ஸ்மிமெடிகெயார் ஆனைக்கோட்டை வீதி நவாலி
CLINDIAG - SA-20-2014-Belgium தயாரிப்பு Bio Chemistry Analyzer - மூலம் துல்லியமான ஆய்வுகள், அனுபவம் மிக்க MLT விரைவான சேவை, மனிதாபிமான கட்டணங்கள். (492)

7.00A.M - 7.30 P.M CALL : 0217094444



**WEC சட்டரீதியான வீசா ஆலோசனை மையம்**



மாணவர்கள், பெற்றோர்களின் வேண்டுதலுக்கு அமைவாக தற்பொழுது WEC நிறுவனம் வடமராட்சி நகரான நெல்லியடியிலும்...

ஐரோப்பிய நாடுகளில்
உயர் கல்விகற்க மாணவர்களே உங்களிற்கு ஒரு மகத்தான வாய்ப்பு...
IELTS வேண்டவே வேண்டாம்.
G.C.E O/L 6 பாட தகுதியே போதுமானது.
(மேலதிக விபரங்கள்: 0779265447)

மேல்மாகாண பிரபல ஆசிரியரின் வழிகாட்டலில் IELTS, City&Guilds A1,B1 வகுப்புக்கள்.

திருமணம் முடித்து sponsor visa இல் UK செல்பவர்களுக்கு IELTS life skills இற்குரிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (100% பரீட்சையில் சித்தியடைய நாம் உத்தரவாதம் வழங்குகின்றோம்)

City&Guilds Approved Centre UK

(C-970)

சங்கத்தானை, சாவகச்சேரி (இந்துக்கல்லூரிக்கு அருகே) ☎ 021 7200 989
பருத்தித்துறை வீதி, நெல்லியடி (றுகின்ஸ் Hospitel அருகே) ☎ 021 7201 929



**மருந்தாளர் தேவை**

பிரபலமாக இயங்கிவரும் மருந்தகத்திற்கு Srilankan Medical Council இல் பதிவு செய்யப்பட்ட மருந்தாளர் தேவை.

(C-985) தொடர்புகளுக்கு :- 0777787545, 0771728141





**வெளிநாடுகளுக்கான தபால் பொதிகள் சேவை**

- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- வெளிநாடுகளில் இருந்து பொதிகளை பெற்றுக்கொள்ளும் வசதி

**Speed Lanka Express (Pvt) Ltd.**

135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (984)

தொ.பே:- 0776217926, 021 2217180

www.speedlanka.net


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை ... றோட், ... என்னும் முகவரியில் ... அவர்களது அச்சகத்தில் 17.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி

# சங்குநாதம்

Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2046 17.05.2015 தொலைபேசி : 021 222 3378

நாதம் 15





## புங்குடுதீவில் மாணவி கொலை
# நடந்தது என்ன ?




உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம்... மீண்டும் இடப்பெயர்வை நோக்கி...


குருஷேத்திரம்

தமிழர் தாயகத்தில் இருந்து புத்திஜீவிகள் புலம்பெயர்ந்ததற்குக் காரணம் நாட்டில் நடந்த யுத்தம் என்று கூறுவோர் உளர். எனினும் யுத்தம் என்பதற்கு அப்பால் இன்னுமோர் முக்கியமான விடயமும் எம் புத்திஜீவிகளின் புலம்பெயர்வுக்குக் காரணம் என்பதைக் கூறித்தானாகவேண்டும்.

தமிழர் தாயகத்தில் அதிலும் குறிப்பாக வடபுலத்தில் சண்டித்தனக் கலாசாரத்தின் மேலெழுகை புத்திஜீவிகளின் கௌரவமான வாழ்க்கைக்குப் பெரும் பங்கமாக அமைந்து போனது.

## நிம்மதியை வேரறுக்கும் சண்டித்தனங்களின் தாண்டவம்

படித்தவர்கள் பயந்து வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட போது, இனிமேல் இங்கு வாழ்வது அர்த்தமற்றது என்ற முடிவுக்கு அவர்களைக் கொண்டு சென்றது.

படித்தவர்கள்; பண்பானவர்கள்; இப்படித்தான் வாழவேண்டும் என்று நினைத்தவர்களுக்கு வடபுலத்தின் சண்டித்தனச் சமூகம் சொல்லொணாத் துயரங்களைக் கொடுத்தது.

எதிர்த்துக் கதைத்தால், கத்தியை- வாளை நீட்டுகின்ற நிலைமை நீடித்த போது வடபுலம் அருமந்த புத்திஜீவிகள் பலரை புலம்பெயர்வுக்கு விட்டுக்கொடுத்தது.

வடபுலம்- யாழ்ப்பாணம் படித்த மண் என்ற பெருமைக்குரியது என இப்போதும் நாம் மார்தட்டுவது எங்கள் மண்ணில் இருந்து வேர் அறுத்துப் போனவர்களால் என்பதை மறந்து விடலாகாது.


இன்று யுத்தம் முடிந்து விட்டதாயினும் விடுதலைப் புலிகள் இல்லாத மண்ணில் மீண்டும் சண்டித்தனச் சமூகத்தின் கரங்கள் ஓங்கத் தலைப்பட்டு விட்டன. சண்டித்தனக் கலாசாரம் வீதிகளில் இறங்க முடியாத ஒருநிலைமையைத் தோற்றுவிக்கும் என்பது நிறுதிட்டமான உண்மை.

அதேநேரம் படித்தவர்கள்; பண்பானவர்கள்; பிறந்த மண்ணில்சேவையாற்ற வேண்டுமென்ற நினைப்போடு வாழுகின்றவர்கள் இந்த மண்ணில் இருந்து வேரறுத்து வெளிக்கிடுகின்ற முயற்சியில் இறங்கத் தலைப்படுவர் என்பதும் உண்மை.

ஆம்,யுத்தத்திற்குப் பின்பான ஒரு இடப்பெயர்வை வடபுலம் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணம் சந்திக்கவுள்ளது.

யாழ்ப்பாண மண் என்றும் அமைதியாக- சுமுகமாக- சமாதானமாக இருக்க முடியாது என்பது உறுதியாகிவிட்டது.

சண்டித்தனத்தை; குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த வேண்டிய பொலிஸாரில் பலர் குற்றவாளிகளின் நெருக்கமான நண்பர்களாக இருக்கின்றனர். இதனால் குற்றம் புரிபவர்களின் விடுதலை என்பது உடனடிச் சாத்தியமாகிறது.



பிணையில் விடுதலையான குற்றவாளிகளின் அடுத்த கட்ட நடவடிக்கை மீண்டுமொரு குற்றத்தை இழைப்பதாக- பழி தீர்ப்பதாக இருப்பதைக் காண முடியும்.

கூடவே குற்றவாளிகளைக் காப்பாற்றுவதையே தங்கள் பணியாகக் கருதுகின்ற வக்கீல்கள் சிலரின் பிரதி உபகாரங்களும் இந்த மண்ணில் பண்பானவர்கள் வாழமுடியாது என்ற சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

இதேசமயம் மிக மோசமான குற்றம் புரிந்தவர்களுக்கும் தண்டனை கிடைப்பதற்குப் பல ஆண்டுகள் ஆகின்றநிலையில் சண்டித்தனங்கள் முற்றி முறுகி வைரம் பாய்ச்சி விடுகின்றன.

இது ஒருபுறம் இருக்க இப்போது எங்கள் மண்ணில் விதைபட்டுள்ள போதைவஸ்துக்கள் உருத்திரதாண்டவம் ஆடத் தொடங்கி விட்டது.

ஆம், எங்கள் இளஞ்சந்ததியைத் திட்டமிட்டு வெட்டிச் சரிக்க செய்த நாசகாரம் பேய் ஆட்டம் ஆடுகிறது.

தடுப்பார் இல்லை. தட்டிக் கேட்பார் இல்லை. என்ன செய்வது எங்கள் மாணவச் செல்வங்களையும் போதைப்பொருள் பழிதீர்க்க எத்தனிப்பதன் காரணமாக வடபுலம் மனித இனம் வாழக்கூடிய இடமல்ல என்றொரு நினைப்பை ஏற்படுத்தப் போகிறது.

இதனால்தான் சொல்கிறோம் வடபுலத்தில்- யாழ்ப்பாணத்தில் இன்னுமொரு புலம்பெயர்வு சாத்தியமாகப் போகிறது.

புத்திஜீவிகள், மருத்துவர்கள், உயர்தகைமை பெற்றோர், வசதி படைத்தோர் யாழ்ப்பண மண்ணை விடுத்து புலம்பெயர்வர். இப்புலம் பெயர்வைக் கட்டுப்படுத்தக்கூடிய சாத்தியப்பாடுகள் எதுவும் தெரிவதாக இல்லை.



அடுத்த வீட்டில் அவலக் குரல் கேட்டால் எங்கள் வீட்டுக் கதவை இறுக்கப் பூட்டி ஒளிரும் மின்குமிழை நிறுத்திவிடுகின்ற பயம் எங்களை வருத்திக் கொள்கிறது. இனியும்பொறுக்க முடியாது.

வெளிக்கிடுவதுதான் ஒரே வழி என்ற முடிவை எடுக்கின்ற காலம் நெருங்கி வருகின்றது.

தாயகத்தை மீட்டு, தனிநாட்டில், தமிழராய் தலைநிமிர்ந்து நிற்போம் என்று நினைத்த ஒரு இனம் கவிஞர் வைரமுத்துவின் கள்ளிக்காட்டுக்கதையாக மாறப் போகும் சோகத்தை எப்படி ஆற்றுப்படுத்துவது.

நல்ல அரசியல் தலைமை இல்லை. பாதுகாப்புத் தரக்கூடிய கௌரவமான பொலிஸ் சேவை இல்லை. எங்கும் இலஞ்சம், எங்கும் ஊழல் எப்படி குற்றச் செயலை ஒழிப்பது ஒரு குற்றத்தை இன்னொரு குற்றத்தால் ஒழிக்கமுடியுமா என்ன?

குற்றச் செயல்கள் ஒழிக்கப்பட வேண்டுமாயின் மிக மோசமான குற்றவாளிகளை நீதிமன்றில் நிறுத்தாமல் ஊர்திரண்டு மரண தண்டனை விதிக்கின்ற முறைமை கொண்டுவரப்படவேண்டும் அல்லது சவுதிச் சட்டம் இங்கும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். இல்லையேல் எங்கள் மண்ணின் சண்டித்தன சமூகம் எதையும் உருப்பட விடாது என்பது நிறுதிட்டமான உண்மை.

கூடவே ஒரு உண்மையையும் இங்கு கூறித்தானாக வேண்டும். விடுதலைப்புலிகளுக்கு மக்கள் வழங்கிய ஆதரவு என்பது தனித்து தமிழீழத் தாயகத்திற்காக மட்டுமல்ல. மாறாக தமிழர் தாயகத்தில் மேலோங்கியிருந்த சண்டித்தனத்தை வெட்டிச் சரிக்க வேண்டும் என்பதற்காகவுமே மக்களின் ஆதரவு விடுதலைப்புலிகளுக்கு இருந்தது என்பதை ஆட்சியாளர்களும் பொலிஸ் தரப்பும் உணர்ந்து கொண்டால் நல்லது.

எனினும் அத்தகையதொரு உணர்நிலை ஏற்படப் போவதில்லை என்பது உறுதி. காலத்திற்குக் காலம் வடபுலத்தில் நடந்தேறும் கொடூரக் கொலைகளும் வாள்வெட்டுக் கலாசாரங்களும் அடிதடிகளும் ஒருபோதும் குறையப் போவதில்லை.

மக்கள் சமூகத்தில் அமைதியை ஏற்படுத்த வேண்டிய பொலிஸார் குற்றச்செயலில் ஈடுபடுபவர்களுடன் நெருக்கமான நட்புறவை கொண்டிருந்தால், குற்றம் புரிவோர் யாருக்குப் பயம் கொள்ள வேண்டும்.

ஆக நல்லவர்களே பயப்பட வேண்டிய காலம் இது. அதனால் அவர்களின் முடிபு புலம்பெயர்வு என்பதாக மட்டுமே இருக்க முடியும்.

விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

ஆலடிப் பிள்ளையார் கோயில் திருவிழா தொடர் சொற்பொழிவில் விதானையார் விசுவலிங்கம் உரையாற்றிக் கொண்டிருந்தார். ஆலயம் தொழுவது சாலவும் நன்று... என்பது அவர் ஆற்றும் உரையின் கருப் பொருள்.

அடியார் பெருமக்களே! ஆலயம் என்பது ஆன்மாக்கள் லயப்படுகின்ற இடம். ஆன்மலயம் ஏற்படாவிட்டால் மனித வாழ்வு சிதைந்து விடும்.

இதனால்தான்கோயில் இல்லாஊரில் குடியிருக்க வேண்டாம் என்று தமிழ் மூதாட்டி ஔவையார் நமக்குச் சொல்லி வைத்தார்.

கோயில் இல்லா ஊரில் குடியிருந்தால் மனிதனிடம் இருக்கக்கூடிய தெய்வீகம் அழிந்துவிடும். மனிதன் தெய்வீகத்தை இழந்து போவானாயின் வாழ்க்கை அர்த்தமற்றதாகிப் போகும்.

ஆகையால்தான் கோயில் உள்ள ஊர்களில் குடியிருந்து ஆலய வழிபாடுகளை நடத்தி எங்களை நாம் செம்மைப்படுத்த வேண்டும்.

எனினும் இன்று ஆலயங்களில் வழிபடுநர்கள் இல்லை. ஆலய வழிபாடு அருகி விட்டது.

எந்நேரமும் கணனிக்கு முன் குந்தியிருந்து காலம் போக்கும் எங்கள் இளம் சந்ததியின் எதிர்காலம் எப்படியாகிப் போகும் என்ற கவலை எவரிடமும் இல்லை.

வீட்டில்; வீதியில்; அலுவலகத்தில் என சர்வமும் கையடக்கத் தொலைபேசி என்றாகிவிட்டபோது... எங்கள் பிள்ளைகள் எதிர்காலத்தில் என்னாவர்...? நினைக்கவே இதயம் படபடக்கிறது...

இப்படி விதானையார் விசுவலிங்கத்தின் சொற்பொழிவு நீண்டு நிறைவு பெறுகிறது. சொற்பொழிவு நிறைவுற்ற கையோடு ஆலடி மாநாடு கூடத் தொடங்கிற்று.

பண்டிதர் பரமலிங்கத்தின் தலைமையில் கூடிய மாநாட்டில் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தினர். எந்த அறிவிப்பும் இல்லாமல் அந்த அஞ்சலி நடந்தது. புங்குடுதீவில் படுகொலை செய்யப்பட்ட மாணவிக்கான அஞ்சலித்தல் அது.

வாத்தியார் வைத்திலிங்கம்

**யாரொடு நோகேன்**
**யார்க்கெடுத் துரைப்பேன்**

என்ற திருவாசகத்தை மோகனத்தில் பாட, எழுந்து நின்றவர்களின் கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. தொடர்ந்து மூப்பர்

**எல்லாம் வல்ல இறைவா! புங்குடுதீவில் படுகொலை செய்யப்பட்ட அந்த மாணவியின் ஆத்மாவுக்கு இளைப்பாறலைக் கொடுத்தருளும்...**

மௌன அஞ்சலியோடு அனைவரும் ஆலடியில் அமர்ந்தனராயினும் கவலையால் அடைத்துப்போன குரலை ஒழுங்குபடுத்த முடியாமல் திணறினர்.

கங்காணி கார்த்திகேயன் ஒரு மாதிரியாக மௌனத்தைக் கலைத்தார்.

**கங்காணி:** கடவுளே! புங்குடுதீவில நடந்த படுகொலையை நினைக்க நெஞ்சு வலிக்குது. இப்படியும் ஒரு கொடுமைத்தனம். மிருகங்கள் கூட இப்படியொரு கொடுமையைச் செய்யாது.

**பண்டிதர்:** கங்காணியார் இப்படியான மிருகத்தனங்களை கட்டுப்படுத்த முடியும்.

**மூப்பர்:** எப்படிப் பண்டிதர்.

**பண்டிதர்:** ஊர் திரண்டு குற்றம் செய்தவர்களை அடித்துத் துவம்சம் செய்வதுதான் ஒரேவழி.

**வாத்தியார்:** இப்படிச் செய்தால் செய்தவர்களைச் சட்டம் தண்டிக்குமல்லோ!

**பண்டிதர்:** ஏன் தண்டிக்கப்போகுது. ஊரில் உள்ள அத்தனைபேரும் சேர்ந்து நாங்கள்தான் தண்டனை கொடுத்தோம் என்றால் சட்டம் எப்படி தண்டிக்க முடியும்.

**விதானையார்:** இதைவிட இந்தியாவில் என்கவுண்டர் என்றொரு சட்டமுறை உண்டு. இங்கயும் அந்த முறை உள்ளதாயினும் அதனைப் பிரயோகிப்பது மிகக் குறைவு. அந்த என்கவுண்டர் முறையில் போட்டுத் தள்ளுறதுதான் ஒரே வழி.

**வாத்தியார்:** எதுவாக இருந்தாலும் புங்குடுதீவில மாணவி ஒருவர் கொலை செய்யப்பட்டதை பலரும் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்தது எங்கட சமூகத்தில ஏற்பட்ட ஒரு விழிப்புணர்வு என்று தான் சொல்ல வேண்டும்.

**கங்காணி:** இருந்தும் எங்கட யாழ்ப்பாண பாடசாலைகள் கண்டிக்கத் தவறி விட்டதுதான் வேதனைக் குரியது. ஒருபாடசாலை மாணவி கொல்லப்பட்டதற்கு ஒரு சிறு எதிர்ப்பையேனும் எங்கட பிரபல்யமான பாடசாலைகள் காட்டி இருக்கலாம்.

**பண்டிதர்:** அதிபர் இட மாற்றம் என்றால்தான் இவையள் ஆர்ப்பாட்டம் செய்வினம். அதுக்குத்தான் பழைய மாணவர் சங்கங்களும் கொடி பிடிக்கும். மற்றும் படி புங்குடுதீவில் மாணவி படுகொலை என்றால் அதற்கும் தங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது போல மௌனமாய் இருந்து விடுவினம்.



## யாழ்ப்பாண பாடசாலைகள் ஆர்ப்பாட்டம் செய்யாதது ஏன்?

**மூப்பர்:** அது சரி ஊர்காவற்றுறைப் பொலிஸார் நடந்து கொண்ட முறையைப் பார்த்தியளோ?

**கங்காணி:** ஐயோ! கடவுளே! அதையேன் கேட்கிறியள். ஊர்காவற்றுறைப் பொலிஸாரைப் போல... என்ர வாழ்க்கையில நான் பார்த்தது கிடையாது.

இதைவிட புங்குடுதீவில நடந்த சம்பவத்திற்கு ஊர்காவற்றுறைக்கு வந்து முறைப்பாடு செய்வதென்றால், எப்படி இருக்கும் நிலைமை.

ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தை இரண்டு அல்லது மூன்றாகப் பிரித்து புங்குடுதீவில் ஒரு பொலிஸ் நிலையத்தை ஆரம்பிக்க வேணும்.

**விதானையார்:** மூப்பர் நீங்கள் சொல்லுறது நியாயமானதுதான்.

யாழ்ப்பாணத்தில் இருந்து 5 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள மண்டைதீவுக்கு பொலிஸ் நிலையம் 20 மைல் தூரத்தில இருக்கிற ஊர்காவற்றுறை என்றால் பாருங்களன்.

**வாத்தியார்:** ஏன் முன்பு யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவுக்குள்ளதானே மண்டைதீவு இருந்தது.

**விதானையார்:** இது பற்றி யார் வாத்தியார் கதைக்கிறது. எங்கட அரசியல்வாதிகளுக்கு இதுபற்றி ஏதேனும் தெரியுமோ என்ன?

**பண்டிதர்:** இஞ்ச விதானையார் அரசியல் எங்களுக்கு வேண்டாம். முதலில மாநாட்டிற்கு வந்த கடிதங்களைப் படிப்பம்.

**வாத்தியார்:** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் ஏற்கனவே பெறப்பட்ட கையெழுத்துப் பிரதிகளை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தியதாக யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் இராசகுமாரன் விடுத்த அறிக்கையை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் முற்றாக நிராகரித்துள்ளது.

இராசகுமாரனின் குற்றச்சாட்டு தவறானது. யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் ஒரு போதும் கையெழுத்துப் பிரதிகளை துஷ்பிரயோகம் செய்யவில்லை. தேவையென்றால் ஆவணங்களை நேரில் வந்து பார்வையிட முடியும் என்றும் அச்சங்கம் கூறியுள்ளது.

**மூப்பர்:** கடவுளே ! கடவுளே! எங்கட தமிழ்ச் சனங்கள் எத்தனையோ கஷ்டங்களை அனுபவிக்க, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஒருதரை ஒருதர் மாறி மாறி குற்றஞ்சாட்டி அருமந்த பல்கலைக்கழகத்தை நாசமறுக்கினம்.

என்ன செய்வது தட்டிக் கேட்பதற்கு யாரும் இல்லாததால் அவர்கள் தங்களுக்கென்று ஒரு களத்தை அமைத்து எதுகும் செய்யலாம் என்ற நினைப்போடு நடந்து கொள்ளுகினம்.

எல்லாவற்றுக்கும் என்றோ ஒரு முடிபு இருக்குது என்ற தத்துவத்தை விஞ்ஞானமாய் இருந்தாலும் சரி , கலையாய் இருந்தாலும் சரி , மருத்துவமாய் இருந்தாலும் சரி ஏற்றுத்தானாக வேண்டும்.

மூப்பர் இப்படிக் கூறி முடிக்க ஆலடி மாநாடு நிறைவடையும் நேரமும் நெருங்க, மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து பிள்ளையார் கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புத்தியே பலம்



புத்தூர் என்ற ஊரிலே இளங்கோ என்ற இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் உடல் வலிமை இல்லாதவன். அவன் பார்ப்பதற்கு சுமாரான உடல்கட்டு கொண்டவனாக இருந்தாலும், அவனால் கடினமான வேலைகள் எதையும் செய்யமுடியாது. ஆனால், பிறரது பலத்தை தனக்குப் பயன்படுத்திக்கொள்வதில் அவனை மிஞ்ச யாராலும் முடியாது.

இளங்கோவுக்கு மூன்று நண்பர்கள் இருந்தனர். அவர்களோ மிகவும் பலசாலிகள். தினமும் உடற்பயிற்சி செய்து உடலைப் பலப்படுத்தி வைத்துக் கொள்வார்கள்.

இளங்கோ, அவர்களை நோக்கி தினமும் "உடற்பயிற்சி செய்து என்ன பிரயோசனம்? மூளையைப் பலப்படுத்துங்கள். அதுதான் வாழ்க்கைக்கு உதவும்" என்று சொல்லிச் சிரிப்பான்.

அதற்குஅந்தமூவரும்இளங்கோ! "உடலைப் பலப்படுத்தினால் போதும் மூளை தானே பலப்பட்டுவிடும். மூளை வலிமையைவிட உடல்வலிமையால் உலகத்தில் நிறைய சாதிக்கமுடியும். ஹூம்... நோஞ்சான் பயலான உனக்கு உடலைப்பபற்றி என்ன தெரியும்!" என்று சொல்லிச் சிரிப்பார்கள்.

இப்படியாக நல்ல நண்பர்களாகவே இருந்து வந்தனர்.

ஒருநாள் இளங்கோ தனது மளிகைக் கடைக்கு தேவையான சாமான்களை சந்தைக்குச் சென்று வாங்கி மூடை மூடையாகக் கட்டி சிறு வண்டியில் வைத்து மிகவும் சிரமத்துடன் இழுத்து வந்து கொண்டிருந்தான்.

வழியில் ஒரு பெரிய மேடு குறுக்கிட்டது. அவன் உடலில் பலம் இல்லாததால் அந்த மேட்டின் மேல் சரக்கு வண்டியை இழுக்க முடியாமல் மிகவும் திணறினான். யாராவது ஒருவர் உதவிக்கு வந்தால் வண்டியை எளிதாக மேலே ஏற்றிவிடலாம் என்று நினைத்தான். அதனால், வண்டியை நிறுத்தி விட்டு யாராவது வருகிறார்களா என்று மேட்டின் மீது ஏறி நின்று பார்த்தான்.

அப்பொழுது எதிர்த் திசையில் இருந்து மூன்று பலசாலிகள் வந்து



கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்த இளங்கோவுக்கு ஒரு யோசனை தோன்றியது. விடுவிடு என்று கிழே இறங்கி, தன்னிடம் இருந்த கயிற்றின் ஒரு முனையை வண்டியில் கட்டினான். கயிற்றின் முனையைப் பிடித்துக் கொண்டு மறுபடியும் மேட்டிற்கு ஓடிவந்தான்.

அதற்குள் நண்பர்கள் அவனை நெருங்கி வந்துவிட்டனர். உடனே இளங்கோ கயிற்றின் முனையைப் பிடித்தபடியே அவர்களை நெருங்கினான்.

"எனதருமை நண்பர்களே! உங்களுக்கும் எனக்கும் ஒரு போட்டி என்றான் இளங்கோ.

"என்னபோட்டி" என்று கேட்டனர் அவர்கள்.

"உங்களுக்கும் எனக்கும் கயிறுமுக்கும் போட்டி. நீங்கள் மூன்று பேரும் இந்த முனையைப் பிடித்துக் கொண்டு இழுங்கள். நான் மறுமுனையைப் பிடித்துக் கொண்டு இழுக்கிறேன். யார் ஜெயிக்கிறார்கள் என்றுபார்ப்போம்! என்றான் இளங்கோ.

அதைக்கேட்டு அந்த மூன்று பலசாலி நண்பர்களும் ஹா ...ஹா ... ஹா ... ! என்று பலமாகச் சிரித்தார்கள்.

"நோஞ்சான் பயலான உனக்கும், எங்களுக்கும் கயிறு இழுக்கும் போட்டியா? வெளியே சொன்னால் எங்களுக்குத்தான் அவமானம். போய் வேறு ஏதாவது வேலையிருந்தால் பார்!" என்றனர்.

"இதோ பாருங்கள். ஆளைப்பார்த்து எடை போடாதீர்கள். எனக்குள் இருக்கும் பலம் உங்களுக்குத் தெரியாது. நீங்கள் உண்மையான பலசாலிகளாக இருந்தால் என்னோடு போட்டியிடுவீர்கள். நீங்களோ போலி பலசாலிகள்போல வேடம் போடுகிறீர்கள்!" என்று அவர்களைச் சீண்டிவிட்டான்.

"சுண்டைக்காய் பயலே! எங்கள் பலத்தையா போலி என்றாய். உனக்குப் பாடம் கற்பித்தால்தான் புத்திவரும். பிடி மறு முனையை ஒரே இழுவைதான் நீ எங்கோ பறந்து சென்று மண்ணைக் கௌவப்போகிறாய்!" என்று சொல்லிவிட்டு கயிற்றின் ஒரு முனையைப் பிடித்தனர்.

இளங்கோ மேடு ஏறிப்போய் மறுபடியும் இறக்கத்தில் இறங்கி வண்டியில் கட்டப்பட்டிருந்த கயிற்றை இறுக்கமாகப் பிடித்தான்.

"ம்! .. இழுக்கலாம்!" என்று கத்தினான்.

அந்த மூன்று நண்பர்களும் இளங்கோ தான் கயிறு இழுப்பதாய் நினைத்துக் கொண்டு மிகச் சாதாரணமாக இழுத்தனர். அவர்கள் நினைத்ததுபோல அது அவ்வளவு சாதாரணமாய் இழுபடவில்லை.

திடீரென்று இளங்கோவுக்கு பலம் இருக்கிறதோ என்ற சந்தேகம் அவர்களுக்கு உண்டாயிற்று. ஆகவே, கயிற்றை இறுக்கமாகப் பிடித்து இழுத்தனர். ஆனால், இப்பொழுது மிகவும் கடினமாக இருந்தது.

மூன்று பேர் முகத்திலும் திகில் பரவியது. ஒரு நோஞ்சான் பயலிடம் தோற்றுப்போனால் அது எவ்வளவு அவமானம் என்று நினைத்த அவர்கள், தங்கள் பலங்கொண்ட மட்டும் கயிற்றை இழுத்தனர்.

எதிர்ப்பக்கம் இருந்த இளங்கோ. தான் இழுப்பதை மெல்ல மெல்ல விட்டுக்கொண்டே இருந்தான். வண்டி இப்பொழுது மெல்ல மெல்ல மேட்டில் ஏறத்தொடங்கியது.

இளங்கோதான் பலத்தை இழந்து மெல்ல மேலே வருகிறான் என்று நினைத்த அவர்களுக்கு மிகுந்த சந்தோசம் உண்டாகியது. இந்த நோஞ்சான் பயலுக்கு ஏது இவ்வளவு பலம் என்று நினைத்தவாறே மீண்டும் வேகமாக இழுத்தனர்.

கடைசி நேர இழுவையில் சரக்கு வண்டி மேட்டின் மேலே ஏறிவிட்டது. அதைப் பார்த்துக் கொண்டு சிரித்தபடி வந்தான் இளங்கோ.

அவர்களுக்கு அப்பொழுதுதான் விஷயமே புரிந்தது. இவ்வளவு நேரம் தாம் இழுத்தது இளங்கோவின் வண்டியை, என்று.

மூவர் முகத்திலும் அசடு வழிந்தது. இறக்கத்தில் இறங்கி அவர்களிடம் வந்த இளங்கோ "மூளைபலம் என்பது இதுதான் என்று சொல்லி நமுட்டுச் சிரிப்பு சிரித்துவிட்டு, தனது வண்டியை சமதளத்தில் இலகுவாக இழுத்துக் கொண்டுபோனான்.

## அரும்புகளே..!



நம்பிக்கை தீபம் எரியட்டும்
நாளைய உலகம் உம்கையில்
தெம்புடன் செயல்கள் புரிந்திடுவீர்
துணிவால் நெஞ்சை நிரப்பிடுவீர்.

மரங்களை நட்பாய் மதித்திடுவீர்
மண்ணில் வனங்களைப் பெருக்கிடுவீர்.
விண்மழை இங்கே கொட்டட்டும்
வசந்தம் வாழ்வில் கிட்டட்டும்.

வறுமை தடை எனில் அறிவீனம்
வாழ்க்கையில் சோம்பல் பலவீனம்
எருமையாய் சோம்பி இருக்காமல்
எருதென்ன உழைத்தால் பிரகாசம்.

தோல்விகள் தொகையாய்ப் படையெடுக்கும்
துவண்டு நின்றால் அடிசறுக்கும்
ஆல்போல் நிமிர்ந்து நின்றிடுவீர்
அடிக்கும் புயலை வென்றிடுவீர்

அறிவியல், உலகை முன்னேற்றும்
ஆயுதம் முற்றிலும் விலக்கிடுவீர்
வெறிப் போருணர்வை வெறுத்திடுவீர்
வெல்வோம் உலகை அன்பாலே.

உணவைப் பெருக்கும் வழி காண்போம்
உழைக்கும் மக்களைப் போற்றிடுவோம்
பணம்தான் எல்லாம் என்றெண்ணி
பண்புகளை தம்மை இழக்காதீர்.

புதுப்புது கலைகள் கற்றிடுவீர்
புதுமைகள் பலபல கொணர்ந்திடுவீர்
கற்றலை என்றும் தொடர்ந்திடுவீர்
காலம் புதிது படைத்திடுவீர்.

ஆயிரம் பட்டங்கள் பெற்றாலும்
அடக்கம் இல்லார் அறிவில்லார்
பணிதல் யார்க்கும் நன்றென்ற
பொய்யா மொழியை மறவாதீர்.



யாழ். வயாவிளான் மத்தியகல்லூரி
சத்தியகுமார்.விதுசா
தரம்-6

# அழியும் ஆபத்தில் அந்தாட்டிக்கா பனிமலைகள்

புதிய தொடர்ச்சியான ஆய்வுகளின்படி, புவி வெப்பமடைதலாலும் காலநிலை



மாற்றத்தினாலும் முன்னர் மதிப்பிடப்பட்டுள்ளதை விட அதிகமாகவே அந்தாட்டிக்காவின் ஐஸ் படலம் பாதிப்படைந்து வருகிறது.

மேற்கு அந்தாட்டிக்காவின் பெரிய ஐஸ் மலைகள் உருகி மிகவும் குறைவடைந்துவிட்டன. என்பது நாம் கேள்விப்பட்ட விடயம். ஆனாலும், மேலும் மிகுதியுள்ள ஐஸ் மலையும் உருகிவரும் ஆபத்தைச் சந்தித்துள்ளதால், இப்போதுள்ளதை விடவும் இன்னும் 10 அடிகள் கடல் மட்டம் உயரும் ஆபாயம் உள்ளது என காலநிலை ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர்.

கிழக்கு அந்தாட்டிக்காவில் ரோட்டன் மலைகள் பெரிய துவாரங்கள் ஏற்பட்டு மிகவும் நலிவடைந்த நிலையில் உள்ளன. இவை உருகி மிக அண்மைக் காலத்தில் அங்கே, பள்ளத்தாக்கை திரவ நீரால் மூடியுள்ளன. அங்கே இப்பொழுது 40 மைல்கள் அகலமான



தும் 19 மைல்கள் அகலமானதுமான ரோட்டன் ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது.

இவ்வாறு உருகிய திரவ நீரானது பனிப்படலங்களின் கீழ் பெரிய ஆறாகக் காணப்படுகிறது என்றும் ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532




## சேலை உடுக்கத் தயங்கும் தமிழச்சிகளைப் பற்றி?

**கிருஷா — வரணி**

**ஆசை அனுபவத்தை வென்றுவிடும் என்கிறார்களே. அதன் அர்த்தம் என்ன?**

மூன்றுவருடங்களாக கூலிக்கு பொதி சுமக்கும் ஒரு இளைஞன் அன்றையதினம் நிறையப் பொதிகளை தன் தலையில் வைத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினான். அவன் சற்று நிமிர்ந்தாலும் பொதி கீழே சிந்திவிடும். அதனால் கூனியபடி நடந்து செல்கின்றான். செல்லும் வழியில் ஒரு பெண்ணைக் கண்டான்.

நிமிர்ந்தான் பொதி வீதியில் சிந்தியது. அவன் பெண்ணைப் பார்த்ததும் இந்தப் பொதி எனக்குப் பாரம் இல்லை என்பதைக் காட்டுவதற்கு ஆசைப்பட்டு மூன்றுவருட அனுபவத்தில் தோற்றுவிட்டான் இதுதான் அது.

**அன்ரன் ஜெயுசன் — கரவெட்டி**

**காதலி, மனைவி யார் தரும் முத்தம் சுவையானது.?**

பஞ்சம் வாட்டிய நேரத்தில் சாப்பிட்ட மரவள்ளிக் கிழங்கு, சம்பல் சுவை பணம் தாராளமாய் கிடைக்கும் நேரத்தில் வாங்கிச் சமைத்துச்சாப்பிட்டால் வருமோ? பஞ்ச நேரத்தில் சாப்பிட்ட கிழங்கு போல்தான் காதலியின் முத்தம் நினைத்தாலே இனிக்கும்.

**இரா.ஜெ.துஷ்யந்த் — மாதகல்**

**கணவன் மார்களை கையாலாகாதவன் என நினைக்கும் மனைவிமார்கள் பற்றி உமது கருத்து என்ன?**

அவன் வைத்துக் கொண்டா வஞ்சகம் செய்கிறான். பானையில் இருந்தால்தானே அகப்பையில் வரும் என்பதைப் புரிந்து கொள்ளாத மங்கையர்.

**ராகுலன் — யாழ்ப்பாணம்**


**எமது கலை, கலாசாரம் அழிவடைய காரணம் என்ன?**

ஏ-9 வீதியைக் கேளுங்களேன் எல்லாவற்றையும் விலாவாரியாகச் சொல்லும்.

**சக்தி — முறிப்பு**

**காதலிக்குக் கொடுக்கக் கூடிய நல்ல பரிசு என்ன?**

யாழ்ப்பாணப் பக்கம் வரும்போது என்னை ஒருதரம் சந்தியுங்களேன் அப்போது சொல்கிறேன்.



## இப்போது பிரபாகரன் இருந்திருந்தால்?

**ஆர்.துவாரகன்**

**மைத்திரியின் நல்லாட்சி தமிழ் மக்களுக்கு நல்ல தீர்வைத் தருமா?**

மைத்திரி என்ற ஒரேஒரு நல்லவரை நம்பி தமிழர் நாம் ஒன்றைச் சில்லு வண்டியில் ஏறி விட்டோம். அந்த நம்பிக்கை எங்களைக் கரை சேர்க்குமா? இறைவனிடம் மன்றாடுவோமாக.

**கனகலிங்கம் — கேணியடி**

**கறுப்பானவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

வெள்ளைக்காரனுக்கு நாம் எல்லோரும் கறுப்பு. நம்மில் கொஞ்சம் வெளுத்தோருக்கு நாம் கறுப்பு. நமக்கு ஆபிரிக்காக்காரன் கன்னாங்கறுப்பு அவ்வளவுதான்.




**கோபி — மந்திகை**

**இன்றைய கால அண்ணன் பாசம் பற்றி?**

பாசமலரில் இருந்து அன்புச்சகோதரர்கள் வரை அன்பில் மாற்றமில்லை. ஆனால் அண்ணன் தங்கையில் நிறையவே மாற்றம் இருக்கிறது.

**ஆர்.கரன் — கள்ளவேம்படி**

**தமிழர்கள் கண்டுபிடிப்பில் ஈடுபடவில்லையா?**

அம்மா சீரியல் பார்த்து கண்ணீர் விடுகிறார். அப்பா கிடைத்த இடத்தில் எல்லாம் கடைகட்டுறார். தம்பி சந்தியில் நின்று புகை விடுறான். தங்கை கட்டிலில் இருந்து போனைப் பாட்டுகிறாள். இது எல்லாவற்றையும்விட கண்டுபிடிப்புக்கு எங்கே நேரம் கிடைக்கப் போகிறது?

## நேபாள நிலநடுக்கம் மனதை உலுக்கிவிட்டதே?

**பிரியா — நெல்லியடி**

**பழைய பாடலா புதியபாடலா கேட்கும் படி உள்ளது?**

இரண்டும். ஆனால் இரண்டிலும் ஒரு வித்தியாசம். பழைய பாடல் வரிகளின் அர்த்தம், இசையின் இனிமை கேட்கவைக்கும்.

புதியபாடல் வரிகளில் கூறுவது புரியாமல் அது எதுவென்று அறிவதற்காக கேட்கவைக்கும்.

உதாரணம் : சுருக்கிருக்க முக்காமொழம் போட்டு மரிக்கொழுந்து கபத்தில மாட்டிச்சு சும்மாகிர சோமாரி...

(இந்த வரியைக் கேட்டு எழுத பத்துத் தடவை பாடல் கேட்க வேண்டியிருந்தது)

**கலா — உடுவில்**

**சேலை உடுக்கத் தயங்கும் தமிழச்சிகளைப் பற்றி?**

என் இனிய தங்கையரே! நீங்கள் வழமையாகச் செல்லும் வீதியில் ஒரே ஒரு நாள் சேலையுடன் சென்றுபாருங்கள் நாய் தொல்லை இல்லாததை உணர்வீர்கள். சேலையில் தாய்மை இருக்குதம்மா அதை புரிந்துகொள்.

**குருபரந்தாமன் — அல்வாய்**

**இலங்கையில் தூக்குத் தண்டனை மறுபடியும் வருமா?**

தூக்குத்தண்டனையை நிறைவேற்றும் "அலுக்கோசு" பதவிக்கு யாரும் வருகிறார்கள் இல்லையே என்ன செய்ய?

**நிலுஜன் — கோண்டாவில்**

**சுப்பரா ரொமான்ஸ் பண்ணும் போது யாரும் வந்து குழப்பினா எப்டியிருக்கும்?**

வீதியில் நாய்கள் காதல் செய்கையில் கல்லெடுத்தடிக்கும் போது எப்படியிருக்குமோ அப்படியிருக்கும்.

**நிந்துஜன் — நல்லூர்**

**நேபாளநிலநடுக்கம் மனதை உலுக்கி விட்டதே?**

ஓ... இறைவா ...
ஆயிரக்கணக்கில் உயிர்ப்பலி எடுத்த பின்பும் உயிர்ப்பசி அடங்கவில்லையா? என்று கத்தத் தோன்றுகிறது.

**அனு — நெல்லியடி**

**திரிஷாவின் திருமணம் நடக்குமா? நடக்காதா?**

திரிஷாவுக்கு திருமணம் நடக்கும். ஆனால் வருண்குமாருடன்இல்லைஎன்பது முடிவாகிவிட்டது.

**அன்ரு — யாழ்ப்பாணம்**

**இப்போது பிரபாகரன் இருந்திருந்தால்?**

தங்களைத்தலைவர்களென்று சொல்லி தமிழ்த் தேசியம் பேசும் பலர் உயிருடன் இருந்திருக்க மாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## எதிர்வீட்டு நாயும் என் ஏழை நாயும்

பக்கத்து வீட்டு
பணக்கார நாய்க்குபோல்
எந்த நாளும் உனக்கு
இறைச்சி இடமாட்டேன்
மிஞ்சுகிற கஞ்சியை
தலைதடவி இட்டு
தலைவா உன்பசி தீர்ப்பேன்
அந்த நாய்க்குபோல
அழகான கூடுசெய்ய
இவனிடம் வசதியில்லை
பழைய சாக்கு விரிப்பேன்
பத்திரமாய் படுத்துக்கொள்
காலையும் மாலையும்
பால்தேநீர் உனக்கிட
பணமில்லை எனக்கு
பழஞ்சோறு இருந்தால்
படைப்பேனே உனக்கு
மாதமொருதடவை
மருத்துவரிடமும்
கூட்டிச் செல்லேன்
எழிலாய் ஓர் உடை மாட்டி
ஏசி காரிலே உனை
ஏற்றிச் செல்லேன்
வயல் வேலைக்கு
நடக்கும்போதும்...
வாய்க்கால் குளிப்புக்கு
போகும்போதும்
தவறாமல் அழைத்துச் செல்வேன்
ஆனால்...ஒன்று
அந்த நாயைப் போல
அடைத்து வையேன் உன்னை
சுற்றித்திரிய ஒரு
சுதந்திர அனுமதி தந்தேன்.

யோ.புரட்சி
வள்ளுவர்புரம்

## நவீன வறுமை

நகை பூட்டி
ஆபத்தில் மாட்டிவிடும்
நாட்கள்தான் மாறாதோ?
விலையென்று கூறி
பொருளாதாரத்தை முடக்கி
வங்கியில் வைப்பார்
அடகுவென அழைப்பார்
பன்னிரு திங்களானதும்
பறந்தோடி வருமே கடிதம்
மீட்கவில்லை என்றால்
ஏலம் என்று எழுதி!!
வட்டிக்குப் பணம்வாங்க
வறியவர் வரிசையில்
எட்டிப்பார்க்கிறது பூனை
தினம் அடுப்பை
ஏழைத்தாயவள்
வேண்டாம் இனியென்றால்
வேண்டாத ஆடம்பரம்
கூழும் கஞ்சியும் குடித்தாலும்
நிம்மதியாய் வாழ்வோம்
நீங்கள் இனிக்கலங்கவேண்டாம்!
இதைக்கேட்ட
தந்தையும் எழுந்தான் உடன்
தமையனும் இணைந்தான்
அன்றிலிருந்து நாம்
எளிமையாக நடப்போம்
எந்நாளும் உழைப்போம்

மயிலை
தேவகவி. மசா

## உயர்வு காண்போம்

அன்பும் அறமும் கற்றதன் ஊங்குபெற்று
பண்பும் பணிவும் கல்வியின் பயனாய்
என்றும் இனியவை கூறி
எதிலும் உண்மைபேசி
நன்று கற்றதன் பயனென்று
பாரினில் உயர்வு காண்போம்
வளமான வாழ்விற்கு உரமான
வித்தை விதைத்து
உயரிய கலைகளால்
உலகத்தைக் கௌரவிப்போம்
கற்றதன் பயன் பட்டங்கள் மட்டுமல்ல
உற்றநேரத்தில் பாரினுக்கு உதவுவதே
கழுகுகள் எல்லாம் உயரப் பறந்தாலும்
தரைகளை மறப்பதில்லை
அதன் இலக்கும் இரையும்
மண்ணிலே இருப்பதனால்...
கல்வியின் வழி உயர்வு கண்டாலும்
தாய் மண்மீது தீராக்காதல் கொண்டு
கல்வியின் பயனாய் தாய் மண்ணை
வாழ்விக்க வேண்டும்

அ.நளினாசினி
சுண்டுக்குளி ம.க.

## இமயம் தொட

எங்கே செல்கிறாய் நில்
உன் கடமைகளைச் செய்
மென்மையென்பதற்கப்பால்
மேன்மையொன்று உண்டு
அன்னை என்பதே
உன் அடையாளம்
அதில் அன்பு என்பதே
முதல் பொருளாக
நில்! செய்!
நீதாயாக...!

மாவை. நா.கஜேந்திரன்

## யாருடைய குற்றம்

மரணப் படுக்கையிலும்
மானம் பெரிதென
மார்பு தட்டிப் பேசிய வார்த்தைகள்
மண்ணோடு மண்ணாக
மாண்டு போன நம் உயிர்கள்
மடியில் கிடக்கும் பிள்ளை
மார்பினில் பாலின்றி துடித்த கணம்
மடியேந்தி பிச்சை கேட்டாளே
மதிகெட்ட சமுதாயம் ஒருமுறை வா...
மனமின்றி மானத்தை பறித்தார்களே...

நல்லூர் மைந்தன்
எஸ்.கே.நிக்ஷன்

# மௌனத்தின் தேடல்- 249



## வாழ்வின் மறுபக்கம்

வலிகள் நிறைந்த வாழ்வதை- நிறை
விலைகள் கொடுத்தும் வாங்கியே- நடு
வழியில் நிற்கும் நிலைதானோ?
கூட்டு வாழ்க்கை குலைந்துபோக
வீடுவளவும் அழிந்துபோக- மீள்
குடியேற்ற வாழ்வும் வந்ததுவே
தோளில் தூங்கும் சேயும்
வாழ்வில் ஏங்கும் தாயும்
தனிமையில் எதற்காய் காத்திருப்பு?
கலங்காதே தாயே-நாளை
துலங்கும் உன் வாழ்வில் உதயம்
இதுவே வாழ்வின் மறுபக்கம்

மல்லாவிக்கஜன்

## அன்புத்தாயே

பத்து மாதம் சுமந்து
பாலூட்டி தாலாட்டி
அன்புக்கதை பொழிந்து
எம்மை வளர்த்து
இவ்வுலகின் ஒளியை
எமக்கு காண்பித்தீர்
அந்த நேசம் என்றும்
என் கண்களில்
விழிநீர் சொரிந்து
உன்புகழ் பாடுவோம்
அன்புத்தாயே...

செ.பேபிசாளினி
மட்டுவில் தெற்கு

## வாழ்வைத்தேடி

வதிவிட வசதியுமில்லை
பசிபோக்க வழியுமில்லை
தொடுவானம் போல்
வீட்டுத் திட்டங்களும்
விலகி விலகிச் செல்வதால்
அருகில் பிரியாதிருக்கும்
பிள்ளைச் செல்வம்தான்
இல்லாமையை மறக்கச் செய்யும்

க.நாகராசா
நுணாவில்

## காத்திருப்பின் பயன்

தாயே!
நீர் எதற்காக
வழிமேல் விழிவைத்து
காத்திருக்கின்றீர்
என்பதை யான் அறியேன்
ஆயினும் உம்
புன்முறுவலுடனான
எதிர்பார்ப்பில் ஓர்
விடிவு உண்டு என்றால்
அதுவே உம்மை நிச்சயம்
தேடி வரும்
மனம் தளர்ந்திடாதீர்
விடிவு நிச்சயமே!

ம.அ.மரியஜெனிற்றா
சாவகச்சேரி

## குழந்தை

ஓலைக்குடிசையில் வறுமை
வாழ்வு வாழ்ந்தாலும்
கையில் தவழும் குழந்தை
முகம் கண்டு
வறுமை மறந்து புன்னகை
பூத்திடுவாள் அன்னை

கா.பாரமினா
வராத்துப்பளை

## வருவாரா?

வேலைக்குச் சென்ற
தலைவனோ
இன்னும் வீடு
வந்து சேரவில்லை
அடுப்பிலும் நெருப்பு இல்லை
அயலவர்கள் துணையும் இல்லை
ஆனாலும் அன்னையிவள்
முகத்தினிலே
என்ன ஒரு சந்தோசம்-தன்
அன்புமகனை அள்ளி எடுத்து
அரவணைத்து
கொஞ்சுகையில்

யோ.காண்டீபன்
மானிப்பாய்

## தாய்மையின் சுயம்

மடிதாங்கும் மகவை
நெக்கணைத்து தோள்சாய்த்து
இதமான சுகம் கொடுக்கும்
தாயவளே உன் சிரிப்பில்
தாய்மையின் சுயம் மிளிர்கிறது

உடுவிலூர் கலா

## சாபமா?

கருவில் பத்துமாதம் சுமந்தது
போதாது என்றா?
எனைதோளில்
சுமக்கும் சாபத்தையும்
கடவுள் உனக்குத்
தந்தான் அம்மா??

தி.சுதர்சினி
வேலணை-02

## சிந்தித்திடு

முற்றத்து நிழலில்
பொன்னகை அணிந்த உன் தோளில்
கள்ளமில்லா உன் புன்னகையில்
மெய்மறந்து தூங்கும்
பிஞ்சுப் பாலகன் இவனின்
எதிர்காலம் உன் கையில்
அன்னையே- சிந்தித்திடு


த.தனுஜா, அல்வாய்

## வைராக்கியம்

அவள் தனது கணவனை
இழந்தாலும்
உறவினர்களை இழந்தாலும்
அகமதில் கோடி சோகமதை
புதைத்து விட்டு
தனது பிள்ளைச் செல்வத்தின்
எதிர்காலத்திற்காக
புன்சிரிப்போடு தெருவோரத்தில்...

இரா.ஜெ.துஷ்யந்தா
அளவாவோடையூர்

# மௌனத்தின் தேடல் -250



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 20.05.015ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்பாடுகளை எப்படிக் கையாள்வது?



நண்பா! நமது வாழ்க்கையில் முரண்பாடுகள் வருவதும் பின்னர் அவை தீர்க்க முடியாத பிரச்சினைகளாகிப் போவதும் சகஜமாகிவிட்டது. உனக்கு ஏற்படுகின்ற முரண்பாடுகளை நீ எவ்வாறு தீர்த்துக் கொள்கின்றாய்? ஏன் மற்றவர்களுடன் முரண்படுகின்றோம். ஆரம்பத்தில் சின்னக் கருத்து வேறுபாட்டில் ஆரம்பித்து, காரணங்களின்றி அதுவாக பெரிய பூதமாக வளர்ந்து பின்னர் அவரில் தனிப்பட்ட பகையுணர்ச்சி ஏற்படத்தொடங்கும். இறுதியில் கோபம் வளர்ந்து பகையுணர்ச்சியாகி, காணுகின்ற இடத்தில் வாக்குவாதம், நக்கல், அடிதடி என்று வளர்ந்து மாபெரும் அழிவுக்கு இட்டுச் செல்கின்றது.

நாம் அனைவரும் சிந்தனையிலும் செயலிலும் வேறுபட்டவர்கள், அதேவேளை மற்றவர்களைப் பார்த்துக் கற்றுக் கொள்பவர்கள், அத்துடன் ஒன்றிலிருந்து வேறொன்றுக்குச் செல்ல வேண்டும், மேலே வர வேண்டும், இன்னும் வளர வேண்டும் என்ற யதார்த்த தன்மை உள்ளவர்கள். அதற்காகவே பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். அதனால் பல இடங்களில் முரண்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

ஆனால் அவற்றைத் தீர்த்துக் கொள்ளும், பகுத்தறியும் ஆற்றலை இறைவன் எங்களைப் படைக்கும் போதே சேர்த்துப் படைத்துவிட்டான். இருந்தும் நாங்கள் அவற்றைப் பயன்டுத்துவதுமில்லை. உண்மை நிலவரங்களை அறிந்து பிரச்சினைகளைக் களைய நினைப்பதுவுமில்லை. ஆனால் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்து விட்டால் அவற்றின் பூதாகர வளர்ச்சியைத் தடுக்கமுடியும்.

நண்பா! சில வேளைகளில் நாம் முரண்படுகின்றோமா என்பதைப் புரிந்து கொள்ளவே சில மணி நேரங்கள் எடுக்கும். உனது செயல் மற்றவர்களுக்கு அதிருப்தி ஏற்படுத்துவதாகவோ அல்லது மற்றவர்களின் செயல் உனக்கு அதிருப்தி ஏற்படுத்துவதாகவோ அமைந்தால் முதலில் முரண்பாடு வந்துவிடப்போகின்றது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். முதலில் புரிந்து கொள் முரண்படுகின்றாய் என்பதை. அத்துடன் தெரிந்து கொள் எதற்காக முரண்படுகின்றாய் என்பதை.

மற்றொரு நபரிடமிருந்து பிரச்சினை ஆரோக்கியமான போட்டியால் ஏற்படலாம். "மச்சான் அவன் நண்பன் எண்டாலும் இந்த முறை நான் தான் ரீமுக்கு லீடராகின்றது. நட்பெல்லாம் ஒரு பக்கம். ஆனால் போட்டியெண்டு வந்திட்டால் அதுதான் முக்கியம்"

தேவையற்ற காழ்ப்புணர்ச்சியால் ஏற்படலாம். "முதல் ஒரு முறை என்னுடைய மோட்டார் சைக்கிள் கண்ணாடியை உடைச்சது அவன் தான். எனக்குத் தெரியும்"

வேண்டுமென்றே ஏற்படுத்தப்படலாம். "அண்டைக்கு மறிக்க மறிக்க நிக்காமல் பெரிய இவன் மாதிரி போனனி தானே, இண்டைக்கு பார்" என்று மல்லுக்கட்டிக் கொண்டு நிற்பது வேண்டுமென்றே ஏற்படுத்திக் கொள்ளும் முரண்பாடு.

அறியாமல் நடக்கலாம். "சொறி மச்சான் நான் வேணுமெண்டு செய்யேல்லை. உனக்கு விளங்குமெண்டு நினைக்கிறன்"

இவ்வாறு பல வடிவங்களில் ஏற்படுகின்ற முரண்பாடுகள் தோன்றுகின்றன. ஆனாலும் ஏன்?, எதற்காக?, எப்படி? என்ற கேள்விகளை மனதிலிருத்தி முரண்பாட்டின் தன்மையை ஆராய வேண்டும். பொறுமையாக இருந்து ஆறுதலாக யோசிக்கும் போது தெளிவாகத் தெரிய வரும் எந்த இடத்தில் பிழை விட்டோம் என்பது. அத்தனை முரண்பாட்டின் பின்னாலும் தவறுகளை ஏற்றுக்கொள்ளாத தன்மை மறைந்திருக்கும் நண்பா! நானோ நீயோ யாருமே எடுத்த எடுப்பில் தவறுகளை ஏற்றுக் கொள்வதில்லை. தேரில் சென்று நசிப்பவனாக அன்றி தேரின் சில்லின் நசிபடுபவனாக இருக்க விரும்புகின்றேன் என்று ஓர் பெரியவர் கூறினார். அதாவது தான் தவறிழைப்பவனாக இல்லாமல் தவறில் விழுந்து எழுபவனாக இருக்கவிரும்புகின்றேன் என்பதாகும். தவறு களை நீயும் ஏற்றுக் கொள்ளவேண்டும். மற்றவர்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

"உன்னை நீ திருத்திக் கொண்டால், உன் தவறை நீ ஏற்றுக் கொண்டால் உலகின் அயோக்கியன் ஒருவன் குறைந்தான்." என்பது நர்ட்டுக்கருத்து. அவ்வாறு நம்மை நாமே தவறுகளிலிருந்து திருத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும். பின்னர் மற்றவர்களின் பிழைகளைச் சுட்டிக்காட்டலாம். தன் தவறுகளை கவனித்து தன்னையே குற்றம் சாட்டிக் கொள்ளக்கூடியவனும், தன்னைத் தானே சுயவிமர்சனத்துக்கு உட்படுத்திக் கொள்ளக்கூடியவனும், தன் தவறுகளை தானாகவே உணர்ந்து தன்னையே திருத்திக் கொள்ளக் கூடியவனுமான ஒரு மனிதனை இன்னும் காண முடியவில்லை.


அப்படிப்பட்ட ஒருவனைத் தான் அனைத்துத்தரப்பினரும் வரவேற்பார்கள். அவ்வாறானவர்களால் முரண்பாடுகளை இலகுவாகச் சமாளிக்க முடியும். அவ்வாறானவர்களை சந்திக்கும் போது நீயும் அவர்களிடம் கற்றுக் கொண்டுவிடு எப்படி முரண்பாட்டைத் தவிர்ப்பது என்று.

யாழ்.தர்ஷி

நானோ நீயோ நினைப்போம், சின்னச்சின்ன பிரச்சினைகள் வந்து போவதுதான் வாழ்க்கை. இதெல்லாம் சகஜம் தானே. ஆனால் பல வன்முறைகளும், கொலைகளும், பழிவாங்கல்களும், அநியாயச் சாவுகளும் இந்த ஒற்றை வார்த்தை தடுமாறல்களுக்குப் பின்னால் இருக்கின்றது.

இரு நண்பர்கள் சினிமாவுக்கு போக ஆசைப்பட்டனர். அவர்களில் ஒரு நண்பன் இல்லை மச்சான் நான் கோயிலுக்கு போக வேணும். நீ மட்டும் போய் விட்டு வா என்றான். மற்றவனும் இவனிடம் கேட்டுக் கேட்டுப்பார்த்துவிட்டு சரி நான் சினிமாவுக்கு போறன். நீ கோவிலுக்கு போ என்றான். சினிமாவுக்கு போன நண்பன் மனம் அந்தரிச்சது. அவனோடு கோவிலுக்கு போயிருந்தால் நல்லாயிருந்திருக்கும். வீணா சினிமாவுக்கு வந்திட்டன் என்று கோவில் நினைப்பில் இருந்தான். மற்றவன் கோவிலில் இருந்து நான் சினிமாவுக்கே போயிருக்கலாம். நண்பன் சினிமாவைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருப்பான் என்று மனம் வருந்தினான்.

இங்கு இரண்டு பேரின் மனநிலையில் ஏற்பட்ட முரண்பாடு, முடிவெடுப்பதில் ஏற்பட்ட தளம்பல் நிலை, அங்கலாய்ப்பு போன்ற காரணங்களால் தங்கள் தங்கள் விருப்பத்தை நிறைவேற்றவும் முடியாமல் இருவரும் சேர்ந்து செல்லாமல் குழம்பிவிட்டார்கள். முதலில் எங்களோடு எங்களுக்கு இருக்கின்ற முரண்பாடுகள் தீர்க்கப்படவேண்டும்.



நண்பா! ஒவ்வொருவரும் தங்களுடைய முழுமையான ஆற்றலை உணர முடியாமல், தங்களுடைய இலட்சியங்களை புரிந்துகொள்ளாமல், நியாயமான ஆசைகளை சரியான முறையில் வெளிப்படுத் முடியாமல் அவதிப்படுகின்றனர். விளைவாக தன்னலம், தப்பெண்ணம், வெறுப்பு, விரக்தி, வெறி, பிறரைச்சார்ந்திருத்தல், கேலிசெய்தல், மட்டரகமாகப் பேசுதல், நடத்தல், கொடுமைப்படுத்தல், காரணமில்லாமல் கோபப்படுதல், அதன் தொடர்ச்சியாக கொலை கூடச்செய்தல் என்ற நிலைக்கு வந்துவிடுகின்றனர்.

ஆக, அங்கு ஆரம்பம் தன்னைத் தான் அடையாளங் காணவில்லை. தன் பிறப்பின், வாழ்வின் நோக்கத்தை அறியத் தவறியதுதான் காரணம். எங்கெல்லாம் உன்னையும் உன் உள்மன ஆற்றல்களையும் புரிந்து கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுகின்றதோ அங்கெல்லாம் முரண்பாடுகளும் பிரச்சினைகளும் குறைவடையும்.

எமது சமுதாயத்தில் நடைபெறுகின்ற குற்றச்செயல்கள், வன்முறைகள், சண்டைகள் அனைத்துக்கும் அடிப்படையில் நம்ப முடியாத அளவுக்கு சிறியதொரு பிரச்சினையோ, முரண்பாடோதான் காரணமாக இருக்கும்.

ஆனாலும் அதன் பின்னர் எங்களால் கட்டவிழ்த்து விடப்படுகின்ற பகையுணர்ச்சிதான் அனைத்து பெரிய பிரச்சினைகளுக்கும் காரணமாயிருக்கும்.

கணவர் கொய்யாப்பழம் கேட்டவுடன் வாங்கிக் கொடுக்கவில்லை என்பதற்காக விவாகரத்து கேட்கும் நிலை வரைக்கும் வந்த கதைகளும் நாங்கள் அறியாதவை அல்ல.

நீ சுவர் எழுப்பும் போது அதற்கு உள்ளும் புறமும் என்ன இருக்கின்றது என்பதை அறிந்திரு. உன்னுடைய தன்னுருவாக்கத்தில் நீ உன்னை அறியாது செயற்படுவது மிகவும் ஆபத்தானது.

அறியாதிருக்கும் போது உன்னைச்சுற்றி நீ போடும் முகமூடிகள் 'உன்னை' உன்னுடைய ஆளுமையை சிதைக்கக் கூடியவை. பிரச்சினைகளை, முரண்பாடுகளை அணுகும் முறைமையை மாற்று! உன் தவறை நீயே சுட்டிக்காட்டு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றி
# இனப்படு
# நினைவுக்



ஏழில் ராஜன் (வருகை தரு விரிவுரையாளர்- அரசியறிவியல் துறை- கிழக்குப் பல்கலைக் கழகம். இணைப்பேச்சாளர்- தமிழ் சிவில் சமுக அமையம்)

சிறிலங்கா அரசு போர் வெற்றியை அறிவித்து இவ்வாரத்துடன் ஆறு வருடங்கள் பூர்த்தியாகின்றன. மாற்றம் வேண்டி ஆட்சி அமைக்கும் அரசு இதுவரைக்கும் தமிழர்களுக்கு உருப்படியாக ஏதும் செய்ததாக தெரியவில்லை. செய்கிறோம் என்று மட்டும் பூச்சாண்டி காட்டி இப்போது தமிழர் பிரச்சினை அல்லது அவர்களுக்கான அரசியல் தீர்வு பற்றி பேசுவது. அரசியல் சாணக்கியம் அல்ல என்று கூறி தமிழ்த் தலைமைகளையும் உடன்பட வைத்திருக்கிறது. இதை அரசியல் புனைவு என்பதா அல்லது அரசியல் பேதமை என்று பொருள் கொள்வதா? இனப்படுகொலைகள்., இன அழிப்பு. நடந்து முடிந்த இடங்களில் சிறிலங்கா அரசு கறுப்புச் சுற்றுலாவை ஊக்கப்படுத்தியது (Dark Tourism by Folly and Lennon) மட்டுமல்லாது தனது இருப்புக் கரங்களை இன்னும் ஆழப்படுத்தி தமிழர்கள் பலவீனமானவர்கள் இரண்டாம் தர பிரஜைகள் எனும் செய்தியை உரக்கச் சொன்னது. எங்களுக்கான நினைவுச் சின்னங்கள் அழிக்கப் பட்டு அந்நிய அடக்குமுறை அதிகாரத்தை வலியுறுத்துகின்ற நினைவுப்படிமங்கள் முளைக்கவைக்கப்பட்டன. இத்தகைய தமிழர் வரலாற்றைப் புதைக்கின்ற. நடவடிக்கைகள் தொடருகையில் இதுபற்றிய ஆய்வுகள் அவசியமானவை.

வரலாற்றியல்

பின் - இனப்படுகொலை காலம் (இனபபடுகொலைக்குப் பிந்திய காலம்) பொதுவாகவே நிலைமாறுகால நீதிக்கான காலம். தற்போது அரசாங்கம் மேற்கொள்ளும் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள். இழப்பீட்டுச்செயற்றிட்டத்திற்தள் உள்வாங்கப்பட முடியாதது. இவை தனி மனித உரிமை சார்ந்தது. சிறிலங்கா அரசும் அதன் நிறுவனக் கட்டமைப்புக்களும் Lal Jeyawardena குறிப்பிடுகின்ற Basic-needs-oriented development strategy - மிகவும் குறைந்த அடிப்படைத் தேவைகளை மையப்படுத்திய அபிவிருத்தித் தந்திரோபாயத்தை. மிகைப்படுத்தி. தமிழ் மக்களுக்கு வெள்ளை யானையை பரிசளிப்பதாக காட்சிப்படுத்த முனைகின்றது.

முள்ளிவாய்க்காலில் நடந்தேறிய அவலம் தமிழ் இன வரலாற்றின் இருண்ட யுகம் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்க முடியாது. நடந்தது இனப்படுகொலைதான் என வடமாகாண சபைத் தீர்மானம் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்றது அதை இங்கு மீட்டுப் பார்க்க வேண்டிய தேவை இருக்காது. கறை படிந்த காலங்கள் நிச்சயமாகவே ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்பது எங்கள் எல்லோருடைய அவாவும் கூட வரலாற்றில் ஆவணப்படுத்தல் என்னும் பிண்ணனியில் தான் இந்த உரை அமைகின்றது.

இனப்படுகொலை ஆவணப் படுத்தலில் வரலாற்றியலின் பிரதிநிதித்துவ இயலாத் தன்மையை ஆராய்ந்து நினை வுத் திறத்தின் வகிபாகம் ஆவணப்படுத்தலில் காத்திரமானது எனக் கூற விளைகின்றது. Nigal.C.Hunt Memory War and Trauma என்கின்ற நூலில் நினைவுத் திறமானது எழுத்துக்கு முற்பட்டது என்று கூறுகின்றார். தொடர்ந்து கூறுகையில் வரலாறு நினைவுத் திறத்தில் இருந்து உருவானது a narrative rendition of the past, p.98. நினைவுத் திறத்திலிருந்து உருவான வரலாற்றுக் கற்கைநெறி பின்னர் சமூக விஞ்ஞானக் கற்கை நெறிகளுக்குள் உள்வாங்கப்பட்டது.

வரலாற்றியல் எண்ணக்கரு வரலாற்றை எழுதும் கற்கை நெறி என்று மிக எளிமையாக பொருள் கொள்ளலாம். The study of history writing. 19ம் நூற்றாண்டில் வரலாற்றுக் கற்கை நெறி நிறுவனமயப் படுத்தப்பட்டபோது (Sanjay Seth) வரலாற்றியல் கடந்த காலங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மூல - முதன் மையான ஊடகமாக பரிணமித்தது. ஏற்கனவே கடந்த காலத்தை பிரதி நிதித்துவப்படுத்துகின்ற முறைகள் புறந்தள்ளப்பட்டு வரலாற்றுக் கற்கை நெறி முதன்மைப்படுத்தப்பட்டது.

வரலாற்றுக் கற்கைநெறி ஓர் அறிவியலாக உருவாக்கம் பெற்றபோது வரலாற்றை ஆவணப்படுத்து கின்ற வேலை உதிரிகளிடம் சென்று சேர்ந்தது. இவ்வாறு வரலாற்றை பிரதி நிதித்துவப்படுத்தும் முறைமை (based on Western epistemology) மேற்கத்தைய அறிவியல் முறைமை சார்ந்தது. மேற்கத்திய உலகம் சாரா உலகை. வரலாற்றியல் பிரதிநிதித்துவப் படுத்துமா? என்ற கேள்வி. பின் காலனித்துவ திறனாய்வு கற்கை நெறிகளில் தாக்கத்தை ஏற்படுத்தியது. பின் காலனித்துவ அறிவியல் கற்கை நெறி வரலாற்றியலை சிக்கலுக் குட்படுத்தி வரலாற் றியல் மேற்குலகம் சாரா (non-western pasts) கடந்த காலத்தை பிரதிநிதித்து வப்படுத்தக் கூடிய ஓர் ஊடகமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை (Sanjay Seth).

இவ்வுரையின் நோக்கமாக இனப்படுகொலையை பிரதி நிதித்துவப்படுத்தும் முதன்மை ஊடகமாக வரலாற்றியல் இருப்பதை சிக்கலுக்குட்படுத்தி அதனுடைய இயலாத்தன்மையை ஆராய்ந்து, இனப்படுகொலையைப் பிரதிநிதித்துவப்படுத்த மாற்று ஆவணப்படுத்தல் வெளியை உருவாக்க முயற்சிப்பதும் அதில் நினைவுத்திறத்தின் வகிபாகம், பின் போர், பின் இனப்படுகொலைச் சூழலில் இன்றியமையாதது எனச்சுட்டுவது மாகும். ஐரோப்பிய மையப்படுத்தப்பட்ட வரலாறும். வரலாற்றியலும் மேட்டுக்குடி சார்ந்த பண்டிதர்களின் அறிவார்ந்த திறனாய்வாக மாறிப்போனது கண்கூடு. இவ்வாறான சூழலில் பிரதான சிந்தனை திறனாய்விலிருநது ஒதுக்கப்பட்ட. மறைக் கப்பட்ட. விடப்பட்ட பிறர் (The Other) குழுமம் உருவாக்கப்பட்டுக் கொண்டேயிருக் கும். இவர்களது கருதுகோள்களை பிரதிநிதித்துவப் படுத்தக்கூடிய ஊடகத்தை முன்னிறுத்துவது காலத்தின் கட்டாய மாகின்றது. பின் இனப்படுகொலை சூழலில் குறிப்பாக தமிழினப் படுகொலை சார்ந்து இதுவரைக்கும் எழுந்த இலக்கியங்களில் சாதாரணர்களின் சொல்லாடல்கள் எவ்வாறான கண்ணாடி வில்லையூடாக பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றது என்பது யாம் அறிந்தது.

ஆய்வாளர்கள் தங்களது பயில்வொழுக்கங்களுக்கேற்ப (discipline) தங்களது எல்லைகளுக்கும். இலக்குகளுக்கும். நோககங்களுக்கும். தேவைகளுக்கும் ஏற்ப முன்னீடுபடுகளை (preoccupations) தவிர்த்து விடயநோக்கு உண்மைகளை (objective truth) உருவாக்க முனையும் போது மற்றதுகளின் முன்னுரிமைகள் குறிப்பாக அரசியல் முன்னுரிமைகள் பிரதிநிதித்துவபடாத மற்றதுகளின் பிறிதொரு அறிவியல் சொல்லாடல் (Academic discourage) உருவாக்கப்படக்கூடிய சூழல் வலிந்து உருவாகின்றது. 'மற்றதுகள்' தாங்கள் சார்ந்த அறிவியல் சொல்லாட்லை தாங்களே உருவாக்குவதற்கான குறிப்பாக 'மற்றதுகள்' விரும்புகின்ற அரசியல், அறவியல் சொல்லாடலை உருவாக்குவதற்கான சூழலை பிறப்பிக்க வேர்தேடும்படலம் அத்தியாவசியமாகின்றது.

வட்டார எல்லைகளுக்கு அப்பாற்பட்டு தேசிய முன்னுரிமைகளால் (National priorities) மீளுருவாக்கம் செய்யப்பட்ட கோமிபாபா குறிப்பிடுகின்ற மூன்றாம் வெளி (Third space) கட்டமைக்கப்பட வேண்டும் விடுதலையை எதிர் நோக்கியதாக. மேலே குறிப்பிட்டதிற்கிணங்க வரலாற்றியல் தனது இயலாத்தன்மையை, இனப் படுகொலை பிரதிநிதித்துவம் சார்ந்து வெளிப்படுத்துவது மிகத்தெளிவாகப் புலப்படுகின்றது. வரலாற்றியல் இனப்படுகொலையை பிரதிநிதித்துவப் படாதவிடத்து. அல்லது அதனது இயலாத் தன்மை உணரப்படுமிடத்து, மற்றதுகளின் முன்னுரிமையை மையப்படுத்திய மைய மறுப்பு சார்ந்த பிரதிநிதித்துவ வெளி உருவாக்கப்பட்டு அடையாள விளக்கவியலை (Identity hermeneutics) அகவயப்படுத்திய தேசிய சொல்லாடல் பாதிக்கபட்டவர்களால் உருவாக்கப்படுவது இன்றியமையாதாகின்றது.

நினைவுத்திறம்: கடந்த ஒரு சில தசாப்தங்களாக நினைவுத்திற கற்கை நெறி படைத்த இலக்கியங்கள் ஏராளம் Kerwin Lee Elein 'நினைவுத்திற தொழிற்பேட்டை' என்று குறிப்பிடுமளவிற்கு அத்திறனாய்வு மிக வேகமாக வளர்ந்து விட்டது. நினைவுத்திற திறனாய்வு சார் கற்கை நெறிகள் வளர்ச்சிக்குப் பங்களித்தவர்களின் பெயர் பட்டியல் மிக நீண்டது அவர்களில் குறிப்பிடப்படக் கூடியவர்கள் என நான் கருதுவது 1980 களில் வெளிவந்த இருவருடைய இலக்கியங்கள் Yosef Yerushalmi's 'Zakhor: Jewish history and Jewish Memory' (1982) Pierre Nora's 'Between Memory and History'. நினை வுத்திற கற்கை நெறியின் வருகை வரலாற் றியல் திறனாய்வின் எல்லைகளைக் கேள் விக்குட்படுத்தியது ஒரு சில ஆய்வாளர் களால் நினைவுத்திற திறனாய்வுக் கற்கை நெறி வரலாற்றுத் திறனாய்வுக் கற்கை நெறிக்கு மாற்றீடாகக் கொள்ளப்படுகின்றது.

9-11 பின்னர் புஸ்ஸின் 'பயங்கர வாதத்தின் மீதான போர்' தெய்வீக நிலையை அடைந்திருந்தது இதன் பின்னர் விடுதலை, சுயாட்சி, சுயநிர்ண யம் போன்ற கோரிக்கைகளை முன் வைக்கும் குரல்கள் அனைத்துமே பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு தீவிரவாதக் குழுக்களாக வர்ணம் பூசப் பட்டது. புஸ்ஸின் கோசம் 2008 களின் மத்தியில் இருந்து மீள உயிர்ப்பிக்கப்பட்டு. தமிழர் மீதான முழுமையான அழிப்பு அரங்கேற்றப்பட்டது என்பது. நான் சொல்லி தெரிய வேண்டிய விடயமல்ல. மீள் உயிர்ப் பிக்கப் பட்ட புஸ்ஸின் கோசம் தமிழர் தேசியம் சார்ந்த கோரிக்கைகளை பயங்கர வாதத் தின் புதுப் பரிமாணங்களாக உருவகித்து ஒட்டுமொத்த தமிழர் உரிமைகளும், அபிலாசை களும் தீவிரவாத சொல்லாடல்களுக்குள் உள்வாங்கப்பட்டு தமிழர் தரப்பு சார் அரசியல் உரிமைகள் இருட்டடிக் கப்பட்டு கிடப்பில் போடப்பட்டது. இன்றும் தமிழர் தரப்பு அரசியல் உரிமை பேசும் குரல்கள் அதி உச்ச தீவிர எச்சங்களின் மீள் உயிர்ப்பாக. வர்ணம் பூசப்பட்டு இருண்மை யாக்கப் படுகின்றது.

பூகோள அரசியலில் முதலா ளித்துவ நலன களுக்காகவும் அதிகார வெறிக் காகவும் சோடிக்கப்பட் சொல்லாடல்கள். அறிவியல் சொல்லாடல்களாகக் கட்டமைக் கப்பட்டு மிகச் செறிவாக ஆய்வுகளில் பயன் படுத்தப்படு வதைக் காணலாம்.

இச் செல்நெறி மிக முனைப்பாக ஈழத்தில் பின் முள்ளிவாய்க்காலில் தீவிரப்படுத்தப் பட்டுள்ளதை நாம் அறியாதவர்கள் அல்ல. இதற்கான சிவராம் குறிப் பிடுகின்ற Counter - Counter insurgency வழிமுறைகள் இல்லாது குரல்வளைகளில் சப்பாத்துக் கால்கள் இறுகிய நிலையில் ஒரு சொட்டு தண்ணீரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ந்நியலும் ...கொலை ...த்திரமும்





மேல் என்று பயணிக்க முற்படுவது எந்த விதத்திலும் எதிர்கால சந்ததிக்காக நாம் செய்யும் நீதியாக அமைந்து விடாது.

பின் முள்ளிவாய்க்கால் தசாப்தம் என்பது தமிழ் அடையா[illegible] கட்டுடைப்பு பொறிமுறை நிறுவனமய படுத்தப்பட்டு அந்நிய அடையாளங்கள் வலிந்து திணிக் கப்பட்டு நாங்கள் விரும்பாத அடையாளங் களால் நாங்கள் உருவமைக்கப்பட்டோம்.

இனப்படுகொலைக்கு இரையாக்கப்பட்ட சமூகம் இன்று வேர்களைத் தேடி தனக்கான கூட்டு அடையாள மீள்கட்டுருவமைப்பு தந்திரோபாயத்தை வகுக்க வேண்டிய கட்டாயத் திற்குள் தற்போதுதள்ளப்பட்டிருக்கின்றது.

வேர்களைத் தேடும் படலத்தில் இனப்படு கொலைக் குப் பின்னான தளத்தில் நினைவுத் திறம் முக்கியத் துவம் பெறுகின்றது. (Smith Rogger 1992) குறிப்பிடுவது போல பாதிக் கப்பட்டவர்கள் சமூகம் சார்ந்த குரல்கள் சார பான பிரதிநிதித்துவம் இல்லா தொழிகின்ற போது. அவர்களுக்கான குரல்கள் அலட்சி யமான, முன்னீடுபாடுகளை முன்வைத்த உலகில் கேட்கப்படாமலேபோய்விடும்.

Dan Stone தனது இனப்படுகொலையும் நினை வுத்திறமும் என்கின்ற ஆய்வுக் கட்டுரையில் ஒரு இனப்படுகொலை நடந் தேறுவதற்கு. கூட்டு நினைவுத் திறத்தை அணிதிரட்ட வேண்டிய தேவை இருக் கின்றதெனவும் இதேபோல் தான் இனப் படுகொலையை நினைவூட்டுவதற்கும் கூட்டு நினைவுத்திற அணிதிரட்டல் அவசியம் எனக் குறிப்பிடுகின்றார்.

மேலும் Nora குறிப்பிடுகையில் நினை வுத்திறம் என்பது நிரந்தரமான உண்மை யான தோற்றப் பாடு. எங்களை எப்போதுமே நிகழ்காலத்துடன் இணைக்கும் ஒரு பிணைப்பு என்கின்றார்.

என்னுடைய மேலாடை பொத்தான்கள் அவிழ்க் கப்பட்டிருந்தன எனது உள்ளாடை களை அந்த அறையில் விட்டு வந்திருந் தேன். மீண்டும் நான் தங்கி யிருந்த மண்ட பம் நோக்கி மீண்டு வரும் போது படை வீரர்கள் என்னைப் பார்த்து எள்ளி நகை யாடினர். நான் குனிந்த தலை நிமிராது அவமானத்தால் தரையைப் பார்த்து நடந்து சென்றேன். நீண்ட மண்டபத்தில் நடக்கும் போது என்னால் மேல் சட்டையின் இரண்டு பொத்தான்களை மட்டுமே பூட்ட முடிந்தது என்னுடைய முலைகள் வெளித தெரிந்தன. அதற்கு மேல் என்னால் ஒன்றுமே செய்ய முடியவில்லை.

என்னுடைய பாவாடை இரத்ததில் தோய்ந்திருந்தது என்னுடைய அவயங்கள் இரும்புக்கம்பியினால் சுடப் பட்டிருந்தது. எனது உடல் உடைந்த போத்தல் குவளை யினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது' (மேற குறிப்பிட்ட வன்புணர்வு சம்பவம் மனிக் முகாமில் நடந்தேறியது இது போன்ற சம்ப வங்கள் வெளிச்சத்திற்கு வராமலே போயுள என) இது உதிரியான ஒரு தாய்க்கு நேர்ந்த் வன்புணர்வு சம்பவம்.

தனிமனித நினைவுத்திறம் இறந்தகால சம்பவ நினைவூட்டல்களில் தங்கியுள்ளது. தனி உதிரிக்கு நடந்தேறியவை காலம், இடம் சார்ந்தது.

காலம், இடம் பொய்க்கும் போது உண் மைத் தன்மை கேள்விக்கு உட்பட்டு விடாது சரணடைந்த மக்கள் நிர்வாணமாக் கப்பட்டு படையினரின் சோதனைச் சாவடிக்குள்ளால் வலிந்து பயணிக்க திணிக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் ஒவ்வொருவரது அனுபவ முமே வித்தியாச மானது Halbwachs கூற்றுப்படி தனித்த உதிரியான நினைவுத் திறன்களின் கூட்டு வடிவமே கூட்டு நினை வுத்திறம் ஆகும். காரணம் மானிடம் தனித்த தன்மை யுடையதல்ல அது கூட்டுக்களின் தொகுப்பு. நினைவுத் திறம் ஒரு சமூகத் தோற்றப்பாடு அது வெற்றிடத்தில் அல்லது சூன்யத்தில் நிகழ முடியாது என்பது Herbert Hirsch இன் கருத்து.

உதிரியின் அவையப்படுத்தப்பட்ட அனுப வங்களும் கடந்தகால பட்டறிவும் அவற்றி னூடாக எழுந்த தெரிதலும் (knowing) எனது அடையாளத்தையும் இருப்பின் வகையறா வையும் தீர்மானிக்கின்றன. அனுபவம் சார்ந்த விபரிப்புக்கள் (narratives) மீள் வாழ்தலை தூண்டுகின்றது. இம் மீள் வாழ்தல் எனக்கான அடையாளத்தை உருவாக்க விளைகின்றது.

மீள் விபரிப்புக்கள் புதிய தெரிதல் களுக் குள் உதிரியை இட்டுச் செல்கின்றது. இப்புதிய தெரிதல் அனுபவத்தின் போது தெரிந்திருக்க வாய்ப்பில்லை. புதிய தெரித லின் மீள் வாசிப்புக்களும். தொடர்ச்சியான விபரிப்புக களும் அடையாள கட்டுருவமைப் புக்கு இட்டுச் செல்கின்றது. (Nicola King 2000) அடையாள கட்டுருவமைப்புக்கள் எல லாமே அரசியல் சார்புடையவை.

மானிடம் உதிரியானல்ல மாறாக கூட் டானது. உதிரியின் சமூக கூட்டுறவும். பகிர்தலும் கூட்டு அனுபத்திற்கு அழைத்துச் செல்கின்றது. மனித socia lisation கூட்டு அடையாள தெரிவுக்குவழி கோலுகின்றது.

கூட்டு நினைவுத்திறம் கடந்த கால பொதுமைப் படத்தப்பட்ட சொல்லாடல் களையும் படிமங்களையும் ஒருங்கே சேர்த்து தனக்கென ஒரு காலாச்சாரத்தை கூட்டு ருவமைக்கின்றது.

இதன் எல்லைகள் உதிரியின் நினை வுத்திற எல்லைகளைக் கடந்ததாக பொது நோக்கத்தை இலக்காக வைத்து நகரு கின்றது. உயடடிறயஉாள விபரிப்பது போல நிகழ் காலத்திலிருந்து. நிகழ்காலத்தில் நடப்பவைகளையும். தேவைகளையும். நல்ன்களையும் மையப்படுத்தி கடந்த காலம் விபரிக்கப்படுகின்றது. இந்த கூட்டு நினை வுத்திறத்தை சுற்றி தொன்மைக்கதை உருவாக்கப்படுகின்றது. இக்கதையின் உள்ளடக்கம் மக்கள் வாழ்வியலின் நடை முறை சார்ந்த அபிலாசைகளையும். ஆதங் கங்களையும். பிரதி பலிக்கின்றது. படிமப் பிரதிபலிப்பின் விளைவாக நினைவுச் சின்னங்கள். நினைவக்குறிப்புக்கள். நினை வுக் கூட்டங்கள், வளைவுகள் படைக கப்படுகின்றன. அப்படைப்புக்கள் கூட்டு அடையாளத்தை மையப்படுத்தி விபரிப்புக களை (Stone 2010).

### தேசிய நினைவுத்திறம்

தன்னை ஒரு இனமாக கருதிக் கொண்டு பொது அடையாளத்தினூடு தனித்தவுமிக்க குழுமமாக கூட்டு வரலாற்றின் இருப்பில் தங்கள் இருப்பை உறுதிப்படுத்தும். இனம் தங்களுக்கான Meta- விபரிப்புக்கள்ள தேசிய நலன் சார்ந்தும், முன்னுரிமைகள் சார்ந்தும் உருவாக்க கடமைப்பட்டுள்ளது.

நினைவுத்திறம் சாராது எந்தக் குழும அடையாளமும் இருப்புப் பெற்றதில்லை. ஓர் இலக்கு நோக்கிய தொடர்ச்சி என்பது நினை வூட்டல்களால் தக்க வைக்கப்படுகின்றது. நினைவூட்டப்படுபவை ஏற்கனவே அனு மானிக்கப்பட்ட அடையாளத்தினால் வரை யறுக்கப் பட்டிருக்கின்றது. ஒவ்வொரு குழுமமும் தனக்கான கடப்பைஃகடந்ததை நினைவூட்டி அக்குழுமம் சார்ந்த தனித் தன்மையை பேணுகின்றது. இவ்வாறு மீள்கட்டமைக்கப்பட்ட கடந்த கால படிமங் களால் அக்குழுமத்திற்கான பூர்வீகத் தன்மையும் அதன் சிறப்பு மிக்க தன்னி கரற்ற தன்மையும் தங்கியுள்ளது. (Litak 2009)

Everest Renan கூற்றுப்படி பொதுமை யில் துன்பம் ஒருமைப்படுத்துகின்றது குழு மங்களை. இனங்களை இன்பத்தை விட. தேசிய நினைவுத்திறத்தை பொருத்த வரையில் துன்பியல் வெற்றியை விட விழுமியங் கொண்டதாக கணிக்கப்டுகிறது. காரணம் இது கடப்பாடுகளை. கடமை களை திணிப்பதோடு ஒருங்கமைக்கபட்ட பொது வேலைத்திட்டத்தையும் தேவைக் குட்டபடுத்துகின்றது. ('suffering in common unifies more than joy does. Where national memories are concerned, griefs are more of value than triumphs, for they impose duties and require a common effort'.)

**Memory as mobilization (Dan Stone) .**

### நினைவுத்திற அணிதிரட்டல்

இனப்படுகொலையின் பின்னான சூழ லில் நினைவுத்திறமானது மக்களுக்கு இழைக்கப்பட்ட நீதிக்கு எதிராக பயன் படுத்தப்பட வேண்டும். இவ்வுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல இனப் படுகொலை நிகழ்வதற்கு முன் பாரிய நினைவுத்திற அணிதிரட்டல் நிகழ்வது கட்டாயம் என Dan Stone குறிப்பிடுகின் றார். இந்த அணிதிரட்டல் வெள்வேறு உளவியல் காரணங்களினால் நிகழலாம் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இனப்படுகொலை புரிபவர்களின் உள வியலை உற்று நோக்கும் போது அவர் களுந்டய உயர்வு மனப்பான்மை (superiority) ஏனையோரை விட் தாங் கள் உயர்வானவர்கள் அவர்கள் கொண்டி ருக்கும் கருத்தியல் உயர் வானது. (இவைகள் வலிமையற்ற குழுமத்தை இல்லாதொழிக்கும் மூர்க்க குணம்) அதிகார வலிமை யுள்ளவர் கொண்டிருக்கும் இறுக்கமான கருத்த ியல் வலிமையற்ற வரை அழிக்கின் றது. இன்னும் ஆழமாகப் பார்க்கின்ற போது இறுக்கமான கருத் தியலை தாங்கிய தாங்கள் ஏனையோரை விட உயர்ந்த வர்கள் என்ற மனப்பாங்கு பயத்தின் அடிப்படையில் உருவாகின்றது. இப்பயம் தான் அணிதிரட்டலை முன்னெடுன்கின் றது.

(Dan Stone 2000) இதற்கு மிகச் சிறந்த உதாரணமாக ருவாண்டாவில் நடந்த இனப்படுகொலையை குறிப்பிட லாம். Dan Stone குறிப்பிடும் படி ஒரு இனப்படுகொலை கருக்கொள்வதற்கு கருத்தியல் நினைவுத்திற அணிதிரட் டல் அவசியமோ அவ்வாறான நினை வுத்திற அணிதிரட்டல் இனப்படு கொலைக்கு நீதி வேண்டிய பயணத் திலும் அவசியமாகின்றது. இவ்நீதி வேண்டிய அணிதிரட்டலுக்கு நினை வுத்திறம் ஒரு கருவியாகப் பயன்படுத்த வேண்டியுள்ளது. இதே நினைவுத்திற அணிதிரட்டல்தான் தமிழர்களுக் கான விடியலைப் பெற்றுத்தரும் என்பது எனது தீர்க்கமான நம்பிக்கை.

ஆய்வாளர்கள் சுட்டும் இனவழிப்புக்கு காரணமான எதிர்மறையான நினை வுத்திற அணிதிரட்டல் நீதியை வேண்டிய யாகத்தில் நேர்மறையாக மாற்றப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது என நம்புகின்றேன். பின் முள்ளிவாய்க்கால் அரசியல் முன்னெடுப்புக் களில் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு முன்னெடுப்புக்களிலும் நேர்மறை நினை வுத்திற அணிதிரட்ட்டல் இன்றியமையாதா கின்றது.. இலக்குகள் எட்டப்படும் வரை நினைவுத்திறம் தொடர் மீள்கட்டுருவமைப் புச் செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட வேண்டியது வரலாற்றுக் கட்டாயம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செவ்விரத்தப் பூ




சிறுகதை

அதிகாலை நேரம் கடற்கரையில் கிளை பரப்பியிருக்கிற ஒரு ஆலமரம். அதை அண்டி ஒரு தனிக்குடிசை. ஊர் மனைகள் தூரத்தே தெரிகின்றன. கிடுகால் வேயப்பட்ட குடிசைக்கு அருகில், தான், நட்டு வைத்திருந்த செவ்விரத்தைச் செடிக்கு தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தாள் தமிழ்விழி. அவள் முகத்தில் என்றுமில்லாத ஒரு மகிழ்ச்சி தென்படுகிறது.

"அம்மா! நான் தண்ணீர் ஊற்றுகின்ற இந்தச் செவ்வரத்தம் செடி, நிறையப் பூ பூக்கும்தானே."

"ஓம் தமிழ்விழி செவ்விவரத்தம் செடி நிறையப் பூ பூக்கும். பள்ளிக்கு கூட்டிப்போக ஈழ நிலா வரப்போகிறாள் வேளைக்கு வெளிக்கிடு." என்று கஞ்சி ஆத்திக் கொண்டிருந்த மலர் சொன்னாள்.

"அம்மா நான் இப்ப சாப்பிடேல கட்டிக்கொண்டே பள்ளிக்கூடத்தில சாப்பிடப்போறன். என்ரைய கட்டித் தாங்கோ" என்று சொல்லிவிட்டு, தமிழ்விழி பொதுக்கிணற்றில் ஐந்தாறு வாளி நீரில் குளித்துவிட்டு அவசர அவசரமாக பள்ளிக்கூடம் வெளிக்கிட ஆயத்தமானாள். படலையில் தமிழ்விழியைக் கூட்டிச் செல்ல ஈழநிலா வந்திருந்தாள்.

"தமிழ்விழி! எங்கட அப்பா வெளிநாட்டிலிருந்து நேற்றுத்தான் வந்தவர் எனக்கு புதுச்சைக்கிள் வாங்கித் தந்தவர்"

"ம்..ம்.. உன்ர சைக்கிள் நல்ல வடிவா இருக்கு..."

எனக்கும் சைக்கிகள் ஓட்ட ஆசைதான் ஆனால், எனக்கு சைக்கிள் எடுக்க அம்மாட்டகாசில்ல. அம்மா என்னைப் படிக்க வைக்கிறதுக்கு ரொம் கஸ்டப்படுறா ... என நிலாவுக்குச் சொல்ல நினைததாள் ஆனால், ஏனோ சொல்லவில்லை மனதள வோடு நிறுத்திக் கொள்கிறாள்.

சைக்கிளில் தமிழ்விழியை ஏற்றிக் கொண்டு மிதி பலகையை அழுத்துகிறாள் ஈழநிலா. அது கடற்கரை வீதி வீதியில் பேருந்துகள் செல்கின்றன. கடலில் இருந்து மீனவர்கள் கரை திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். வீதியோராமாக சிறுவர்கள் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்தார்கள்.

தமிழ்விழிக்கு இப்பொழுது ஈழநிலாவுடன் கதைக்கவேண்டும் போல் தோனறியிருக்கவேண்டும்.

"ஈழநிலா! உனக்குத் தெரியும் தானே என்ர அப்பாக்கு நடந்தது. வியாபாரத்துக்கு விறகு கட்டிக் கொண்டுவரவெனப் போனவர் ... அந்தப் பாளாய்ப்போனவர்களின்ர செல்லில மாட்டி உயிரை விட்டுட்டார். அண்ணாவுக்கும் கால் ஏலாது. கோல் ஊன்றித்தான் நடக்கிறார். அண்ணா வைச்சிருக்கற மணிக்கூட்டுக் கடையின்ர சில்லறை வருமானத்திலதான் குடும்பமே ஓடிக்கொண்டிருக்குது. சைக்கிள் கனவெல்லாம் எனக்குச் சரிவராது...

நான் நல்லாப்படிச்சு ஒரு டொக்டராய் வரவேணும் அதுதான் என்ர ஆசை.

முந்தியும் ஒருக்கால் பிரச்சனைக்கே நாங்கள் இடம்பெயர்ந்திருந்தனாங்கள் அந்நேரம் அப்பாவின்ர வழமையான வேலைகள் செய்யிறது கடினமாகிப் போச்சு. அதனாலதான், காட்டுக்குள்ள விறகுவெட்டி வியாபாரம் செய்ய வெளிக்கிட்டவர். முக்கியமா என்னர படிப்புக்காகத்தான், அப்பா என்ன வேலையாவது செய்து வருமானம் ஈட்ட வேணும் என்று குறியாய் இருந்தவர்.

அந்தச் சமயம் தான் அப்பாவின்ர மரணச் சம்பவமும் நடந்தது.

எந்த யுத்தம் நடந்தாலும் சரி, ஏதோ ஒரு வழியில வேலைசெய்து சம்பாதித்து என்ரை படிப்புச் செலவைப் பார்த்தவர் ...

நான் படிச்சு டொக்கடராக வரவேணும். 'எனக்கு ஏதாவது வருத்தம் வந்தால், உன்னட்டைத்தான் வருத்தம் காட்ட வருவன். நீதான் என்னைச் சுகப்படுத்தவேணும்' என்டு எவ்வளவு நம்பிக்கையோட சிரிச்சு சிரிச்சு சொல்லுவார் ..." கவலை கண்ணில் நீர்த்தாரையாய் மறைக்க அவள் பேச்சு நின்று போனது.

ஈழநிலாவுக்கு விளங்கிவிட்டது ... எதையும் பேசாமல் அவள் சைக்கிளை ஓட்டினாள் ... சில வேளைகளில் தன் பேச்சு மேலும் அவளைக் கவலைப் பட வைத்துவிடக்கூடாது என்று அவள் எண்ணியிருக்கவேண்டும்.

தமிழ்விழி அழுகையை அடக்கி மீண்டும் பேச முனைந்தாள்.

"...அப்பா தன்ரை உயிரைத் தியாகம் செய்ததும் எனக்காகவே என்று தான் நான் கருதுறன் ...

அவரோட கனவை நான் எப்பாடு பட்டாவது நிறைவேற்றவேணும் ..." அவளின் முன்னால்காட்சிகள் எல்லாம் கலங்கலாகத் தெரிந்தன. ஆனாலும் அவளின் மனம் உறுதியோடும் தெளிவோடும் இருந்தது.

மென்மையான இதயங்கொண்டவள் தமிழ்விழி. யாருடனும் அதிகமாகக் கதைக்மாட்டாள். குழந்தைகள் மீது அதிக பிரியம் வைத்திருந்தாள். மாலைப் பொழுதுகளில் ஈழநிலாவும் தமிழ்விழியும் நட்பு ரீதியாகச் சந்திப்பார்கள். அன்றொரு ஞாயிற்றுக் கிழமை அவளை சந்திப்பதற்கு வீட்டிற்குப் போயிருந்தாள் ஈழநிலா.

குடிசை வீடானாலும் பூச்செடிகள் வைத்து வீடு அழகுபடுத்தப்பட்டிருந்தது அவற்றிற்கு நீர் வார்த்துக் கொண்டிருந்தாள் தமிழ்விழி. மல்லிகை,செவ்வரத்தை, நந்தியாவட்டை, வாடாமல்லிகை என அவை பூத்துச் சிரித்தன.

ஈழநிலாவைப் பார்த்த அவள் இந்தத் திண்ணையில் "இருநிலா. கை கழுவி விட்டு வாறன்" என்று சொல்லிவிட்டு பின்னே கிணற்றடிக்குப் போய்விட்டாள். வரும்போது தேசிக்காய்த் தண்ணீர் கிளாஸ் நிறையக் கொண்டுவந்தாள்.

"ஏன்... தமிழ்விழி இப்பதான் சாப்பிட்டு விட்டு வாறன். "பறவாயில்லை குடியடி ஈழநிலா" தனது அன்பு வர்த்தையால் குடிக்க வைத்தாள்.

தமிழ்விழி பூமரத்துக்கு தண்ணீர் விடுவதற்கு முதலாக படித்துக்கொண்டிரிந்திருக்கிறாள் என்பதை திண்ணையின் ஓரமாகக் கிடந்த புத்தகங்கள் காட்டின. அவளது உள்ளங்கையிலும் பேனாவரைந்த சிறு கோடுகள் காணப் பட்டன.

தமிழ்விழியின் தளராத நம்பிக்கையும், தற்துணிவும் முயற்சியும் ஒரு நல்ல வைத்தியரை இந்தத் தர்ய் நாட்டிற்கு தரும் என்ற எண்ணம் நிலாவின் உள்ளத்தில் தோன்றியது.

அவளது பூஞ்செடிகளுக்கருகே இரு சிட்டுக்கள் வந்து தேன் அருந்தின. அடிவானம் செந்நிற வர்ணம் பூசியதைப் போல அழகாக இருந்தது.

இருந்தாலும் நாடு அமைதியாக இல்லை என்பதை பறைசாற்றும் முகமாக வழமையாகக் கேட்கும் குண்டுச்சத்தங்கள் எங்கோ ஒரு திக்கில் அப்பொழுதும் கேட்டன...

எப்போதும் பெண்விடுதலையையும் மக்களின் சுதந்திரத்தையும் அதிகம் நேசித்தாள் தமிழ்விழி.

அவள் ஒரு சித்திரக்கொப்பி வைத்திருந்தாள். அதன் முன்பக்கத்தில் உலகத்தில் "எங்கு அநீதி நடந்தாலும் அதற்காக நாம் இருவரும் இணைந்து குரல் கொடுப்போமானால், அப்போது நாம் இருவரும் தோழர்கள்" என்ற சேகுவேராவின் சிந்தனைத் துளி எழுதப்பட்டிருந்தது. கொப்பியின் உள்ளே அழகிய படங்கள் வைத்திருந்தாள்.

ஒரு பெண் வைத்தியர், நோயாளி ஒருவருக்கு வைத்தியம் பார்ப்பதாக அந்தப்படம் இருந்தது. அடுத்த பக்கத்தில் முதியவர் ஒருவர் சைக்கிளில் விறகு கட்டி ஓடிக்கொண்டுவருவது போன்ற காட்சி. அடுத்து, காலில்லாத ஒரு அண்ணா ஊன்றுகோலுடன் நடந்து போகிறமாதரிப் படம். இன்னொன்று சமையல் அறையில் தாய் அடுப்பு ஊதுவதுபோன்ற படம் இப்படியாக கொப்பி முழுவதும் சித்திரமும் சிந்தனையும் நிறைந்திருந்தன. இறுதிப் பக்கத்தில் "புரட்சியாளர்கள் புதைக்கப்படுவதில்லை விதைக்கப்படுகிறார் கள் என்ற சேகுவேராவின் அடுத்த சிந்தனைத்துளி எழுதப்பட்டிருந்தது. கொப்பியில் காணப்பட்டவை அனைத்தும் அவளது சிறப்பான எண்ணங் களையே பிரதிபலித்தன என்பது புரியக்கூடியவாறிருந்தது.

அவள் இலக்கியத்திலும் ஈடுபாடுள்ளவள். கவிதைகள் சிறுகதை களும் படைத்திருக்கிறாள் ...பொதுவாக அவளது படைப்புகள் சமதர்மம் நோக்கிய சமூக விடுதலையின் அடித்தளத்தில் வேர்கொண்டிருக்கும். அவளது படைப்புகளில் மெல்லியதாக சோகம் தோய்ந்திருக்கும். அதின் உள்ளே கிராமியமணமும் வீசும்...

தன் கல்வியே கண் என்றிருந்த தமிழ்விழி பாடசாலையில் தவணைப் பரீட்சைக்குத் தோற்றிவிட்டு நடந்து வந்துகொண்டிருந்தாள். நிலத்தைப் பார்த்தவாறே நடப்பதுதான் அவளது இயல்பு. கதைக்கும் போது நின்று நிதானித்து உணர்ந்து கதைக்கும் பண்பு கொண்டவள் ...

இன்று தான் எழுதிவிட்டுத் திரும்பும் பரீட்சை, தனது வாழ்வில் இறுதிப் பரீட்சை என்று அவள் நினைத்திருக்க மாட்டாள்.

வீடு திரும்பும் பொழுது பாதைய்ருகில் ... அவளை இருவர் மறித்தனர்...! கதைத்தனர்...!

"தங்கைச்சி ...! நாடு இருக்கிற நிலைமை தெரியுதல்லா ... எப்படி உங்களா படிக்க முடியுது ... எப்படி உங்களாலே படிப்பே உலகம் என்று இருக்க முடியுது? உங்களுக்கும் கடமை இருக்குதல்லா ..." இது அவர்களின் வார்த்தை.

"இல்லையண்ணா நான் படிக்க வேணும் என்ர அப்பாவின்ர கனவை நிறைவேற்ற வேணும் ... என்னால முடியாது ...!" இது தமிழ் விழியின் வார்த்தை.

வாதாட்டம் நீண்ட நேரம் நடந்திருக்கும்...

*கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்பார்கள்.*

தமிழ்விழியின் ஆழ்மனதில் உறைந்திருந்த சுதந்திரதாகம் விழித்துக் கொண்டது ...!

அதன்பின் என்றைக்குமே அவள் தன்தாயாரிடம் திரும்பவேயில்லை ...!

ஈழநிலா வேறுபாதையால் சென்று விட்டதால் தப்பிவிட்டாள்.

இப்போ தமிழ்விழியின் குடிசைக்கு அருகேயான வீதியில் பயணிப்பது ஈழநிலாவுக்கு ஏதோ ஒரு ஆறுதல்... இன்றும் அவ்வழியால் செல்கிறாள்.

தமிழ்விழியின் குடிசை சிதைந்து காணப்படுகிறது. எருக்கலையும் பட்டிச் செடியும் நிறைந்து, முட்புதர்களும் சேர்ந்து மூடிக்கிடந்தது.

அதனூடே ஒரு செவ்வரத்தம்பூ ...! ஈழநிலாவின் கண்கள் பனித்தன ... "தமிழ்விழி ...! நீ எங்களை விட்டுப்போகவில்லை... இதோ தெரிகிறதே நீ வளர்த்த இந்தச் செவ்வரதம்பூச் செடியின் பூ!

இந்தச் செவ்விரத்த நிறப் பூ நீதான்...! அது நீதான் ... அதில் உன்னைத்தான் நான் பார்க்கிறேன். நீ ஒரு புரட்சிப்பூ...! இந்தப் புரட்சிப்பூவின் கதையை நான் எப்போதும் என் கண்களுக்குள் வைத்திருப்பேன்.

முல்லை திவ்ஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இவ்வாரம் விசுவமடு பிரதேசத்தில் குடிப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றின் குடும்பத் தலைவர், குடியை விட்டபின்னர் ஏற் பட்ட மாற்றங்கள் பற்றிய உண்மைச் சம்பவ விபரிப்பு ஒன்று வெளியாகின்றது. அடுத்தவாரம் குடிப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட குடும்பத் தலைவியரின் மனப்பதிவு வெளிவரும்.**

# மனவெளி

## தம்பிதான் என்ரை கடவுள் மாதிரி...

யுத்தத்தின் தாக்கத்திலிருந்து மெதுமெதுவாக மீண்டுவரும் இடங்களில் ஒன்றான விசுவமடுவில் அன்றாடம் பல்வேறு பிரச்சினைகளுடன் வாழ்ந்து வருகின்ற குடும்பம் ஒன்றின் உண்மைச் சம்பவ விபரிப்பு இதுவாகும்.

அன்றாடம் கிடைக்கும் வேலைக்குச் சென்று கையில் கிடைக்கின்ற பணத்தைக் கொண்டு தன்னுடைய குடும்பத்தை முன்னுக்குக் கொண்டுவர பாடுபடும் குடும்பத்தலைவர்கள் மத்தியில் அவர் வித்தியாசமானவர். கிடைக்கின்ற பணத்தை எடுத்து அப்படியே குடிப்பது மாத்திரமன்றி, வீட்டிலும் அட்டகாசம் புரிந்துவந்தார்.

மனைவியும் தன்னுடைய கணவனின் குடிப்பிரச்சினைக்கும் அதனைத் தொடர்ந்து நடக்கும் அட்டகாசங்களுக்கும் மத்தியிலும் பிள்ளைகளைப் பார்க்க வேண்டும். அவர்களின் எதிர்காலத்துக்கு ஏதாவது வழி செய்ய வேண்டும் என்று ஒரு நிறுவனத்தில் வேலைக்குச் சென்று வருகின்றார்.

அவர் வாழ்வில் தொடர்ந்து நடக்கும் பிரச்சினைகளைக் கண்டு சமாளித்து சமாளித்துக் களைத்து விட்டார்.

சம்பளம் எடுக்கின்ற நாளென்றால் யாருக்குமே மிகவும் சந்தோசமாக இருக்கும். வீட்டுக்கு சாமான்கள் வாங்கலாம், பிள்ளைகளுக்கு ஏதாவது வாங்கிக் கொடுக்கலாம். ஒரு புதிய சாறியை வாங்கலாம், ஐஸ்கிறீம் வாங்கிக் குடிக்கலாம் என்று பல கனவுகள் இருக்கும். ஆனால் அந்தப் பெண்மணிக்கோ சம்பளம் எடுக்கின்ற நாள் பயத்தில் நடுங்கிப் போய்விடுவார். அன்றுதான் அடியும் அதிகமாக விழும். குடிப்பதற்கு அத்தனை பணத்தையும் வாங்கிக் கொண்டு போய்விடுவார்.

கையில் கிடைக்கின்ற சம்பளப் பணத்தையும் கணவனின் குடிக்குக் கொடுத்துவிட்டு வீட்டின் தேவைகளை நிறைவேற்ற முடியாமல், மனதிலும், உடலிலும் வலியைச் சுமந்து கொண்டிருந்த அந்தப் பெண், இறுதியில் தன்னுடைய குழந்தைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வேறுவழியின்றி விவாகரத்துக் கேட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துவிட்டார். இவர்களுக்கான விவாகரத்து வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே அவர்களுக்குள் மேலும் மேலும் பிரச்சினைகள் தோன்றிக் கொண்டிருந்தன.

சாந்திகம் நிறுவனத்தின் உளசமூகப் பணியாளர்கள் விசுவமடுப் பிரதேசத்தில் பல்வேறு உளசமூகப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள குருந்தத்துடன் இணைந்து குடிப்பிரச்சினையிலிருந்து புனர்வாழ்வு கொடுக்கும் பணியையும் மேற்கொண்டு வருகின்றனர். அவ்வாறு மேற்கொண்ட உளசமூகச் செயற்பாட்டின் போது இந்தக் குடும்பம் அடையாளம் காணப்பட்டது.

அவர்களின் முழு விபரங்களையும் கேட்டறிந்த போது குடும்பத் தலைவனின் குடிதான் மொத்தப் பிரச்சினைக்கும் காரணம் என்பதைக் கண்டறிய முடிந்தது. வீட்டின் மொத்தப் பொறுப்பையும் தன்னுடைய தலையில் சுமந்து கொண்டிருந்த அந்தத்தாய், தன்னுடைய கணவனை தான் விவாகரத்துச் செய்வதற்கு காரணம் குடிதான் என்பதை அழுத்திச் சொன்னார்.

பிள்ளைகளும் தந்தையை வெறுத்தனர். மொத்தத்தில் குடும்பக் கட்டமைப்பு குடிப் பிரச்சினையால் சிதைவடைந்தது தெரியவந்தது.



தன்னுடைய மாற்றங்களைப் பற்றி பேராசிரியர் தயாசோமசுந்தரம் அவர்களிடம் பகிர்ந்து கொள்கின்றார்.

குடியின் பாதிப்புக்கள் உடலிலும்,உள்ளத்திலும் மறையாது தெரிய, தொடர்ச்சியாகக் கதைத்து அவரின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தனர். மனைவிக்கும் கணவன் குடியைவிட்டால் போதும் என்ற மனநிலை இருந்தது. அதேநேரம் கணவனுக்கும் குடியை விடவேண்டும் என்ற ஆசை இருந்தது. பிரிய இருக்கின்ற அந்தக் குடும்பத்தை மீண்டும் சேர்த்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் குறித்த உளசமூகப் பணியாளருக்கு இருந்தது.

தொடர்ச்சியாக இருவரையும் தொடர்பு கொண்டு கதைத்து விசுவமடுப் பிரதேசத்தில் உள்ள மாதர் சங்கம், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், சாந்திக மையக்குழு உறுப்பினர் போன்றோரின் உதவியுடன் ஒரு வழியாக அவரை குடியிலிருந்து தானாகவே விடுபட அவரது சம்மதம் பெற்றனர்.

சம்மதம் கிடைத்த மறுநாளே, குருந்தத்துடன் தொடர்புகொண்டு அவரை அங்கு அனுமதித்தனர். 14 நாட்கள் தொடர்ச்சியாகச் சிகிச்சை பெற்ற அவர் இன்று புதிய மனிதனாக மீண்டு வந்துள்ளார்.

தொடர்ச்சியாகக் குடி, வெற்றிலை என்று மற்றவர்களால் புறந்தள்ளி வைக்கும் நிலையிலிருந்த அந்த குடும்பத் தலைவன் இன்று தன்னுடைய குடிப்பிரச்சினையிலிருந்து மீண்டு வந்த அனுபவத்தையும் மகிழ்ச்சியையும் எல்லோரிடமும் பகிர்ந்து கொள்கின்றார்.

"நான் குடிச்சுத் திரிஞ்ச காலத்தை இப்ப நினைச்சாலும் எனக்கு வெட்கமாக இருக்கின்றது.

இந்தத் தம்பி எனக்குப் பின்னாலை துரத்தித் துரத்தி திரிஞ்சது, ஐயா! குடியை விடுங்கோ, விடுங்கோ என்று எனக்கு அப்ப எதுவும் தெரியேல்லை. ஒண்டைப் பற்றியும் யோசிக்கக் குடி விடாது. மனிசனை மாத்திப் போடும்.

நான் இவ்வளவு நாளும் என்ரை மனிசியை பிள்ளையளை எல்லாரையும் விட்டுப் பிரிஞ்சு தனியப் போக இருந்தனான். மனிசியும் என்னைப் பிரிஞ்சுபோக முடிவும் எடுத்திட்டா.

இண்டைக்கு இந்தக் குடியாலை நான் ஆருமில்லா அநாதையாத்தான் இருந்திருப்பன். குடியைவிட்டவுடனை தான் விளங்குது நான் எவ்வளவு பிழை செய்திட்டன் எண்டு.

இந்தத் தம்பி என்ரை குடும்பத்தின்ரை நன்மைக்காக சரியா பாடுபட்டு என்னைக் கொண்டே குருந்தத்திலை விட்டது. எல்லாத்தையும் விட்டுட்டன். வெத்திலை போடுறதையும் விட்டுட்டன். இப்ப நான் வீட்டிலை தோட்டம் செய்யுறன், என்ரை பயிரெல்லாம் நல்லா வருது. இண்டைக்கு நான் நல்லதொரு மாற்றத்தை என்னில் உணர்கின்றேன். என்னை இந்தளவுக்கு மாற்றிய இந்தத் தம்பி எனக்கு கடவுள் மாதிரி. தம்பி நான் யாருக்காக இல்லாட்டிலும் உனக்காக கட்டாயம் இனிமேல் குடிக்கமாட்டேன். நான் இப்ப வெத்திலை போடுறேல்லை. ஆனாலும் என்ரை மனிசி போடுறவா. அவாட்டையும் சொல்லுங்கோ அந்தப் பழக்கத்தை விடச்சொல்லி, இப்ப என்னோடை பிள்ளையள் நல்ல மாதிரி, என்னையும் ஒருமனிசனா இப்ப மதிக்குதுகள்.

என்ரை இரண்டாவது என்னைச் சைக்கிளிலை ஏத்திக் கொண்டு போனவன். எனக்கு இப்ப திருப்தியாவும் சந்தோசமாவும் இருக்கு. எல்லாம் இந்தத் தம்பியாலைதான் நடந்தது. இப்ப என்னைப் போல குடிச்சிட்டுப் பிரச்சினை பண்ணிக் கொண்டிருக்கின்ற மற்றாக்களையும் திருத்த வேணும் எண்டுநான் ஆசைப் படுறன்."

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை துறைசார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

**அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு,**
**8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்:
Email: psych@sltnet.lk Face book : Shanthiham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடியவர்: டி.எம். சௌந்தரராஜன்
இயற்றியவர்: கவிஞர் வாலி
இசை:திரைப்படம்: படகோட்டி




உலகத்தின் தூக்கம் கலையாதோ?
உள்ளத்தின் ஏக்கம் தொலையாதோ?
உழைப்பவர் வாழ்க்கை மலராதோ?
ஒரு நாள் பொழுதும் புலராதோ?

தரை மேல் பிறக்க வைத்தான் -
எங்களைத்
தண்ணீரில் பிழைக்க வைத்தான்
கரை மேல் இருக்க வைத்தான் -
பெண்களைக்
கண்ணீரில் துடிக்க வைத்தான்
தரை மேல் பிறக்க வைத்தான்

கட்டிய மனைவி தொட்டில் பிள்ளை
உறவைக் கொடுத்தவர் அங்கே
அலைகடல் மேலே அலையாய்
அலைந்து
உயிரைக் கொடுப்பவர் இங்கே
வெள்ளி நிலாவே விளக்காய் எரியும்
கடல் தான் எங்கள் வீடு (2)
முடிந்தால் முடியும் தொடர்ந்தால்
தொடரும்
இது தான் எங்கள் வாழ்க்கை
இது தான் எங்கள் வாழ்க்கை
(தரைமேல்)

கடல் நீர் நடுவே பயணம் போனால்
குடிநீர் தருபவர் யாரோ?
தனியாய் வருவோர் துணிவைத் தவிர
துணையாய் வருபவர் யாரோ?
ஒரு நாள் போவார் ஒரு நாள் வருவார்
ஒவ்வொரு நாளும் துயரம் (2)

அரை ஜாண் வயிற்றை வளர்ப்பவர்
உயிரை
ஊரார் நினைப்பது சுலபம்
ஊரார் நினைப்பது சுலபம்
(தரைமேல்...)

**இப்பாடலை**
**SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**
கே. நிவேதா, தம்பனை, அச்சுவேலி,
இந்துரி வேம்பொடுகேணி, பளை.

அன்பு வாசகர்களே !

காலத்தால் அழியாத கானங்கள் பகுதிக்கு, தங்களுக்கு விருப்பமான பழைய பாடல்களின் முதற்பந்தியுடன் அப்பாடலை யாருக்காக விரும்பிக் கேக்கிறீர்கள் என்பதையும் குறிப்பிட்டு, உங்கள் பெயர் முகவரி என்பனவற்றை ஆசிரியர், காலத்தால் அழியாத கானங்கள், வலம்புரி - சங்குநாதம், இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவை ங்கள்.

அல்லது 021-5671543 என்ற இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள். நீங்கள் விரும்பும் பாடல் இப்பகுதியில் முழுமையாக பிரசுரமாக்கப்படும்.

# ஈழத்து சினிமா

## துலைக்கோ போறியள்- குறும்பட விமர்சனம்




நூதனமான திரைமொழி கட்டமைப்பின் மூலமும் ஈழத்து வட்டார மொழிவழக்கை கச்சிதமாக உள்வேண்டி திரையில் பிரயோகிப்பதன் மூலமும் சில குறும்படங்கள் யதார்த்தபோக்கின் மிக அருகில் நின்று ரசிக்க வைக்கின்றன. இந்தத் திறன்களை தோராயமாக ஒத்து ஈழத்தில் வெளிவந்த குறும்படம் "துலைக்கோ போறியள்?"

ஈழத்து வட்டார மொழியில் துலைக்கோ போறியள் என்ற வார்த்தைப் பிரயோகத்துக்கு தனித்துவமான கருத்தாக்கம் உண்டு. யாராவது வெளியே செல்லும்போது எங்கே போறீங்கள் என்று கேட்பது அபசகுனமாகக் கருதப்படுகின்றபடியால் அதற்குப் பதிலாக துலைக்கா போறியள் என்ற கேள்வியை மையமாகப் பயன்படுத்துவார்கள். ஒரு திருடனின் நூதனமான திருட்டுச் சம்பவத்துடன் ஈழத்தின் சில முக்கிய பிரச்சினைகளை தொட்டுச் செல்வதோடு சிறு புன்னகையுடன் ரசிக்கவும் வைகின்றது. திருடன் ஒருவன் பனைமரத்தில் கள்ளுச்சீவ ஏறியவரின் சைக்கிளை கவர்ந்துகொண்டு வலம்வரும்போது புலம்பெயர்தமிழர் ஒருவர் புலத்திலுள்ள நண்பனின் தாயகத் திலுள்ள பெற்றோருக்கு பொதி ஒன்றை கொடுக்கச் செல்கின்றார். அவருடன் இயல்பாக அறிமுகமாகி யதார்த்தமாக உரையாடிக் கொண்டு செல்லும்போது பல முக்கிய பிரச்சினைகளை அவர்களுக்கு இடையேயான சொல்லாடல்களுடன் சொல்லப்படுகின்றது. புலம்பெயர்தமிழர்களின் நிதியுதவியினால் தாயகத்தில் உள்ளவர்களுக்கு பொருளாதார நெருக்கடிகள் நீர்ந்துபோக வைக்கப்பட்டாலும் பெரும்பாலான நிதிகள் ஆடம்பர கவர்ச்சிக்கும் செயற்கையான கட்டமைப்புகளுக்கும்சென்றுவிடுவதினை புலத்தில் இருந்து ஊர் வந்த நபரும், சைக்கிள் திருத்துபவரும் சந்திக்கும் ஒரே காட்சியில் திரைமொழியூடாக வெளிப்படுத்தி யவிதம் ஆழமானது.

குறும்படத்தை இயக்கியிருப்பதோடு திருடனுக்கான பாத்திரத்தையும் மதி.சுதா ஏற்று நடித்திருகின்றார். ஏரம்போ ஐயாவின் சாதி பார்ப்பதினை படிமமாக்கியவிதம் யதார்த்தப் போக்குடன் ஒத்துப் பரிணாமிக்கின்றது. வீட்டு வளவுக்குள் உள்நுழையும்போது வெறுப்பு உமிழும் முகத்துடன் மதி.சுதாவை ஏறிடுவது என்று ஏரம்போ பாத்திரம் சாதிய ஆழ்மனவெறுப்பை உதிர்க்கின்றது. மதி.சுதாவுக்கு பூக்கண்டுக்கு தண்ணீர்வார்க்க வைத்திருந்த குவளையில் குடிக்க தண்ணீர்கொடுப்பது பின்னர் தொலைபேசி வாங்க வரும்போது கதிரையை துடைக்க சொல்வதும், துடைக்கும்போது கதிரையை தூக்க முயன்ற மதி.சுதாவை கண்டு கிளர்ந்தெழுந்த உணர்ச்சியில் உதைந்து விழுத்திட்டு சுதாகரித்து மதிசுதாவை சாந்தப்படுத்த சோடா கொண்டு வருகின்றேன் என்று சொல்லும் இடங்கள் நுட்பமான படிமமாக்கள்.

சாதிய ஒடுக்குமுறையையும் திருடனின் திருட்டையும் இணைக்க முற்பட்ட இடத்தில் இயக்குநரின் கவனங்களையும் மீறி சில நுண்ணரசியல் பின்புலத்தளத்தில் உருவாக்கிவிட்டது. ஏரம்போ ஐயா சாதி பார்ப்பதினால் தாழ்சாதியவர் பாதிக்கப்படுவதுபோல் சித்திரிக்க முற்படும்போது தாழ்சாதியவர் திருடனாக காட்டப்படும்போது சில அபத்தங்கள் உருவாகிவிடுகின்றன. சமூகத்தில் தாழ்சாதியவர்கள்தான் திருடர்கள் அல்லது அதற்கான திருட்டு குணத்தை கொண்டுள்ளார்கள் என்ற அபத்தமான கருத்து நிகழ்கின்றது. அந்தக் கருத்தை இக்குறும்பட கட்டமைப்புக்கள் ஆமோதிக்கும் வகையில் அமைந்திருக்கின்றன. இந்த நுண்ணிய முரண்பாடுச் சித்திரத்தை இயக்குநர் மதி.சுதா யோசிக்கத்தவறிவிட்டாரா என்று யோசிக்கவைகின்றது. இந்த நுண்ணியல் தர்க்கக் கட்டமைப்புக்களை மேன்மையாக கையாள்வதன் மூலமே சிறந்த இயக்குநராக நிறுவ முடியும்.

நடிப்பு ரீதியில் மதி.சுதா, ஏரம்போ ஐயா பாத்திரத்தில் நடித்த இருவரும் இயல்பாக நடித்திருகின்றார்கள். புலம்பெயர் நபராக நடித்தவரின் உடல்மொழிகளும்வசன வெளிபாடுகளும்செயற்கையாக உள்ளன. இன்னும் மேம்படுத்தமுடியும் பின்னிசையில் ஒலிக்கும் துலைக்கோ போறியள் என்ற தீம்இசை பரவசப்படுத்தும் விதத்திலிருந்தாலும் நகைச்சுவை துணுக் குகளில் ஒலிக்கும் இசை வீடியோகேமில் ஒலிக்கும் இசையை நினைவுபடுத்துகின்றது. ஒளிப்பதிவு சில இடங்களில் பின்னணி களங்களை உள்வேண்டுவதில் முனைப்புக்காட்டி பாத்திரங்களை கச்சிதமாக உள்வேண்ட தவறிவிட்டாலும் உறுத்தவில்லை.

**அனோஜன் பாலகிருஷ்ணன்**

# ஈழத்து கவிதைகள்

கவிஞர் இளவாலை விஜயேந்திரன்

## நட்புமரம்

பேசி
என்ன கிழியப் போகிறது
நட்புப் பற்றி?
பேசுதல் சுகமென நம்பினால்
பேசாதிருக்கிறாய்
தொலைபேசிக்
காசு போனது எனக்கன்றி
உனக்கல்ல.

நேற்றைக்கு வந்த
நட்புப் பெரிதென்று
நினைத்திருந்தால்
சொல்லியிருக்கலாம்
நடந்திருப்பேன் என் திசையில்.

அந்தஸ்துக்குக்காய் நட்பை
அறுத்து விடலாம் என்றால்
சொல்லியிருக்கலாம்
எந்தக் காலமோ அதை நீ.

வந்தவெள்ளம் அள்ளிப்போக
நட்பொன்றும் குட்டையல்ல என்று
நம்புகிறேன் நான்.

வெறுந்தடுக்கிற் புரண்டெழுந்து
விடிகாலைக் கடன் கழித்து
வீண் கதைகள் நாள் முழுக்கப்
பேசி
இருந்தோமே
என்றெண்ண நம்பவில்லை
என்மனமே.

இருபது வருடப் பிறகும்
காதலின் எரிந்தேன்
முப்பது வருடப் பிறகு
பாதி முதுமையில்
முகமறிகிறேன் பிரிய நண்ப.

புத்தனுக்குப் போதிமரம்
நாற்பது வயதில்
எனக்கொரு நட்புமரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா செய்தி

# திரைவிமர்சனங்கள்

## புறம்போக்கு



ஒரு மரணதண்டனைக் கைதி, அவரைத் தூக்கில் தொங்கவிடும் கடமையை ஏற்றுக் கொண்ட காவல் அதிகாரி, தூக்குப்போடுகிற வேலையைச் செய்கிற ஊழியர் ஆகிய மூவரைச் சுற்றிப் பின்னப்பட்டிருக்கிற திரைக்கதையை வைத்துக்கொண்டு எடுக்கப் பட்டிருக்கும் இந்தப்படம், தமிழில் மக்கள்அரசியல் படங்களே வருவதில்லை என்கிற குறையைப் போக்கியிருக்கிறது.

முற்காலத்தில் தீவிர கம்யூனிஸ்டுகள் என்றும் இப்போது மாவோயிஸ்டுகள் என்று அழைக்கப்படுகிறவர் வேடத்தில் ஆர்யா நடித்திருக்கிறார். காவல் அதிகாரியாக ஷாமும், தூக்குப்போடும் ஊழியராக விஜய்சேதுபதியும் நடித்திருக்கிறார்கள். ஆர்யா வின் இயக்கத்தைச் சேர்ந்த போராளியாக நாயகி கார்த்திகா நடித்திருக்கிறார். ஆர்யாவுக்கு மரணதண்டனை என்று தீர்ப்புச் சொல்லுவதோடு தொடங்குகிறது படம். தூக்குத்தண்டனை வேண்டாம் என்னைப் போர்க்கைதியாகப் பாவித்துச் சுட்டுக் கொல்லுங்கள் என்று ஆர்யா கேட்கிறார். நீதிமன்றத்தால் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது. சிறையில் ஆர்யா அடைக்கப்படுகிறார். ஆர்யாவைச் சிறையிலிருந்து மீட்க நாயகி கார்த்திகா தலைமையில் அவர்களுடைய இயக்கம் போராடுகிறது. ஆர்யாவைத் தூக்கில் போட்டுத் தன் கடமையைச் செவ்வனே செய்ய வேண்டும் என்கிற துடிப்புள்ள அதிகாரியாக ஷாம் இருக்கிறார்.

தூக்குப் போடும் வேலையை வெறுத்து தொடர்வண்டித்துறையில் தற்காலிகப்பணியாளராக இருக்கும் விஜய்சேதுபதியைத் தூக்குப்போட அழைக்கிறார்கள். முதலில் மறுத்துவிட்டு பிறகு ஆர்யா தப்பிக்க உதவவேண்டும் என்பதற்காக அந்த வேலையை ஒப்புக்கொள்கிறார் விஜய் சேதுபதி. ஆர்யா சிறையிலிருந்து தப்பித்தாரா இல்லையா என்பதுதான் படம். அதை மிகவும் விறுவிறுப்புடன் சொல்லியிருக்கிறார்கள்.

படத்தின் பெரும்பகுதி சிறைக்குள்ளேயே நடக்கிறது என்றாலும் போரடிக்கவில்லை. பேனா வாங்கிக்கொடுத்ததற்காக தூக்குத்தண்டனை என்று ஒருவரைச் சுட்டுவது, இளம்பெண் ஒருவரைக கற்பழித்துக்கொன்றார் என்ற குற்றத்திற்காக ஆயுள்தண் டனை பெற்றிருக்கும் ஒருவரிடம், உன்னை விசாரித்த அதிகாரி உன்னை திட்டமிட்டு இந்தவழக்கில் சிக்கவைத்துவிட்டதாக எழுதி வைத்துவிட்டுச் செத்துப்போய்விட்டார் அதனால் உன்னை விடுதலை செய்கிறேன் என்று நீதிபதி சொன்னதும், அதைக் கேட்டுக் கதறியழுதுகொண்டே நான்தான் கற்பழிச்சேன்னு நினைச்சு அவமானம் தாங்க முடியாம என் மனைவியும் பொண்ணும் தற்கொலை பண்ணிகிட்டாங்க அவங்க உயிரைத் திருப்பித்தருவீங்களா என்று கைதி கேட்பது உள்ளிட்ட பல காட்சிகளில் நடைமுறை அவலங்களைச் சுட்டிக்காடுகிறார் இயக்குநர் எஸ்.பி.ஜனநாதன். மரணதண்டனை என்று தீர்ப்புச் சொல்லும்போதும் கூட மிகஅலட்சியமாகக் கடலை சாப்பிடுகிறார் ஆர்யா.

இந்தியாவில் மரணதண்டனைக்குரிய கொடியகுற்றங்களைச் செய்தவர் என்று அவர் மீது குற்றம் சாட்டப்படுகிறது, அதை மிகவலிமையாக எதிர்கொள்கிறார்.

உச்சநீதிமன்றம் தானியங்களில் கிடக்கும் தானியங்களை மக்களுக்குக் கொடுக்கச் சொல்கிறது. அதைச் செய்தால் நான் குற்றவாளியா? என்று கேட்கிறார்.

கார்த்திகாவும் ஆர்யாவும் சேர்ந்து ராஜஸ்தான் பாலைவனத்தில் ஓடும் தொடர்வண்டியில் உணவுதானியங்களைக் கொள்ளையடிப்பதும் காஷ்மீரத்துப்பனிமலையில் இராணுவ வாகனங்களைத் தாக்க மனிதவெடிகுண்டாகப் போவதும் போகிற இடத்தில் இந்தியாவைக் குப்பை மேடாக்காதே என்று பேனர் பிடிப்பதும் தமிழ்சினிமாவுக்குப் புதிது. போன இடத்தில் சும்மா இருக்காமல் ஆர்யாவையும் கார்த்திகாவையும் வைத்து ஒரு பாடலையும் படமாக்கிவிட்டார்கள். தாங்கள் ஏற்றுக்கொண்ட போராளிகள் வேடத்துக்கு இருவருமே மரியாதை செய்திருக்கிறார்கள்.

ரயில்வே தொழிலாளியாகவும் தூக்குப்போடுகிறவராகவும் நடித்திருக்கிற விஜய் சேதுபதி, மிக நுட்பமான உடல்மொழிகள் மூலம் தன்னுடைய நடிப்புத்திறமையை வெளிப்படுத்தியிருக்கிறார். ஜனாதிபதி தேர்தலுக்கு போட்டியிட மனு கொடுத்ததற்கான காரணத்தைச் சொல்லுமிடத்தில் திரையரங்கே அதிரத்தான் செய்தது. மரணதண்டனையையே கொலை என்று விஜய்சேதுபதி சொல்வதும் ஷாம் அவருக்கு விளக்கம் கொடுப்பதும் கவனிக்கவேண்டிய இடங்கள்.

மரணதண்டனைக்காக மேடையைத் தயார் செய்வதைப் பார்த்துவிட்டு, திட்டமிட்டுச் செய்வது கொலை என்பார்கள் என்னைக் கொல்ல இவ்வளவு பக்காவாகத் திட்ட மிடுகிறீர்களே இது எந்தவகை என்று ஆர்யா கேட்குமிடம் கைதட்டல் வாங்குகிறது. மரணதண்டனை நிறைவேற்ற எவ்வளவு நடைமுறைகள் இருக்கின்றன என்பதை விளக்கமாகக் காட்டியிருப்பதன் மூலம் ஒரு உயிரை வாங்க எவ்வளவு திட்டமிடுகிறார்கள் என்று காட்டியிருக்கிறார் இயக்குநர்.

தப்பு செய்கிறவனையெல்லாம் தொடர்ந்து தூக்கில் போட்டுக்கொண்டேயிருந்தால் சில ஆண்டுகளில் நாட்டில் குற்றமே இருக்காது என்று வாதாடும் ஷாம், பொலிஸ் அதிகாரியின் மிடுக்கோடு கடைசிவரை இருக்கிறார். அரசாங்கத்தின் பிரதிநிதியாக அச்செடுத்தாற்போல் இருக்கிறார். அவருடைய தோற்றம் நடிப்பு ஆகியனவற்றில் நல்ல முதிர்ச்சி இருக்கிறது. தூக்குப்போடும் திகதி என்று ஒருநாளை அறிவித்துவிட்டு அதற்கு முன்பாகவே தூக்குப்போடத் திட்டமிடுவது பொலிஸாரின் சமயோசித புத்தியைக் காட்டும் காட்சிகள். ஆனால் பொலிஸ் அதிகாரியான ஷாம், நீதிபதி உட்பட எல்லோரையும் சிறைக்குள் கட்டாயமாக இருக்கவைக்கிறார் என்பது எதார்த்தமாக இல்லை. விஜய்சேதுபதி வேடத்தின் மூலம் வேலைநிரந்தரம் கோரிப்போராடும் ரயில்வே தொழிலாளர்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். எந்நேரமும் குடித்துவிட்டு வீணாயப் போகும் மகனுக்கு பாலியல்தொழிலாளியாக இருந்தாலும் பரவாயில்லை ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துவைத்து அவளைக் குடும்பப்பெண்ணாக மாற்றி விடலாம் என்று விஜயசேதுபதியின் அம்மா ரமா சொல்லும் காட்சியில் இயக்குநரின் மாறுபட்ட பார்வை தெரிகிறது.

ஸ்ரீகாந்த்தேவாவின் பின்னணிஇசை, என்,கே.ஏகாம்பரத்தின் ஒளிப்பதிவு செல்வ குமாரின் கலைஇயக்கம் ஆகியனவும் படத்துக்குப் பலமாக அமைந்திருக்கிறது. ஆர்யா, விஜய்சேதுபதி, ஷாம், கார்த்திகா ஆகிய நால்வரும் சொல்லிப் பெருமைப்பட்டுக்கொள்ளும் படமாக இருக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகலாந்தில் நடந்தது ஞாபகம் இருக்கிறதா?

படுகொலைகள் என்பது தமிழர் பிரதேசத்தில் இன்று நேற்று அறியப்பட்ட ஒன்றல்ல. அது காலா காலமாக அரங்கேறிவரும் ஒன்று. அதேவேளை நன்கு அறியப்பட்ட சொற்பிரயோகமாகவும் அதுவும் தமிழரை மையப்படுத்தியதாகவும் படுகொலைகள் இடம் பெற் ஷறுக்கொண்டுதான் இருக்கின்றது. இதனைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை ஒவ்வொரு தமிழனும் படுகொலை செய்யப்படும் போது வலுப்பெற்றுவரும். ஆனால் ஏனோ குறுகிய காலப்பகுதியில் அந்தக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்ட நிலையில் இல்லாமல் போய்விடும்.

படுகொலைக்குள்ளாக்கப்படுவது தமிழன் தானே என்றுதடுக்க வேண்டியகடப்பாட்டிலுள்ளவர்கள் எண்ணுவதால் அந்த எண்ணிக்கை இன்னும் அதிகரித்துக் கொண்டுசெல்கின்றதா? என்ற கேள்வியும் சந்தேகமும் படுகொலைகள் நடைபெறும் போது பலமாகஎழுகின்றது. இந்தச் சந்தேகத்தைப் போக்கமுற்படும் போது அந்தக்கேள்விக்கான பதில் கிடைக்க வாய்ப்புள்ளது.

முள்ளிவாய்க்காலில் இடம் பெற்ற இனப்படுகொலைக்கு நீதி கோரிப் போராட்டங்களையும் நினைவேந்தல் நிகழ்வுகளையும் ஈழத்திலும் சர்வதேச ரீதியாகவும் தமிழர்கள் முன்னெடுத்துவரும் நிலையில் வடக்கில் நீதிகோரிப் போராட்டங்களைத் தமிழர் தரப்பு இடைவிடாது முன்னெடுக்கவேண்டிய சூழ நிலைக்கு தள்ளப்பட்டுக்கொண்டு இருக்கிறது. ஏனெனில் படுகொலைகள் தொடர்ந்து கொண்டு இருப்பதால் அந்நிலை உருவாகியுள்ளது.

குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தினால்தான் அமைதியான சூழலை ஏற்படுத்தமுடியும் என்பதை நன்கு உணர்ந்திருந்தும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கமற்று செயற்பட்டுக் கொண்டிருக்கிறது பாதுகாப்புத் தரப்பு என்ற குற்றச்சாட்டு தற்போது யாழ்.குடாநாட்டு மக்கள் மட்டுமன்றி வடபகுதி மக்களாலும் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

வாள்வெட்டு, போதைப் பொருள் பாவனை, கொள்ளை, திருட்டு,போலி காசோலை மோசடி, கப்பம் பெறுதல்,ஆட்கடத்தல், மிரட்டல்கள் என இப்பட்டியல் நீண்டுகொண்டுசெல்வதால் ஒரு தரப்பினைநாம் இழந்து விட்டோம். அவர்கள் இருந்தால் இப்படி நடக்குமா? அவர்களின் காலத்தில் இப்படிநடந்ததா? நடந்தாலும் குற்றவாளிகள் தப்பிக்க முடியுமா? என்ற கேள்விக ளுடன் தமது மனதிலுள்ள ஆதங் கங்களைக் கொட்டித் தீர்க்க ஆரம்பித்து விட்டனர் தமிழ்மக்கள்.

**எமது இனத்தின் விடுதலைக்காக போராடியவர்களை மறந்து ஏன் அவர்கள் போராடினார்கள்.,தங்கள் உயிர்களைச் துச்சமென நினைத்து விண்ணுலகம் சென்றார்கள் என்பதைக்கூட புரிந்துகொள்ள முடியாத மடமைத்தனத்துடன் மாண்டுபோகும் நிலைக்கு நம்மாணவர்களும் இளம் தலைமுறையினரும் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். இதைத்தடுக்கமுடியாதவர்கள்குற்றம்சாட்டப்பட்டநபர்கள் பிணையில் செல்வதைக்கூட தடுக்கஆட்சேபனைதெரிவிக்க மறுப்பதுசந்தேகத்தைபலமாகதோற்றுவிக்கின்றது**

ஆம், தமிழீழவிடுதலைப் புலிகளின் காலத்தில் பாரிய குற்றங்கள் அதிகளவில் வடபகுதியில் நடந்தது இல்லை. அப்படி நடந்தாலும் குற்றவாளிகள் தப்பிக்கமுடியாது. அவர்களுக்கு புலிகள் வழங்கும் தண்டனை பிறிதொருவர் அக்குற்றங்களைச் செய்யமுற்படாதஅளவுக்கு தண்டனைகள் பலமாக அமையும். அந்தளவுக்குஅவர்கள் மக்கள் தங்கள் மீதுவைத்திருந்த நம்பிக்கையை உறுதிசெய்யும் வகையில் செயற்பட்டிருந்தனர்.



தமிழீழ விடுதலைப் புலிகளின் சட்டதிட்டங்களை கடுமையாக விமர்சனம் செய்யும் பொலிஸார் தங்கள் மீது மக்கள் முன்வைக்கும் விமர்சனங்களைக் கண்டு கொள்ளாமல் இருப்பது ஏன் என்ற கேள்வியும் எழுகின்றது. போதைப் பொருள் பாவனையால் யாழ்.குடாநாட்டை மையப்படுத்தி வடக்கில் இடம்பெறும் பாரியகுற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த கதைத்தலைத் தவிர வேறு எதைச் செய்ய முடிந்தது பொலிஸாரால்.



புங்குடுதீவில் அண்மையில் படுபாதகர்களால் சீரழிக்கப்பட்டு படு கொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவி வித்தியாவின் (வயது-18) மரணம்கூட பல சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ள அதேவேளை பொலிஸாரின் நடவடிக்கைகளும் அதனை நிறையவே ஏற்படுத்தியுள்ளது. சந்தேகம் வரக்கூடி சூழ்நிலைகளை ஏற்படுத்தி விட்டு சந்தேகம் கொள்ளாதீர்கள் என்று கூருவதில் நியாயம் இருக்கமுடியாது என்பது உண்மைதானே.

அது ஒருபுறமிருக்க சந்தேகத்தைப் போக்கவேண்டிய தரப்பினர் மீதே சந்தேகம் வந்தால் என்ன செய்ய முடியும்.சந்தேகத்தை மட்டும் தான் கொள்ளமுடியும். அதைத் தான் தமிழர் தரப்பு செய்கின்றது. அதைத் தடுக்க,சந்தேகத்தைப் போக்க நடவடிக்கை எடுங்கள் அதை விடுத்து சந்தேகம் கொள்பவர்களை அடக்கமுற்படாதீர்கள் அது இன்னும் உங்கள் மீதான சந்தேகத்தை அதிகரிக்கக்கூடும்.

அதேவேளை மாணவி வித்தியா பாடசாலைக்குசென்றவள் வீடுதிரும்பவில்லை என்றுஉறவினர்கள் உங்களிடம் முறையிடவரும் போது அவள் யாருடனாவது ஓடியிருப்பாள். விடிந்ததும் தெரிந்துவிடும் என்று நீங்கள் மாணவிமீது சந்தேகம் கொண்டது போன்றுநாங்கள் உங்கள் மீது சந்தேகம் கொண்டோம் என்றும் இதற்கான அர்த்தத்தை நீங்கள் புரிந்துகொள்ளுங்கள்.

மக்கள் சந்தேகம் கொள்வதால் பெருமளவில் பாதிப்பு ஏற்படாது. ஆனால் பொலிஸார் சந்தேகத்தை மட்டும் தமது கடமையாகக் கொண்டால்பெரும் பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. அதற்கு புங்குடுதீவு மாணவி வித்தியாவின் மரணமும் கூட ஒரு சாட்சியாகவுள்ளது.

அதுமட்டுமின்றி தமிழரின் பாதுகாவலர்கள் யார் என்பதையும் வித்தியாவின் இறுதிஅஞ்சலிக்கூட்டதில் மக்கள் உணர்த்தியிருந்த அதேவேளை பொலிஸார் மீது நம் பிக்கையில்லை என்பதையும் தமது உணர்வுகள் மூலம் மக்கள் வெளிப்படுத்தியி ருந்தனர்.

மரணச் சடங்கின் போதும் மறவர்களின் நினைவுகள் மீட்டப்பட்ட போதும் மக்கள் கரகோசம் எழுப்பியிருந்த னர் என்ற செய்தியை அறியக் கூடியதாகயிருந்தது.

எனவே,அரசாங்கம் மக்களுக்கு பாதுகாப்புவழங்கவும் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கவுமே தங்களை நியமித்துள்ளது என்பதை ஒவ்வொரு பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் புரிந்து கொள்ளவேண்டுமே தவிர போதைப்பொருள் பாவ னைக்கு அடிமையாகும் சமூகத்தை ஊக்கப்படுத்துவதற்கல்ல. அவ் வாறு பாதுகாப்புத் தரப்பினர் செய்ய முற்பட்டால் பாதுகாப்பு வழங்கியவர்களின் நினைவுகள் மீட்டப்பட்டுக் கொண்டேயிருக்கும். அது இந்த உலகத்தின் ஓரத்தில் ஒரு தமிழன் வாழும் சூழ்நிலை உருவானாலும் அழிக்கப்பட முடியாத ஒன்று.

**வடக்கு மாகாணத்தில் யுத்தத்திற்குப் பின்னரான காலப் பகுதியில் அரங்கேறிவரும் குற்றச்செயல்கள் மக்களை யுத்தப் பாதிப்புகளிலிருந்து மீளவிடாது தடுத்துக்கொண்டிருக்கும் அதேவேளை தமிழர்கள் அழிவதற்கென்றே பிறந்தவர்கள் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் நாளாந்தம் படுகொலைகளும் இடம்பெற்றுவருவதனால் மக்களின் மனங்கள் ரணகளமாக மாறிவருகின்றன**

பாலியல் குற்றவாளிகள் பாதுகாக்கப்படும் சூழ்நிலை உருவானால் அக்குற்றங்களுக்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்படுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டு செல்லும் அதைத் தடுக்க யாராலும் முடியாது.

இந்தியாவின் நாகலாந்தில் ஒரு சிலமாதங்களுக்கு முன் பாலியல் குற்றவாளியொரு வரை அவ்வூரைச் சேர்ந்தவர்கள் சிறைக்குள் புகுந்து வெளியே கொண்டு வந்து நிர்வாணப் படுத்தி இரத்தம் சொட்டச் சொட்ட வீதியில் வைத்து அடித்துப் படு கொலை செய்தனர். அதுமுற்றி லும் சட்டத்துக்குப் புறம்பான ஒன்று தான்.ஆனால் மக்கள் தீர்ப்பை இறைவனின் தீர்ப்பாக நாம் கொள்வதுண்டு என்பதா லும், தண்டனைகள் அதிகரிக் கப்படும் போது தான் குற்றங்க ளைக் கட்டுப்படுத்த முடியும் என்ற வலுவான கருத்து உள்ளது என்பதை நினைவுபடுத்தினேன் வேறு ஒன்றுமில்லை.

தமிழன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook

## சிறந்த நண்பர்கள் நட்புக்கு உறுதுணை



ஒரு காட்டில் வசித்து வந்த நரியும், கழுதையும் நண்பர்களாகப் பழகத் தீர்மானித்தன. இரண்டும் சேர்ந்து ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டன.

நாள்தோறும் இருவரும் ஒன்றாகவே சேர்ந்து இரைதேடச் செல்ல வேண்டும் என்றும், இரண்டு பேரில் யாருக்கு என்ன ஆபத்து ஏற்பட்டாலும், மற்றவர் ஆபத்தை விலக்கப் போராடுவது என்றும், நரியும், கழுதையும் அந்த ஒப்பந்தத்தின் மூலம் உறுதி செய்து கொண்டன.

ஒருநாள் நரி தன் நண்பனான கழுதையை இரை தேடுவதற்கு அழைத்துச் செல்வதற்காக தன் இருப்பிடத்தை விட்டு கழுதை இருக்குமிடம் நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

சிறிது தூரம் சென்றதும், அந்தப் பக்கமாக சென்ற சிங்கத்தைக் கண்டு நடுங்கியது. எப்படியாவது உயிர்தப்ப வழியுண்டா என யோசித்தது.

ஒரு வழி நரிக்குப் புலப்பட்டது. அதாவது, தன் நண்பன் கழுதையைக் காட்டிக் கொடுத்து விட்டு, தான் தப்பித்துக் கொள்வது என்பது தான் அந்த வழி.

நரி உடனே சிங்கத்தை நோக்கி, மன்னாதி மன்னா!! அற்பப் பிராணியாகிய என்னைக் கடித்துத் தின்பதால் உங்கள் பசி சற்றும் அடங்கப் போவதில்லை. உங்களுக்கு நான் மாற்று ஏற்பாடு ஒன்றைச் செய்ய முடியும்.

என் நண்பனான , கொழுத்த கழுதை ஒன்று இருக்கிறது. அதை நீங்கள் சிரமமில்லாமல் பிடித்துக் கொள்வதற்கு ஓர் ஏற்பாட்டைச் செய்கிறேன். அந்தக் கழுதை, இரண்டு மூன்று நாட்களுக்கு உங்கள் உணவுக்கு ஆகும்! என்று கூறிற்று.

அந்த ஏற்பாட்டுக்கு சிங்கம் ஒப்புக் கொண்டது. நரி சிங்கத்தை ஓரிடத்தில் மறைவாக இருக்குமாறு கூறிவிட்டு கழுதையின் இருப்பிடத் திற்குச் சென்றது.

நண்பனே! இரை தேடச் செல்லலாமா? என, கழுதையை அழைத்துக் கொண்டு சிங்கம் மறைந்திருந்த இடத்திற்கு வந்தது.

கழுதையை, சிங்கம் மறைந்திருக்கும் இடத்திற்கு அருகாமையில் கொண்டு வந்து நிறுத்தியது நரி. சிங்கம், கழுதையின் மீது பாய்ந்து அதைக் கொன்றது. பிறகு சிங்கம், நரியின் மீதும் பாய்ந்து பிடித்துக் கொண்டது.

நரி பதறிப்போய், மகாராஜா! எனக்குப் பதிலாகத் தானே கழுதையைக் காண்பிக்க வந்தேன். இப்போது என்னையே கொல்ல வந்து விட்டீர்களே! என்று நரி நடுக்கத்துடன் கேட்டது.

நெருக்கமான நண்பனையே காட்டிக் கொடுக்கத் தயங்காத உன்னை நம்ப முடியாது. நாளை நீ உயிர் தப்புவதற்காக பலம் வாய்ந்த ஒரு விலங்கிடம் என்னைக் காட்டிக் கொடுக்க மாட்டாய் என்பது என்ன நிச்சயம்.

ஆகவே,உன்னை உயிருடன் விட்டு வைக்கக்கூடாது, என்று கூறிக் கொண்டே சிங்கம்நரியையும் கொன்று வீழ்த்தியது.

இதற்குத்தான் கெட்ட நண்பர்களுடன் சகவாசம் வைத்துக் கொள்ளக் கூடாது. அவர்களால் உங்களுக்கு தீமை தான் ஏற்படும்.

## சிரித்த முகம் வேணும்!

இந்த பஸ்ல எத்தனை வருஷமா நீங்க கண்டக்டரா இருக்கீங்க?

அஞ்சு வருஷமா இருக்கேங்க!

நானும் பலகாலமா இந்த பஸ்ல பயணம் பண்ணிக்கிட்டிருக்கேன். எவ்ளோ நெருக்கடியான நேரங்களில் கூட பதட்டப்படாம, சிரிச்ச முகத்தோட பயணிகள் கிட்ட நடந்துக்கிற உங்கள மாதிரி கண்டக்டரை பார்த்ததே இல்லை.

தொழில்ல எவ்வளவு டென்ஷன் இருந்தாலும், மனசைலேசா வச்சிக்கணும்சார். அமெரிக்காவுல உள்ள நியூரோசைக்யட்ரிக் நிபுணர்கள் என்ன சொல்றாங்க தெரியுமா?

என்ன சார் சொல்றாங்க?

மனுஷன் புன்னகைக்கும் போது, சிரிக்கும் போது, மகிழ்ச்சிகரமா இருக்கும் போது உடம்புல ஒருவித அலைகளை உண்டாக்கி, நியூரோ பெப்டைடுகளை உண்டாக்குமாம். இது உடம்புல நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். இப்படிப்பட்டவங்க தான் அதிக நாள் ஆரோக்கியமா வாழுறாங்களாம். அதுமட்டுமல்ல...பொறாமை, ஆசை, கோபம் எல்லாத்தையும் கட்டுப்படுத்தினா, ஆயுள் இன்னும் கூடும்னு ஆய்வுகள் சொல்லுது. உயிர் போற நேரத்துல கூட பதட்டப்படக் கூடாது சார்.

அடேங்கப்பா... இவ்ளோ தெரிஞ்சி வச்சிருக்கறதால தான் நீங்க எப்பவும் பதட்டப்படாம சிரிச்ச முகத்தோட வேலை செய்யறீங்க போல!

ஆமாங்க!

ஆனா உங்க கிட்ட இருக்குற இந்த நிதானம் உங்க டிரைவர் கிட்ட இல்லைன்னு நினைக்கிறேன்"

ஏன் அப்படி சொல்றீங்க?

இப்ப இந்த பஸ் எப்படி போய்க்கிட்டு இருக்குன்னு பாருங்களேன். தாறுமாறா தறிகெட்டு ஓடுற மாதிரி தெரியுது. நீங்களாவது முன் பக்கம் போய் பிரேக்-கிரேக் கழண்டு விழுந்துடுச்சான்னு பாத்துட்டு வாங்களேன், ப்ளீஸ்!

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி அங்கே போய் பாத்துட்டு வந்து தான் உங்ககிட்ட பேசிக்கிட்டிருக்கேன். வர்ற வழியில தான் எங்கயோ விழுந்திருக்கணும்னு நினைக்கி றேன்! எது...பிரேக்கா?"

இல்ல... டிரைவர்!

பயணி?

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 373

Search for people, places and things Nagendram Home

இராசரத்தினம்றஜி றஜி




சங்கர் ஜில்லா




அழகோன் கௌத்தம்



ராகுலன் பாலா




நிஷா வில்வா




கியாஸ் மொகமட்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையாளராக இருந்தும் வேதனையில் வாடும் பீற்றர்சன்



திறமையான வீரர்களை தேடி பெயரும் புகழும் தானாகவே வரும்.

அவ் வீரர் தனது திறமை தொடர் பில் அகங்காரமோ ஆணவமோ கொண்டிருக்கக்கூடாது.

அவ்வாறு அவர் தனது திறமை மீது கொண்ட கர்வத்தினால் ஏனை யோரினை மதிக்கா மல் செயற்பட்டால் அவருக்கான வாய்ப் பினை ஏனையோர் தட்டிப் பறித்துச் சென்று விடுவார்கள்.

எந்த இடத்தில் அவர் தனது திற மையைக் காட்டி மெய்சிலிர்த்தாரோ அந்த இடத்திலேயே அவருக்கான அங்கீகாரம் இல்லாமல் போய் விடும் என்பது நிச்சயமான உண்மை.

திறமையான வீரராக இருந்தா லும் ஏனையோரினை மதிக்காமல் செயற்பட்டதன் காரணமாக இங்கிலா ந்து அணியிலிருந்து ஒதுக்கப்பட்டி ருப்பவர் தான் இங்கிலாந்தின் நட்சத் திரமாக திகழ்ந்த கெவின் பீற்றர்சன்.

இந்தியாவின் ஐ.பி.எல். போட் டிகள் தற்போது பரபரப்பாக நடை பெற்றுக் கொண்டிருந்தாலும் கெவின் பீற்றர்சனின் பெயர்தான் தற்பொழுது சர்வதேச கிரிக்கெட்டில் பரவலாக பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

**யார் இந்த பீற்றர்சன்?**

ஒரு காலத்தில் சர்வதேச கிரிக்கெட்டில் அனைத்து அணிகளுக்கும் சிம்ம சொற்பணமாக விளங்கிய இங் கிலாந்தின் நட்சத்திரம் தான் கெவின் பீற்றர்சன். தென்னாபிரிக்காவை பிறப்பிடமாக கொண்ட இவர் தென்னா பிரிக்க தேசிய கிரிக்கெட் அணியில் இடம் கிடைக்காததையொட்டி இங்கிலாந்துக்கு இடம் பெயர்ந்தார். இங்கிலாந்தில் தனது திறமையை நிரூபித்ததன் மூலம் இங்கிலாந்து தேசிய கிரிக்கெட் அணி க்கு தெரிவானார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான அஷஸ் தொடரில் இங்கிலாந்து அணி சார்பில் கெவின் பீற்றர்சன் சதங்களை குவிக்கத் தொடங்கி யதன் மூலம் இங்கிலாந்து அணி யில் தனக்கென ஒரு நிரந்தர இடத்தினை பிடித்துக் கொண் டார்.

அதேவேளை சர்வதேச கிரி க்கெட்டிலும் தனது வருகையை அனைத்து அணிகளுக்கும் தெரியப்படுத்தினார்.

உலகில் உள்ள அனைத்து கிரிக்கெட் அணிக்கெதிராக வும் சதங்கள் குவித்த பீற் றர்சன் நட்சத்திர கிரிக்கெட் வீரராகவும் முன்னணி கிரிக்கெட் வீரராகவும் உருவெடுத்தார்.

இவர் அடித்த சதங்கள் போலவே இவருக்கு புகழும் பாராட்டும் குவியத் தொடங்கின. சாதனை களும் புகழும் அளவுக்கு மீறி கிடை த்தால் ஒருவருக்கு கர்வம் தலைக் கேறும் என்பதற்கு பீற்றர் சனை சிறந்த உதாரண மாக காட்ட முடியும்.

தனது திறமை மீது கொண்ட கர்வம் காரண மாக தனது அணியின் சக வீரர்கள் மற்றும் நிர்வாகத்துடனும் பீற்றர்சன் மோதல் போக் கினை கடைப் பிடித்தார்.

> **பீற்றர்சன் திறமை மீது நம்பிக்கை கொண்ட இங்கி லாந்து கிரிக்கெட் சபை அவர் மீதான நம்பிக்கையை இழந்ததால் இன்று வெளியே நிற்கின்றார்.**

பீற்றர்சனின் இந்த போக்கே இங்கிலாந்து தேசிய அணியிலிருந்து இவரை நீக்குவதற்கு காரணமாக அமை ந்து விட்டது.

கடந்த ஆண்டு பெப்ரவரிமாதம் இங் கிலாந்து தேசிய அணியி லிருந்து நீக்கப் பட்ட பீற்றர்சன் இன்றுவரை இங்கிலாந்து அணிக்கு திரும்புவதற்காக பல் வேறு முயற்சிகளை எடுத்தார்.

இந்தியாவின் ஐ.பி.எல். போட் டியை நிராகரித்து இங்கிலாந்து கவு ண்டிக் போட்டியில் விளையாட தீர்மானித்தார். சுர்ரே அணிக்காக விளை யாடிய இவர் அங்கும் முச் சதம் அடித்து அசத்தினார்.

தனது திறமையை இங்கிலாந்து அணிக்கு நிரூபித்ததன் மூலம் இங் கிலாந்து அணிக்கு தேர்வு செய்யப்படுவேன் என்று பீற்றர்சன் நம்பி இருந்தார். எனினும் இங்கிலாந்து கிரிக்கெட்டின் புதிய இயக்குநரும் முன்னாள் கப்டனு மாகிய அண்ட்ரூ ஸ்ட்ராஸ், கெவின் பீற்றர்சன் விவகாரத்தில் நம்பிக்கை ஏற்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் முதலில் ஒன்றைக் கூறிவிடுகிறேன். அவ ரது திறமைகள் குறித்து எனக்கு எந்தவிதமான சந் தேகமும் இல்லை. அவரது சாதனைகள் பேசும் அவர் அது குறித்து பெருமையுடன் இருக்கலாம். ஆனால் மாதக் கணக்கில், வருடக் கணக்கில் அவர் மீதான நம்பிக்கை போய்விட்டது.

எனக்கும் அவருக்கும் இடையே நம்பிக்கை என்ற ஒரு பெரிய விடயம் உள்ளது. இதனால் குறு கிய கால பலன்களுக்காக அவரை அணியில் சேர்ப்பது கடினம் என்று முடிவுக்கு வந்தோம். அவர் அணியிலிருந்து தடை செய்யப்பட்டவர் அல்லர். அவரது திறமைகள் பற்றியது அல்ல இது. நம்பிக்கை தொடர்பான இந்த விவகாரத்தை சில நாட்களில் மீண்டும் மறுகட்டு மானம் செய்யவிய லாகாது. எந்த ஒரு அமைப்பிலும் நம்பிக்கை என்பது மிக முக்கியமானது. நம்பிக்கை இல்லை என்ற உண்மையி லிருந்து நாம் ஓடி ஒளி ந்து விட முடி யாது என்றார். பீற்றர்சன் திறமை மீது நம்பிக்கை கொண்ட இங்கிலாந்து கிரிக்கெட் சபை அவர் மீதான நம்பிக்கையை இழந்த தால் இன்று பீற்றர்சன் தேசிய அணியில் இடம் கிடைக்காமல் வெளியே நிற்கின்றார்.

க.மதீசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org